
சோழர் கலைக் கோயில்கள் - 1

# திருச்சென்னம் பூண்டி

## சடையார் கோயில்

### கோயில் ஆய்வு



ஆசிரியர்கள்

**முனைவர் சீ. வசந்தி**

**முனைவர் கோ. சசிகலா**

தொல்லியலாளர்கள்

# திருச்செந்நம் பூண்டி

## சடையார் கோயில்

### கோயில் ஆய்வு

# நூல் விவரக்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருச்சென்னம் பூண்டி<br>சடையார் கோயில்<br>கோயில் ஆய்வு |
| முதற்பதிப்பு | : | 2016<br>கும்பகோணம் மகாமகத்தை முன்னிட்டு<br>வெளியிடப்பட்டது |
| ஆசிரியர்கள் | : | முனைவர். **சீ. வசந்தி**<br>முனைவர். **கோ. சசிகலா** |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | தொல்லியல் / கோயில்வரலாறு |
| பக்கங்கள் | : | 112 |
| நூலின் அளவு | : | Dy 1 x 8 |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ இண்டர் நேஷனல் |
| பதிப்பகம் | : | Heritage Treasure<br>(Reg.No. 402/2015)<br>www.heritagetreasure.in<br>Contact@heritagetreasure.in |
| விலை | : | **65/-** |

# வாழ்த்துரை

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று முன்னோர்கள் கருதினார்கள். சோழர் காலத்தில் கோயில்கள் சமூக இயக்கத்தின் உயிர்மூச்சாகத் திகழ்ந்தன. படமாடும் கோயில் பரமர்க்கொன்று ஈந்தாலும் நடமாடும் கோயில் நம்பர்க்கு ஆகும் நிலை உருவாகி புரட்சி ஏற்பட்ட காலம் சோழர் காலம். கோயில் பொருளாதாரம் சமூகத்தை முழுமையாக ஆட்கொண்ட காலம். சமூகத்தில் கலந்து நின்ற பல்வேறு பிரிவினர்களும் கோயிலை மையமாகக் கொண்டே வாழ்ந்தனர். கோயில் நிலைப்பேற்றிற்கும் பலவகைகளில் மக்கள் உதவியாக நின்றனர். மக்கள் கோயிலோடு ஒன்றி நின்றனர்.

நூலாசிரியர்கள் முனைவர் சீ.வசந்தி அவர்களும், முனைவர் கோ.சசிகலா அவர்களும் தொல்லியல் ஆய்வாளர்கள் மட்டுமல்லர். கோயிற்கலை ஆர்வலர்களும் கூட. முனைவர் சீ.வசந்தி அவர்கள் தமிழ்நாட்டின் பல கோயில்களுக்கும் நேரடியாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு பல கட்டுரைகளை எழுதியுள்ளார். பல கோயில் ஆய்வு நூல்களையும் பதிப்பித்தவர். கோயில் ஆய்வில் நன்கு தேர்ச்சி பெற்றவர். முனைவர் கோ.சசிகலா அவர்கள் சிவன்பால் நேயம் வைத்தவர். கோயில் ஆய்வுகள் புதுமையான முறையில் அமைய வேண்டும் என்ற கொள்கை உடையவர். தேவாரத்தில் மறைந்து கிடக்கும் சமூக வரலாற்றினைக் கண்டறிய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அவ்வகையில்

நூலாசிரியர்கள் இருவரின் கைவண்ணத்தில் வெளிவரவிருக்கும் சடையார் கோயில் பற்றிய இவ்வாய்வு நூல் வருங்கால கோயில் ஆய்வு மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற கோயில் ஆய்வு நூல்கள் பலவற்றை ஆசிரியர்கள் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு வழங்க வேண்டும்.

வாழ்த்துகளுடன்

காட்பாடி

20, ஜனவரி, 2016

**ர.பூங்குன்றன்**

மேனாள் உதவி இயக்குநர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.

# உள்ளடக்கம்


| வ. எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 1. | ஊரினைச் சுற்றி | 1 |
| 2. | திருக்கோயில்களும் திருவிளக்குகளும் | 17 |
| 3. | தேவாரத்தில் திருக்கடைமுடி | 24 |
| 4. | அரசியல் பின்னணி | 28 |
| 5. | கல்வெட்டுச் செய்திகள் | 37 |
| 6. | கல்வெட்டில் அரசியல் | 42 |
| 7. | கல்வெட்டு சொல்லும் சமூகநிலை | 49 |
| 8. | பொருளாதார நிலை | 58 |
| 9. | கோயில் அமைப்பும் தோற்றமும் | 63 |
| 10. | கட்டடக்கலை | 66 |
| 11. | சிற்பக்கலை | 76 |

# ஊரினைச் சுற்றி.....

## 1.1. அமைவிடம்

திருக்கடைமுடி தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியுடன் இணைந்த கோயிலடி என்ற சிற்றூரின் அருகில் அமைந்துள்ள திருச்சென்னம்பூண்டி என்ற கிராமத்தில் அமைந்துள்ள திருத்தலமாகும். இவ்வூர் காவிரிக்கு வடகரையில் அமைந்துள்ளது. திருக்காட்டுப்பள்ளியிலிருந்து கல்லணை செல்லும் சாலையில் ஏறத்தாழ 8 கி.மீ. தொலைவில் கோயிலடி உள்ளது. இக்கோயிலடியில் இருந்து வடக்கே 1 கி.மீ. தூரம் சென்று கொள்ளிடக்கரை மீது ஏறி கிழக்கு நோக்கி 1 கி.மீ. தூரம் சென்றால் திருக்கடைமுடிநாதர் திருத்தலத்தை அடையலாம்.

திருக்கடைமுடி என்னும் ஊரில் அமைந்துள்ள இத்திருத்தலம் வடகாவிரி என்று அழைக்கப்படும் கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள முற்காலச் சோழர்களின் கற்றளியாகும். இக்கோயில் கல்வெட்டுகள் தென்கரை இடையாற்று நாட்டில் இத்தலம் அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றன. தேவாரப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் இத்தலத்தை "வளநகர் கடைமுடி" என்று குறிப்பிடுகிறார். இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் "திருக்கடைமுடி" என்றும், "திருச்சடைமுடி" என்றும் குறிப்பிடப் படுகின்றன. திருச்சடைமுடி என்று கல்வெட்டுகள் பயின்று வருவதால் இக்கோயில் தற்போது சடையார் கோயில் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இந்தியக் கல்வெட்டுத்துறை ஆய்வில் 1901-ஆம் ஆண்டு கல்வெட்டு அறிக்கை திருக்கடைமுடியைக் குறிப்பிடுகிறது. கல்வெட்டு ஆண்டு அறிக்கை எண் 282 முதல் 303 வரையிலான 28 கல்வெட்டுகள் தெளிவாகப் படியெடுக்கப்பட்டு, தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி VII-இல் வெளியிடப்பட்டுள்ளன. முதலாம் பராந்தகன் காலத்தைச் சேர்ந்த 18 கல்வெட்டுகள் தெளிவாகக் கிடைப்பதை உறுதிப்படுத்துகின்றன.

மேலும் பராந்தகனின் இக்கல்வெட்டுகளினால் செங்கல்தளியாய் இருந்த இக்கோயிலைக் கற்றளியாக்கியவன் பராந்தகனே என்ற முடிவிற்கும் வரலாம். தஞ்சை மாவட்டத்தில் உள்ள பராந்தகனின் கோயில்களான அல்லூர், திருவாவடுதுறை, திருக்களாவூர், புள்ளமங்கை, திருக்களித்தட்டை ஆகியனவற்றில் திருச்சென்னம்பூண்டி திருக்கோயிலும் சிறப்பிடத்திற்கு உரியதாகும்.

## 1.2. தஞ்சாவூர்

தஞ்சாக்கூர் என்பதே தஞ்சாவூரின் பழைய பெயராகும். தஞ்சாவூர் நன்செய் நிலங்கள் நிறைந்த வளமிக்க பகுதியாகும். நன்செய் என்பதன் மருவலான நஞ்சை என்பதுவும் பின்னாளில் தஞ்சை என ஆகியிருக்கலாம். "தண்செய்" என்பது தஞ்சை என்றும், தண் செய்யூர் என்பது தஞ்சாவூர் என்றும் வழங்கியிருக்கக்கூடும். குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த ஊர் என்பதே இதன் பொருளாகும். வராக மான்மியம் எனும் புராணம், சமீ வனப்பகுதியிலிருந்த தஞ்சாசுரன் என்பவனைத் தஞ்சபுரீஸ்வரர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆனந்தவல்லி என்னும் தேவி சம்ஹரித்ததாகவும், அந்த சமீவனமே தஞ்சாசுரன் பெயரால் தஞ்சாபுரியாயிற்று என்றும் கூறுகின்றது. சோழர் தலைநகரமான இப்பகுதியை மேலத்தஞ்சை என்றும், இந்நாளைய திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டத்திலுள்ள தஞ்சாவூர் என்னும் கிராமத்தினைக் கீழத்தஞ்சை என்றும் கூறுவர்.

தஞ்சையை ஆண்ட முத்தரையர் அரசனான சுவரன்மாறன் எனும் பெரும்பிடுகு முத்தரையன் நியமம் என்ற ஊரில் காளாபிடாரிக்கு எடுப்பித்த கோயில் தூண்களில் உள்ள கல்வெட்டு தஞ்சை முத்தரையர்களின் தலைநகரம் என்பதைக் கூறுவதாக உள்ளது.

காளாபிடாரி கோயிலின் முதல் தூணில் கோட்டாற்று இளம்பெருமானார் என்னும் புலவர் பாடிய பாடல் ஒன்று உள்ளது.

> "நிற்கின்ற தண்பனை தோன்றுந் தஞ்சைத்திறம் பாடிநின்றார்
> விற்கின்ற வீரர்கள் ஊர்கின்ற இப்பிணக் குன்றுகள்மேல்
> நெற்குன்ற யானை ................."

யானையின் உயரம் அளவுக்கு நெற்குன்றம் தஞ்சையில் நிறைந்திருந்த செழுமையை உணரமுடிகிறது. தஞ்சாவூர்

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எனப் பண்டு முதல் இன்று வரை விளங்குகிறது.

நான்காவது தூணில் ஆசாரியர் அநிருத்தர் பாடிய பாடல் ஒன்றில்,

"மண்மீது கண்டான்தஞ் சைச்செம் புலநாட்டு வெண்கோடல்
விண்டபோது கொண்டாயர் மலையப் புதுமணல் மீதுசெந்தீத்
தண்டுகண் டாலன்ன கோவங்களூர்கின்ற தாழ்புறவே"

என்றுள்ளது. சுவரன்மாறனுடைய தஞ்சைநாடு செம்புலநாடு என்பதையும், அது தாழ்ந்த முல்லை நிலப்பகுதி என்பதையும் அறியமுடிகிறது. திருவாலங்காட்டுச் செப்பேடுகள் சோழர்கள் தஞ்சையை வெற்றி கண்டபின் நிசும்பசூதனிக்குக் கோயில் எடுப்பித்ததைப்பற்றிக் கூறுகிறது. தஞ்சாவூர் சோழர்களின் மூன்றாவது தலைநகரமாகும். உறையூர், பழையாறை இவற்றினையடுத்து கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே விசயாலயச் சோழனின் எழுச்சிக்குப் பின்பே தஞ்சை சோழர்களின் தலைநகரமாயிற்று. "சோழவளநாடு சோறுடைத்து" என்பர்.

"இஞ்சி சூழ் தஞ்சை" என்று கருவூர்த் தேவரால் பாடப்பட்டுள்ளது. இஞ்சி என்பது கோட்டை மதிலைக் குறிக்கும். வலிய அரண்களைப் பெற்று விளங்கியது தஞ்சை மாநகரம் என்பதை இதனால் அறியக்கூடும்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டினரான திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் தஞ்சை மதில்கள் சூழ்ந்ததென்றும், மாமணிக்கோயிலை உடைய ஊரென்றும் வருணிக்கிறார்:

"வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான்கண்டு கொண்டேன" பா.எண்.1.1.6

இயற்கை வளமிக்க தஞ்சை காவிரியாற்றின் நீர்வளத்தைப் பெறுகின்றது.

## 1.3 திருவையாறு

காவிரியின் வடகரையில் திருவையாறு அமைந்துள்ளது. காவிரி, வெண்ணாறு, வெட்டாறு, வடவாறு, குடமுருட்டியாறு என

ஐந்தாறுகள் செல்லுமிடத்தில் அமைந்துள்ளதால் இவ்வூர் ஐயாறு என்றழைக்கப்படுகிறது. திருவையாறு தேவார மூவரால் பாடல்பெற்ற திருத்தலமாகும். இத்தலம் தென்கயிலாயம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு வீற்றிருக்கும் ஐயாறப்பர் என்ற பஞ்சநதீஸ்வரர் இறைவரின் ஆலயக் குளமானது அப்பரோடு நெருங்கிய தொடர்புடையதாகும். சப்தவிடங்க தலங்களின் தலைமையிடமாகத் திருவையாறு விளங்குகிறது. திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், தில்லைஸ்தானம் திருவையாறு என்பன அவ்வேழுத் தலங்களாகும். முதலாம் இராஜராஜ சோழனின் பட்டத்தரசியார் ஒலோகமாதேவியாரால் அமைக்கப்பட்ட வடகைலாயம் சிறப்பிற்குரியது. தென்கைலாயம் முதலாம் இராஜேந்திர சோழனின் தேவியால் திருப்பணி செய்யப்பட்டுப் பல நிவந்தங்களைப் பெற்றுள்ளது.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறி
மயங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்றருள்
செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்று அஞ்சிச் சிலமந்தி
அலமந்து மரமேறி முகில் பார்க்கும்
திருவையாறே"

என்று திருவையாற்றின் இயற்கை எழிலைச் சம்பந்தர் அழகாக வருணிக்கிறார்.

"கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்ப்பொறி அரவும் வைத்தார்
திங்களைத் திகழவைத்தார் திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார் ஐயன்ஐ யாறனாரே."

என்று திருவையாற்று இறைவன் ஐயாறனாரைப் பாடுகிறார் அப்பர் பெருமான். அப்பர் திருக்கயிலாயக் காட்சி காணச் சென்று இறைவனின் சொல்லுக்கிணங்க, அங்குள்ள பொய்கையில் மூழ்கி திருவையாற்றுத் திருத்தலத்துக் குளத்தில் எழுந்தார். அப்பருக்குத் திருவையாற்றில் கைலாயக்காட்சி கிடைத்தது.

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதற் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்"

இல்லற வாழ்வில் ஈடுபடாத அப்பர் அவ்வுணர்வைத் திருவையாற்றில் திகழ்ந்து மகிழ்ந்திருந்த உயிரின இணைகளைக் கண்டு தான் கண்டறியாததைக் கண்டதாகப் பாடுகிறார். கயிலாயத்தில் இறைவனும் இறைவியுமாக உள்ள ஆனந்த நிலையினை இக்காட்சிகள் தமக்கு உணர்த்துவதாக ஆனந்திக்கிறார். இங்ஙனம் நீர்வளத்தினையும், நிலவளத்தினையும் பெற்றுள்ளதாலேயே இத்திருவையாற்றில் உயிரினக்கூட்டமும் மிகுந்துள்ளது என்பதை அறியலாம்.

## 1.4. திருக்காட்டுப்பள்ளி

தஞ்சை மாவட்டத்தின் திருவையாறு வட்டத்தில் மேலைத்திருக்காட்டுப்பள்ளி என்று தற்போது வழங்கப்படும் இது ஒரு பேரூராகும். தஞ்சாவூரிலிருந்து கண்டியூர், திருவையாறு வழியாக கல்லணைக்குச் செல்லும் வழியில் மேலைத்திருக்காட்டுப்பள்ளி அமைந்துள்ளது. தஞ்சாவூரிலிருந்து திருச்சி செல்லும் வழியில் தொடர்வண்டி பாதையில் பூதலூர் என்னும் நிலையத்திலிருந்து வடக்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் இப்பேரூர் உள்ளது.

திருவையாறில் சப்தவிடங்க தலங்கள் விழா நடைபெறுவது போன்றே இத்திருக்காட்டுப்பள்ளியை மையமாகக் கொண்டு சப்தஸ்தான விழா முன்பு நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. இவ்விழாவில் தொடர்புடைய ஏழூர்கள் இப்பேரூராட்சியினைச் சுற்றிலும் அமைந்துள்ளதால் திருக்காட்டுப்பள்ளிக்கு ஏழூர் என்ற

மற்றொரு பெயரும் உண்டு. நியமம், கோயிலடி எனப்படும் திருப்புறத்துறை திருப்பேர், திருச்சென்னம்பூண்டி, திருக்கானூர், வானவராங்குடி (புதைகிரி), அப்பரால் சடைமுடி எனக் குறிப்பிடப்படும் திருச்சடைவளந்தை, செந்தலை ஆகியன அவ்வேழூர்களாகும்.

இத்திருக்காட்டுப்பள்ளி, பாண்டிகுலாசனி வளநாட்டில் ஆர்க்காட்டுக் கூற்றத்தில் உள்ள ஊர் என இக்கோயில் கல்வெட்டுக் கூறுகின்றது. திருக்காட்டுப்பள்ளித் திருத்தலம் தேவாரப் பாடல் பெற்றது. அப்பரும், சம்பந்தரும் இத்தலத்தினைப் பாடியுள்ளனர். புகழ்பெற்ற இத்திருக்கோவில் சோழ, பாண்டிய, விசயநகர மன்னர்களால் திருப்பணி செய்விக்கப்பட்டுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் அழலாடியப்பர், தீயாடியப்பர், வன்னி வனநாதர், அக்னீஸ்வரர், திருக்காட்டுப்பள்ளி உடையார் எனப் பல பெயர்களால் சுட்டப்படுகிறார்.

மேலும் இங்கு எழுந்தருளியுள்ள அழகமர் மங்கை (சௌந்தரநாயகி) கோயிலைச் செம்பியன் பல்லவராயன் என்பவன் சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியன் காலத்தில் கட்டி, கி.பி. 1223-இல் குடமுழுக்குச் செய்துள்ளான் என்று இங்குள்ள "திருக்காட்டுப்பள்ளி உடைய நாயனார்க்குத் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார் பிரதிஷ்டை பண்ணி" என்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம். திருஞானசம்பந்தர் இத்தலப் பதிகத்தில் இங்குள்ள இறைவியை அழகமர்மங்கை எனக் குறிப்பிடுகிறார்.

"நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில்சூழ்ந்த காட்டுப்பள்ளி
அருத்தனார் அழகமர் மங்கையோர் பாகமாப்
பொருத்தனார் கழலிணை போற்றுதல் பொருளதே
மேலும் இவ்வூர் காவிரியின் மணல் மேடிட்ட பகுதி என்பதை,
வரையுலாம் சந்தொடு வந்திழி காவிரிக்
கரையுலாம் இடு மணல் சூழ்ந்த காட்டுப்பள்ளி" என்கிறார்.

மேகங்கள் தவழும் உயர்ந்த சோலைகள் சூழ்ந்தது திருக்காட்டுப்பள்ளி என்பதனைக் "காரு மன்னும் பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி" என்கிறார்.

அப்பர் பள்ளி எனச் சொல்லுதலே உயர்வைத் தரும் என இறைவன் எழுந்தருளியுள்ள பல பள்ளிகளுள் காட்டுப்பள்ளியையும் குறிப்பிடுகின்றார்.

"இன்றுளார் நாளை யில்லை யெனும் பொருள்
ஒன்றும் ஓரா துழிதரும் ஊமர்காள்
அன்று வானவர்க் காக விடமுண்ட
கண்டனார் காட்டுப்பள்ளிகண் டுய்ம்மினே"

திருக்காட்டுப்பள்ளியின் தீயாடியப்பரைக் கண்டு உய்ய அழைக்கிறார் அப்பர் பெருமான்.

## 1.5. திருநியமம்

நியமம் காவிரியின் தென்கரையில் திருக்காட்டுப்பள்ளிக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. முத்தரையர்கள் காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய வணிக நகரமாகும். நிகமம் என்பது வணிகக்குழுவினரைக் குறிக்கும். நிகமம் என்பதே மருவி நியமம் என்றாகித் தற்போது நேமம் என்றழைக்கப்படுகிறது. நியமம் பேரூராகும். இங்கு முதலாம் இராஜராஜன் காலத்தில் 1. ஆயிரத்தளி 2. அரிகுலகேசரி ஈசுவரம் 3. நிருபகேசரி ஈசுவரம் 4. சந்திர மல்லீசுவரம் 5. ஆயிரத்தளி மல்லீசுவரம் 6. அட்டுப்பள்ளி நியம திருவீரானேசுவரம் எனப் பல கோயில்கள் இருந்ததைத் தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. நியமக் கோயில்களில் இருந்த பல நடனமாதர்களைத் தஞ்சை பெரிய கோயிலுக்கு அழைத்துவரச் செய்த செய்தியும் தஞ்சைத் தளிப் பெண்டுகளின் கல்வெட்டுகளில் இருந்து அறியலாம்.

பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன் நியமமங்கலம் என்னுமிடத்தில் கட்டிய பிடாரி கோயில் முத்தரையர்களின் வரலாற்றுச் சிறப்புகளை எடுத்துக்கூறும் கருப்பு சலவைக்கல் தூண்கல்வெட்டுக்களை உடையது. மாலிக்காபூர் படையெடுப்பின் போது கி.பி. (1311-1371) நியமத்துக் கோயில்கள் அழிக்கப்பட்டபோது, இங்கிருந்த பிடாரி கோயில் தூண்கள் விசயநகர மன்னர்கள் காலத்தில் செந்தலைக்கு கொண்டு வரப்பெற்று அங்குக் கட்டப்பெற்ற மகாமண்டபங்களுக்குத் தூண்களாக அமைக்கப்பட்டன.

இப்போது நியமத்தில் ஐராவதேஸ்வரர் கோயில் மட்டுமே உள்ளது. இங்குள்ள இறைவனைத் திருவீரானேஸ்வரர் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. திரு - வீர -ஆனை - ஈஸ்வரர் என்று பிரித்துப் பொருள் கொள்ளலாம். யானையை அழித்த வீரன் அல்லது யானைவீரன் என்ற பொருளில் சிவபெருமானின் மூர்த்தங்களுள் ஒன்றான கஜசம்ஹாரமூர்த்திக்கு எடுப்பிக்கப்பட்டக் கோயிலாக இதனைக் கருத இடமுண்டு. இக்கோயிலைப்பற்றி வடமொழியில் தலபுராணம் உள்ளது.

திருவீரானேஸ்வரர் கோயில் தற்போது ஐராவதேஸ்வரர் கோயில் என்றே அழைக்கப்படுகிறது. இக்கோயில் முதலாம் பராந்தகச்சோழனால் கற்றளியாக்கப்பட்டு, திருப்பணி பெற்றிருக்கலாம் எனக்கருத இடமுண்டு. ஏனெனில் பராந்தகனின் கலைப்பாணியான அதிட்டானத்தில் உள்ள இராமாயணப் புடைப்புச் சிற்பங்கள், விமானத்தின் நான்கு மூலைகளிலும் உள்ள கல்நந்திகள் மற்றும் திருமால் இலக்குமி சிற்பங்கள் முதலியன இக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தலம் தேவார வைப்புத்தலங்களுள் ஒன்று. அதாவது பாடல் பெறாமல் அல்லது கிடைக்கப் பெறாமல் தேவார மூவரால் வணங்கப்பெற்ற தலம் ஆகும். திருநெடுங்களம் எனும் தலத்திலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்கு வரும் வழியில் திருஞானசம்பந்தர் நியமத்திற்கு வந்து வணங்கிய செய்தியைப் பெரியபுராணத்தில் சேக்கிழார்,

"நெடுங்களத் தாதியை அன்பால் நின்பால்
நெஞ்சம் செலாவகை நேர்விலக்கும்
இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய் என்னும்
இன்னிசை மாலைகொண் டேத்தி ஏகி
அடும்பணிச் செஞ்சடை யார்பதிகள்
அணைந்து பணிந்து நியமம் போற்றிக்
கடுங்கை வரை உரித்தார் மகிழ்ந்த
காட்டுப்பள்ளிப்பதி கைதொழுதார்."

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

இக்கோயிலில் தைப்பூசவிழா பண்டு சிறப்பாகக் கொண்டாடப் பட்டுள்ளதென்பதை, "பாண்டிகுலாசனி வளநாட்டு கிளியூர் நாட்டு அரசங்குடி மழபாடி பொற்பாவை வழங்கிய பொன்" என்ற நியமக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இங்குள்ள மற்றொரு கல்வெட்டு மூன்றாம் நந்திவர்மனின் மனைவி அடிகள் கண்டன் மாறம்பாவையார் என்பவர் இக்கோயில் வழிபாட்டிற்காகவும், பிராமணர்கள், கோயிற் பணியாளர்கள் ஆகியோருக்கு உணவளிப்பதற்காகவும் நிதியளித்துள்ளார் என்பதைக் கூறுகின்றது.

மேலும் இங்குப் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன், முதலாம் ஆதித்தசோழன், முதலாம் பராந்தகன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் கல்வெட்டுகளும் உள்ளன. இரண்டாம் இராஜராஜன் காலத்துக் கல்வெட்டொன்று நியமத்தில் உள்ள எம்பெருமானார் கோயிலுக்கு ஆருத்திரா விழாவிற்கு நிவந்தம் வைக்கப்பெற்றதைக் கூறுகிறது.

கி.பி. 1019-இல் நியமத்தில் உள்ள முதலாம் இராஜேந்திரனின் ஏழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, பாண்டிகுலாசனி வளநாட்டில் உள்ள எயில் நாட்டில் தேவதானமாக விளங்கிய வடராய மங்கலம் என்னும் ஊரில் உள்ள ஆனைக்கார பெருமானார் கோயில் தேவகன்மிகள், அட்டுப்பள்ளி நியமத்தில் உள்ள திருவீரானேஸ்வரருக்கு இரண்டு மா நிலம் விற்ற செய்தியைக் குறிப்பிடுகின்றது.

இங்குக் குறிப்பிடப்படும் ஆனைக்கார பெருமானார் கோயில் என்பது இங்குள்ள கல்வெட்டில் இராசகேசரிபுரம் என்றும், வழக்கில் இராசகிரி என்றும் குறிப்பிடப்படும் இளங்காடு என்னும் ஊருக்குக் கிழக்கே சிறிது தொலைவில் உள்ள கஜாரண்யம் எனப்படும் அரங்கநாதபுரத்தில் உள்ள கஜாரண்யேஸ்வரம் என்ற கோயிலையே குறிப்பதாகும். கஜாரண்யேஸ்வரம் ஒரு மாடக்கோயிலாகும். காவிரியின் இருகரைகளிலும் கோச்செங்கட்சோழன் எடுப்பித்த எழுபத்திரண்டு மாடக் கோயில்களுள் இதுவும் ஒன்றெனப்படுகிறது.

நியமப்பகுதியில் காவிரியின் கரையோரத் தலங்களாக சோழர்களின் பரமவைரிகளாகப் புராணக்கதைகளில்

சித்திரிக்கப்படும் யானையை அழித்த சிவபெருமானின் பெயரில் இங்கு திருவீரானேஸ்வரம், கஜாரண்யேஸ்வரம் முதலிய கோயில்கள் அமைந்திருத்தலும், சோழர்கள் இவ்விடத்திலேயே முடிசூட்டிக் கொள்ளலும், வீராபிஷேகம் செய்து கொள்ளலும் வரலாற்று ஆய்விற்குரியதே.

நியமப்பகுதி சோழர்களுக்கு மிகவும் பிடித்தமானது. நியமத்தில் உள்ள ஆயிரத்தளி மண்டபத்தில் சோழர்கள் முடிசூடுவர். வெற்றிக்குப் பின்னர் வீராபிஷேகமும் செய்து கொள்வர். இதனை உறுதிசெய்வதாக நியமத்திற்குத் தெற்கில் உள்ள இராசகிரி என்று வழக்கில் கூறப்படும் இளங்காடு என்ற ஊரில் முதலாம் இராஜராஜ சோழனின் காந்தளூர்சாலைக் கலமறுத்த முதற்போரின் வெற்றிக்கு அடையாளமாக அவன் கட்டிய விஜயவிடங்கேஸ்வரர் கோயில் உள்ளது.

சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் இந்த ஆயிரத்தளி மண்டபத்திலே சோழநாட்டை வென்று வீராபிஷேகம் செய்து கொண்ட நிகழ்வினை,

"பாடரும் சிறப்பின் பருதி வான்தோய்
ஆடகப் புரிசை ஆயிரத் தளியில்
சோழ வளவன் அபிஷேக மண்டபத்து
வீரா பிஷேகம் செய்து புகழ்விரித்து"

என்று அவனுடைய மெய்க்கீர்த்திக் கூறுகிறது.

### 1.6. திருக்கானூர்

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில், கொள்ளிடத்தின் தென்கரையில் திருக்கானூர் அமைந்துள்ளது. திருக்காட்டுப்பள்ளிக்கு அருகே உள்ள விஷ்ணம்பேட்டை என்னும் ஊருக்கு வடக்கே உள்ள இத்திருத்தலம் திருக்காட்டுப்பள்ளியை மையமாகக் கொண்ட சப்தஸ்தான தலங்களுள் நான்காவதாகும்.

தேவாரப்பாடல் பெற்ற இத்தலத்தின் இறைவனைக் "கானூர் முளையன்" என்று அப்பர் தம் பாடலில் குறிப்பிடுகிறார். மேலும் இவ்வூர் "காந்தள் விம்மும் கானூர்" என்றும், "தேவார்

சோலைக் கானூர்" என்றும் சம்பந்தராலும், "சித்தர் பத்தர்கள் சேர்திருக்கானூர்" என்று நாவுக்கரசராலும் குறிப்பிடப்படுகின்றது.

இங்குள்ள கல்வெட்டு இத்தலத்தினைக் கரிகாலசோழீஸ்வரம் என்று குறிப்பிடுகின்றது. இத்தலமும் கரிக்குக் (யானை) காலனாக விளங்கிய கஜசம்ஹாரமூர்த்தியின் திருக்கோயிலாகும். கரியினைக் (யானையை) காலாகக் கொண்ட அதாவது யானையை வென்றதனால் அதனையே தன் காலுக்குக் கீழாகக் கொண்ட என்னும் பொருள் கொண்ட பெயர் கொண்ட கரிகாலசோழீஸ்வரம் என்ற பெயரே இச்செய்தியை நமக்குத் தெரிவிக்கின்றது.

மேலும் சங்ககாலச் சோழமன்னருள் தலைசிறந்தவனும், சோழர்களின் முன்னோனுமான காவிரிக்குக் கல்லணை கட்டுவித்த கரிகால்சோழனுக்குப் பெருமை சேர்க்கும் விதமாகக் காவிரியின் கரையிலேயே இக்கோயில் எடுக்கப்பட்டிருக்கலாம். இங்கிருந்து கல்லணை சுமார் 6 கி.மீ. தொலைவிலேயே உள்ளது என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

## 1.7. வானவராங்குடி [புதைகிரி]

திருக்காட்டுப்பள்ளி சப்தஸ்தானங்களுள் ஐந்தாவதான வானராங்குடி திருக்காட்டுப்பள்ளிக்கு வடகிழக்கே கூத்தூர் என்னும் ஊருக்கு வடக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில், கொள்ளிடத்தின் தென்கரையில் அமைந்துள்ளது. இத்தலத்திற்கு மேற்கேதான் திருக்கானூர் உள்ளது.

வானவதேவன் என்பவன் இவ்வூரை ஆண்டதாலும், வானவர்கள் இத்தலத்து இறைவனை வணங்கிப் பேறு பெற்றதாலும் இப்பெயர் பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது. இத்தலத்தின் இறைவன் நாகநாதசுவாமி, இறைவி நாகாம்பிகை. மண்மாரி பொழிந்து இக்கோயில் மணலுள் புதைந்ததால் புதைகிரி என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது.

பெரியபுராணத்தின் கூற்றுப்படி அப்பர் இத்தல இறைவனை வணங்கியுள்ளார். பழமையான பிடாரி கோயில் இவ்வூரில் உள்ளது. முதலாம் பராந்தகனின் திருப்பணிப் பெற்ற காவிரிக்கரைத்

திருத்தலங்களுள் இக்கோயிலும் ஒன்றாகும். அதற்கான எச்சங்கள் சிதிலமடைந்த இக்கோயிலில் காணக்கிடைக்கின்றன.

## 1.8. திருச்சடை வளந்தை

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து காவிரி வடகரையில் திருவையாறு செல்லும் சாலையில் சுமார் 8 கி.மீ. தொலைவில் சப்தஸ்தான ஆறாவது தலமான திருச்சடை வளந்தை அமைந்துள்ளது.

திருவளந்தீஸ்வரரும் புவனேஸ்வரியும் குடிகொண்ட இத்திருத்தலம் திருநாவுக்கரசரின் க்ஷேத்திரக்கோவையில் சடைமுடி எனக் குறிப்பிடப்படுகின்றது. விராலிமலைச் சித்தர் என்பவர் இவ்வூர்க் கோயிலை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் போது பழுது பார்த்ததாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## 1.9. திருச்சேந்தலை

திருக்காட்டுப்பள்ளியிலிருந்து கிழக்கே கண்டியூர் செல்லும் சாலையில் குடமுருட்டியாற்றின் தென்கரையில் சுமார் 5 கி.மீ. தொலைவில் செந்தலை அமைந்துள்ளது.

இங்குள்ள கல்வெட்டுகள் இவ்வூரினை 'சந்திரலேகை' எனக் குறிக்கின்றது. பாண்டிகுலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்தில் இது அமைந்திருந்தது.

செந்தலை கோயிலில் உள்ள முத்தரையரின் தூண் கல்வெட்டுகள் அவர்களின் வரலாற்றினைக் கூறும் சிறப்பு வாய்ந்தவையாகும். இத்தூண்கள் மாலிக்காபூர் படையெடுப்பால் அழிக்கப்பட்ட நியமத்து பிடாரி கோயிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டவையாகும். பெரும்பிடுகு முத்தரையன் சுவரன்மாறன் என்பவன் தஞ்சைக்கோன், வல்லக்கோன் என்று இக்கல்வெட்டுகளால் அறியப்படுகிறான். எனவே சோழர்களுக்கு முன்னால் தஞ்சை முத்தரையர்களின் தலைநகரமாயிருந்ததை இதனால் அறியமுடிகிறது.

செந்தலை தலத்து இறைவனும் இறைவியும் மதுரைத்தலத்து இறைவனின் பெயரைப் பெற்றுள்ளனர். திருப்பெருந்துறை என்ற பெயரும் பெற்றிருந்த இக்கோயிலுக்காக வைரமேகபிடாரன்

என்பவன் தான் கட்டிய மண்டபத்தில் பாரதம் படிக்கவும், மண்டபத் தூய்மைக்கும், விளக்கெரிக்கவும், கோடையில் குடிநீர் வைப்பதற்கு மண்பானை வாங்குவதற்கும் ஒரு வேலி நிலத்தினை நிவந்தம் அளித்துள்ள செய்தியை இங்குள்ள கல்வெட்டினால் அறியலாம்.

இரண்டாம் ஆதித்தசோழன் காலத்தில் இங்குள்ள கணபதி கோயிலுக்குத் திங்கள்தோறும் உத்திர நாளில் பொங்கல் படையலுக்கும், சித்திரைத் திங்கள் உத்திர நாளில் சிறப்பு வழிபாட்டிற்கும் நிவந்தம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கோயிலில் பாண்டியன் மாறஞ்சடையன், முதலாம் ஆதித்தசோழன், சுந்தரசோழன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கசோழன், கிருஷ்ணதேவராயர் முதலிய மன்னர்களின் கல்வெட்டுகளும் இடம்பெற்றுள்ளன.

## 1.10. திருப்புறத்துறை/திருப்பேர்/கோயிலடி

தஞ்சாவூரிலிருந்து கல்லணை செல்லும் நெடுஞ்சாலையில் இருபத்திரண்டு கல் தொலைவில் காவிரியின் வடகரையில் கோயிலடி அமைந்துள்ளது. சங்ககாலத்திலிருந்தே இவ்வூர் சிறப்புப் பெற்று விளங்குகிறது. சங்க இலக்கியங்களில் திருப்பேர் என்று இவ்வூர் வழங்கப்பட்டுள்ளது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் திருப்பேர் நகர் எனக் கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. கோயிலடி என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட பெயராக இருக்கலாம். இவ்வூரின் கண் உள்ள ஒரு கல்வெட்டு, "எயி நாட்டு பிரம்மதேயமான திருப்பேர் நகர்" எனக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டிலிருந்து திருப்பேர் ஒரு பிரமதேயம் என அறியலாம். இவ்வூரின் கிழக்கில் காவிரியின் வடகரையில் சிவபெருமானுக்கு "திருப்பேர் திருப்புறத்துறையும் பெருமானடிகள் கோயில்" ஒன்று எடுப்பிக்கப்பட்டது. "தென்திருப்பேர்" எனும் வைணவத் திருத்தலம் ஒன்றும் இங்கு அமைந்துள்ளது. பிரம்மதேயமாக வழங்கப்பட்ட ஊரில் சிவாலயமும், விண்ணகரமும் எடுப்பித்தல் மரபு. அவ்வாறே திருப்பேர் எனப்படும் கோயிலடியிலும் கோயில்கள் அமைந்துள்ளன.

திருப்பேர் திருப்புறத்துறை கோயிலில் உள்ள இறைவன் தற்போது திவ்ய ஞானேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். ஆனால் முதலாம் இராசராசன் கல்வெட்டுகளில் திருப்புறத்துறைவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். இக்கோயிலில் சோழர் காலக் கல்வெட்டுகள் ஏழு படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று இராஜகேசரியின் காலத்தவையாகும். இராஜகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'செம்பியன் வேதி வேளான்' என்பான் திருப்பேர் திருப்புறத்துறைவார்க்குத் திருக்கற்றளி எடுப்பித்ததைக் குறிப்பிடுகிறது. இவன் திருவெறும்பூர் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்ட செம்பியன் வேதிவேளானாக இருக்கவேண்டும்.

முதற்குலோத்துங்க சோழனின் நாற்பத்து நான்காவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 'பாண்டிகுலாசனி வளநாட்டு பிரம்மதேயம் ராஜேந்திர சதுர்வேதி மங்கலத்து' மஹாசபையோர் விற்றுக் கொடுத்த ஒரு வேலி நிலத்தையும் அதன் எல்லைகளையும் குறிக்கிறது.

மேலும் அக்காலத்தில் இவ்வூரின் அருகேயுள்ள திருச்சென்னம்பூண்டி என்ற பெயருடன் விளங்கும் திருச்சடைமுடி என்னும் ஊர் அக்காலத்தில் திருப்பேர் நகரத்தின் பிடாகையாய் சிற்றூராய் அதாவது உள்கிராமமாய் இருந்ததென்றும் அறியமுடிகின்றது.

திருப்பேர் திருப்புறத்துறை பெருமானடிகள் கோயில் சோழர்காலக் கற்றளியாகும். இவ்வூரில் பண்டு பிடாரி கோயில் ஒன்றும் இருந்துள்ளது. அங்கு சப்தமாதர்களின் வழிபாடும் இருந்துள்ளதை அறிகிறோம்.

### 1.11. திருச்சென்னம்பூண்டி – ஊரும் பேரும்

சின்னபூண்டி என்பது சென்னம்பூண்டியாக மருவி யிருக்கலாம். ஏனெனில் தஞ்சாவூரிலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் மற்றொரு பூண்டி உள்ளது. சினம்பூண்டி என்று சிவபெருமானை அழைப்பதுவும் உண்டு. சிவனின் அழித்தல் தொழிலுக்கான மூர்த்தங்களான திரிபுராந்தகர், கஜாரி, காலாரி,

காமாரி முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம். ஏனெனில் இக்கோயிலில் விமானம் தாங்குதளத்தின் கண்டப்படைச் சிற்பங்கள் இம்மூர்த்திகளாகத் திகழ்கின்றனர். திருச்சென்னம்பூண்டி திருச்சடைமுடி என்பதன் வழக்குச் சொல்லாக இருக்கலாம் எனக் கருதவும் வாய்ப்புண்டு. சின்னம் பூண்டி என்பதாகவும் சொல்லலாம். ஆனால் இப்பெயர் பிற்காலத்தில் ஏற்பட்ட பெயரேயாகும். கடைமுடி என்பதே இவ்வூரின் பெயராகும். சம்பந்தர் தேவாரத்திலும், இங்குள்ள கோயில் கல்வெட்டுகளிலும் கடைமுடி என்றே குறிப்பிடப்படுகிறது.

திருச்சென்னம்பூண்டி என்ற கடைமுடி திருப்பேர் நகரத்தின் வடபிடாகையாகும். இது ஒரு சிறிய கிராமம் என அறியப்படுகிறது. திருச்சடைமுடி கிராமத்தின் மக்கள் எங்கோ குடிபெயர்ந்துள்ளனர். ஊர் அழிந்ததால் இந்நிலை ஏற்பட்டிருக்கவேண்டும். திருப்பேர் என்னும் கோயிலடி கோயிலில் உள்ள விக்கிரமசோழனின் பதினொன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, "பாண்டிகுலாசனி வளநாட்டு எயினாட்டு பிரம்மதேயமான திருப்பேர் பெருங்குறி மஹாசபையோர் இவ்வூர் வடபிடாகையான திருச்சடைமுடி உடைய மஹாதேவர் கோயில் திருமண்டபத்தே கூட்டம் குறைவறக் கூடியிருந்து பண்ணின பரிசாவது காலம் பொல்லாதாய் நம்மூர் அழிந்து குடி ஓடிப்போய்க் கிடந்தமையால் இவ்வூர் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து" எனக் குறிக்கிறது. கி.பி.1129-ஆம் ஆண்டில் விக்கிரமசோழனின் பதினோராாவது ஆட்சியாண்டில் இவ்வூரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது.

### 1.12. *திருக்கடைமுடியா? திருச்சடைமுடியா?*

தற்போது சடையார் கோயில் என்றழைக்கப்படும் திருச்சென்னம்பூண்டி திருத்தலம் அங்குள்ள கல்வெட்டுகளில் திருக்கடைமுடி என்றும், திருச்சடைமுடி என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. கல்வெட்டில் இரண்டு பெயரும் பயின்று வருவதால்தான் இக்கேள்வியும் எழுந்துள்ளது. மேலும் சடைமுடி என்பதுதான் மக்கள்

வழக்கில் சடையார் கோவில் என்றழைக்கப்படுகிறது. ஆனால் சம்பந்தர் பாடிய தேவாரத்தில் "கடைமுடி வளநகர்" என்றே இவ்வூரினைக் குறிப்பிடுகிறார்.

வடகாவிரி என்றழைக்கப்படும் கொள்ளிடத்தின் தென்கரையிலும் காவிரிக்கு வடகரையிலும் அமைந்துள்ள இத்திருத்தலம் ஆற்றங்கரைத் தலமாகும்.

சிவபெருமான் தன் சடையில் கங்கை நதியினைக் கொண்டவர். காவிரி பாயும் இடங்களுக்கு கடைமுடியாக விளங்கும் இவ்வூரானது சிவபெருமானின் சடையாகவும், காவிரி மற்றும் கொள்ளிடத்திற்கு இடையாற்று நாடாக விளங்கும் இவ்வூரில் ஓடும் நீர்நிலையானது சிவனின் சடையில் பாயும் கங்கை நதிக்கு ஒப்பீடாகக் கொண்டு கடைமுடியானது சடைமுடியாக மருவக் காரணமாகக் கொள்ளலாம். மேலும் ககரமானது சகரமாக வாசிக்கப்பட்டிருக்கலாம் என்பதுவும் ஒரு கருத்தாகக் கொள்ள இடமுண்டு.

# திருக்கோயில்களும் திருவிளக்குகளும்

இறைவன் விளங்கும் கோயில்களுக்கும், அவற்றில் எரிக்கக்கூடிய விளக்குகளுக்கும் சமூகத்தில் மக்கள் கொடுத்த முக்கியத்துவத்தை அறிதலே இத்தலைப்பின் நோக்கமாகும். ஏனெனில் இவற்றின் முக்கியத்துவத்தின் பின்னணியை அறிந்தால் தான் கோயில்களின் ஆய்விலும், அங்குள்ள கல்வெட்டுகள் கூறும் செய்தியிலும் ஆழ்ந்து பொருள் காணவியலும்.

மேலும் திருக்கடைமுடிநாதர் கோயில் கல்வெட்டுகளில் அதிகமான விளக்குக் கொடைகளைக் காணமுடிகிறது. மக்களும், அரசகுலமும் அதற்கான நிவந்தங்களைப் பொன்கழஞ்சுகளாக, சாவாமூவாப் பேராடுகளாக வழங்கியுள்ளனர். இதனை நோக்குகையில் இக்கோயிலில் விளக்கேற்றி வழிபடுதல் பண்டு ஒரு சிறந்த சடங்காக மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும் இத்தலம் காவிரியின் கடைமுடியாதலால் நீர்நிலைகளில் விளக்கு வைத்தல் வளத்தைப் பெருக்கும் என்ற பழமையான நம்பிக்கையையும் இது காட்டி நிற்கிறது.

## 2.1. சமூகப்பார்வையில் கோயில்கள்

திருக்கோயில் இல்லாத திருவில் ஊரம்
திருவெண்ணீறு அணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாய் பாடா ஊரம்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போரு வெண்சங்கம் ஊதா ஊரம்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரம்
அவையெல்லாம் ஊரல்ல அடவி நாடே.

மேற்கண்ட தேவாரப்பாடல் கோயில்கள் பண்டு பெற்றிருந்த உயர்நிலையைச் சுட்டுவனவாகும். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் தமிழக மக்களின் வழக்கிலுள்ள மொழியாகும்.

சங்ககாலத்தில் மரத்தாலும், செங்கற்களாலும் கட்டப்பட்ட கோயில்கள் இருந்தனவென்பதை, "இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென மணிப்புறா துறந்த மரஞ்சேர் மாடத்து" என்னும் சங்க இலக்கியப் பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன. அவை விரைவில் அழிந்து போனதையும் இதனால் அறியலாம். "சுடுமண்ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்" என்ற வரியால் கோயில்கள் மண்தளிகளாக இருந்ததுவும் தெளிவு.

கோயில்கள் ஏனெனின் அகஞ்சார்ந்த ஆன்ம அறிவை, கலையோடும், உணர்வோடும், சடங்குகள் வழியே வெளிப்படுத்தும் ஊடகமாய், புறஞ்சார்ந்து நிற்கும் காலப்பெட்டகமாம். அவையே நம் மரபின் ஆதாரங்கள், வரலாற்று ஆவணங்கள் நம்மை முன்னும் பின்னும் காட்டி நிற்கும் நிலையான நம்பிக்கையின் பருப்பொருட்கள். அறநெறிகளின் ஆணிவேர்கள் இங்கிருந்தே தொடங்குகின்றன. வழிபாடும், சடங்குகளும், நம்பிக்கைகளும் மட்டுமல்லாது புறப்பொருளாய் நின்று மக்கள் வாழ்வின் பயண நிலைப்பாடுகளைத் தொகுத்து நிற்கும் மெய்ப்பாட்டுத் தத்துவ உருவே கோயிலாகும்.கோயில் வாழ்வியலின் கருவறை. கோயில்கள் நம் நாட்டில் ஆதிஅந்தமற்ற இறைத் தத்துவம் போல என்று தொடங்கியது என்றறிய அரியனவாக உள.

தென்னிந்திய மக்களின் குறிப்பாக, தமிழக மக்களின் வாழ்வில் கோயில் இரண்டறக் கலந்த உணர்வாகும். மனித வாழ்வின் தொடக்கமும், முடிவும், அதன் நிலையும் பல நம்பிக்கைகளையும், சடங்குகளையும் கொண்டுள்ளன. இவையனைத்தும் நிறைவேற்றும் பொதுமைக் களமாகக் கோயில்கள் ஆதியிலிருந்து திகழ்ந்து வருகின்றன.

ஒரு தலத்திலுள்ள மக்களின் சமய வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்ற உயிர்த்துடிப்புள்ள இடமாகக் கோயில் விளங்கியது மட்டுமன்றி, அது அவ்வூர் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பல்வேறு இயக்கங்களிலும் பங்கு கொண்ட சமூக நிறுவனமாக விளங்கியது. கோயில் தானே நிலப்பிரபுவாகவும், முதலாளியாகவும் (பலருக்கு வேலைவாய்ப்பு கொடுத்ததால்) இருந்தது.

## 2.2. கோயில்களும் பொருளாதாரமும்

கோயிற் பண்டாரம் (களஞ்சியம்) வங்கி போல அமைந்து வைப்புப் பணங்களைப் பெற்றும், கடனுதவி அளித்தும் மக்களுக்கு உதவியது. கிராமக் கைத்தொழில்களின் பெருக்கத்திற்கு உதவியது. அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய வரிகள் கோயில்களால் அளவிடப்பட்டன. தனிப்பட்டவர்கள் தமது நிலங்களுக்குச் செலுத்தவேண்டிய வரிகளும் (மன்னரால்) கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. இவற்றைவிடக் கோயில்களும் மக்களிடமிருந்து வழக்கமான கடமைப் பணத்தையும் பெற்றன. ஊரிலேயுள்ள பெரிய நிலவுடைமை நிறுவனம் என்ற முறையில் கோயில், ஊரின் விவசாயத்தில் ஊக்கங் காட்டியது.

வயல்களில் பயிர் செய்விப்பதோடு அமையாது புதிய நிலங்களையும் உழவுக்குட்படுத்தியது. பாழ்பட்ட நிலங்களுக்குப் புனர்வாழ்வு அளித்தது. கோயிற் பண்டாரமானது வங்கி போலக் கடமையாற்றியபடியால், தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், வட்டியுடனும், வட்டியின்றியும் உசிதம்போல உதவியது. விவசாயிகள் தமது தொழில் தேவைகளுக்காகக் கடன் பெற்றனர். தமது பெண்களுக்குச் சீதனம் கொடுப்பதற்குக்கூடச் சிலர் கோயிலிலிருந்து கடன் பெற்றனர். "நாட்டின் பொருளாதார வாழ்வில் கோயில் நடுநாயகமாக வீற்றிருந்தது" என்று வரலாற்றறிஞர் டி.வி. மகாலிங்கம் கோயில்களின் பல்வேறு செயல்களின் பரிமாணங்களைப் பற்றிக் கூறுகிறார். அறிஞர்தம் கூற்றிலிருந்து ஒரு கோயில் ஆய்வு என்பது அந்நிலத்தின் சமயம், பண்பாடு, கலையுணர்வு, அரசியல், சமூகநிலை, பொருளாதாரநிலை ஆகியவற்றையும் இணைத்து ஆயும் ஒரு வரலாற்று நெறியாக விளங்குவதை உணரலாம்.

## 2.3. கோயில்களும் அரசும்

இறையுணர்வு, சமயநம்பிக்கை, வாழ்வின் தத்துவம் ஆகியனவற்றைத் தாங்குதளமாகக் கொண்டு விளங்கும் கோயில்கள் அவை மக்களிடையே பெற்றிருந்த முக்கியத்துவம் கருதியே கலை, பண்பாட்டுக் கருவூலங்களாகவும் ஆற்றல் வாய்ந்த

பேரரசர்களால் மாற்றப்பட்டன. தம் ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்தும் அரசன் தான் வென்ற நிலத்தில் தம் ஆதிக்கத்தை ஏற்குமாறு அம்மக்களின் மனதை வெல்ல ஒரு கோயிலைக் கட்டுவது மரபு. அங்ஙனம் கட்டப்பட்ட கோயில்கள் அரசர்களின் படைப்பு பாசறையாகவும் திகழ்ந்திருக்கலாம்.

ஒவ்வொரு கோயிலும் அது திகழும் ஊரின் அரசு அலுவலகமாக விளங்கின. அரசு ஆணை, ஊரப்பிரிவு, நாட்டுப்பிரிவு, நிலவுடைமை, கரையாண்மை, இறையிலி முதலிய செய்திகளைத் தாங்கி நிற்கும் கல்வெட்டுகள் என்னும் வரலாற்று ஆவணங்கள் மிகுந்துள்ள இடமே கோயிலாகும்.

கோயில் அரசனது அரண்மனையைக் குறிப்பதாக தொடக்கத்தில் கருதப்பட்டது. பிற்காலத்தில் தேவகோட்டங்களைக் குறிப்பதாகவும் வழங்கலாயிற்று. இரண்டும் கலந்த நிலையில் கோயில்கள் வழக்கிலிருந்ததை அதாவது அரசனின் நிர்வாகம், கட்டளை, இறைப்பணிகளை நிறைவேற்றும் பணித்தலமாகவும், இறையுணர்வு மேலோங்கிய நிலையில் கலைக்கும், சமயத்துக்கும் இருப்பிடமாகவும் அவை இருந்ததையும் கல்வெட்டுகள் நமக்குக் காட்டி நிற்கின்றன. இதனை நன்குணர்ந்த நம் பண்டைய அரசர்கள் தங்கள் அரண்மனைகளைவிட, உறுதியாகவும், நுணுக்கமுடனும் கோயில்களை அமைத்தனர்.

வாழ்வியல் நெறிமுறைகளை உணர்த்தி நிற்கும் கோயில்கள் சமூகத்தின் உயிர்நாடியாய் அன்று விளங்கிய காரணத்தால் அரசர்கள் மிகு சிரத்தையுடனும், கலையார்வத்துடனும். இறையுணர்வுடனும் கோயில்களை அமைத்தனர். அதனால் தான் பல அரண்மனைகள் சுவடழிந்த நிலையில் உள்ளன. இன்றும் கோயில்கள் நம் வரலாற்றைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. பண்டு அரண்மனைகளை வடிவமைத்த சிற்ப சாத்திரம் நன்கறிந்த நூலறிவாளர்களே கோயில்களில் சிற்பங்களையும், கலை வடிவங்களையும் அமைத்தனர்.

தென்னிந்தியாவில் பல்லவ, பாண்டிய மற்றும் சோழப் பேரரசுகள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து கோயிற்கலைப் பணிகளைத் தொடங்கினர் என்று கூறலாம். வல்லமை மிகுந்த

பேரரசுகள் அதிக பொருட்செல்வத்தினால் ஈடுபாட்டோடு எடுப்பித்த கோயில்கள் இன்றும் அதன் சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியம், கல்வெட்டின் மொழிச்சிறப்பு ஆகியவற்றால் தன்னிகரற்று எழிலோடு விளங்குகின்றன. கோயில்களின் பராமரிப்பு இன்று இன்றியமையாததாக உள்ளது.

## 2.4. விளக்கும் சமுதாயமும்

திருக்கோயில்கள் சமூகத்தின் இன்றியமையாமை போல அக்கோயில்களில் ஏற்றப்படும் விளக்குகளும் சடங்கு, நம்பிக்கை, இறையுணர்வு இவற்றிற்கும் மேலாகச் சமுதாயத் தொடர்பைப் பெற்றுள்ளதை நாம் பல விளக்குக் கொடைக்கான கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

விளக்கு ஒளித்தன்மையுடையது. பழங்குடிகளின் குகை வழிபாட்டிலும் ஒளியேற்றி வணங்குதலுண்டு. ஒளி தெய்வத் தன்மை பொருந்தியதென்பது மனிதனின் முதல் நம்பிக்கை எனலாம். ஆதிமக்களின் சூரிய, சந்திர வழிபாடுகளும் ஒளியை மையப்படுத்தியதேயாகும். மலைமீது நெருப்பைக் கண்டு வழிபடுதல் உலகெங்கும் மரபு. இந்நிகழ்வானது பழங்குடிகளுக்குள் செய்தி சொல்வதாக கிரேக்கத்தில் பண்டு அமைந்திருந்தது. நம் நாட்டிலும் மலைமீது விளக்கேற்றும் விழா பழங்காலந்தொட்டே சிறப்புடன் நடந்து வருகிறது.

சங்க இலக்கியத்தில் அகநானூற்று பாடல் ஒன்று மலைமீது ஏற்றப்பட்ட விளக்கீடு பற்றி குறிப்பிடுகிறது.

"இரும்பு செய்விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ
நெல்லும் மலரும் தூஉய், கைதொழுது
மல்லல் ஆவணம் மாலை அயர" - நெடுநல்வாடை 39-44

நெடுநல்வாடையின் இப்பாடல் வரிகள் மாலை நேரத்தில் இரும்பினால் செய்யப்பட்ட விளக்கினை ஏற்றி, நெல்லும் மலரும் தூவி கைதொழுத நிகழ்வினைக் காட்டுகின்றன.

"பெண் மகிழ்வுற்ற பிணைநோக்கு மகளிர்
நெடுஞ்சுடர் விளக்கம் கொளீஇ" - மதுரைக்காஞ்சி 555-556

மகளிர் நெடுஞ்சுடர் விடும் விளக்கினை ஏற்றி வழிபட்டதையும் மதுரைக்காஞ்சியின் மேற்கண்ட வரிகள் காட்டுகின்றன.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தரும் மயிலைப் பதிகத்தில் "தொல் கார்த்திகை நாள் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" என்று சிறப்புப்பெற்ற விளக்குத் திருநாளைப் பார்க்காமல் உயிர்துறந்த பூம்பாவையை விளிக்கிறார்.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே

என இறைவனைப் பாடிய திருநாவுக்கரசர் பல கோயில்களில் விளக்கெரிக்க வகை செய்தார். 'தேச விளக்கெலாம் ஆன செம்பொற் சோதி'யின் திருக்கோயிலில் விளக்கெரித்தலை நாயன்மார்களும் தொண்டெனக் கருதினர்.

## 2.5. மன்னர்களின் விளக்குக்கொடைகள்

இராஜசிம்ம பல்லவன் தன் முன்னோர்களை ஐம்பத்து நான்கு சிற்றாலயங்களில் அமைத்துள்ள காஞ்சி கைலாசநாதர் கோயில் விளக்கெரிக்க அவன் வழங்கிய நிவந்தங்களும், இரண்டாம் நந்திவர்மனின் வைகுண்டபெருமாள் கோயிலின் விளக்கெரித்தலும், திருவான்மியூர் மருந்தீசர் கோயிலுக்கு முதலாம் இராஜேந்திரன் நலம்பெற விளக்கெரிக்க அளித்த கொடையும், திருவொற்றியூர் கோயிலுக்கு வீரராஜேந்திர சோழன் உடல் நலம்பெற அவன் தாயார் அளித்த விளக்குக் கொடையும் அரசர்களின் நலம் வேண்டி கொடுக்கப்பட்ட அரசக் கொடைகளாகும்.

மேலும் முதலாம் பராந்தகச்சோழன் தன் தந்தை முதலாம் ஆதித்தனுக்கு எடுப்பித்த தொண்டைமானாற்றூர் கோதண்ட ராமேச்சுவர பள்ளிப்படைக் கோயிலும், முதலாம் இராஜராஜ சோழன் கட்டிய அரிஞ்சேச்சுவரமும், இராசேந்திர சோழனின் மகளுக்காகத் தாராபுரம் அருகிலுள்ள பிரம்மியம் கோயில் விளக்கெரிப்பும், அக்கோயில்களுக்கு அன்னார் கொடுத்த கொடைகளும் அவர்தம்

முன்னோர்கள் நினைவாக விளக்கேற்றி வழிபடுதல் பொருட்டேயாம். கோயில்களைப் பொறுத்தவரை விளக்கேற்ற அரசர்களது நிவந்தங்களைப் பெறாதவை இல்லையென்றே கூறிவிடலாம். அரசனும், அவன் பொருட்டும் கட்டப்பட்ட இக்கோயில்கள் அரசக்கொடைகளாலேயே விளக்கேற்றி சிறப்பிக்கப்படுகின்றன. இந்நிகழ்வு அரசனுக்கு வெற்றியையும், வளத்தையும் தரும் என்ற நம்பிக்கையேயாகும்.

## 2.6. தண்டனை-விளக்கேற்றுதல்

அக்கால சமுதாயத்தில் மக்களின் குற்றங்களுக்குத் தண்டனையாக ஊர்ச்சபையோரும், அரசும் அக்குற்றவாளிகள் கோயில்களில் நித்தம் விளக்கெரிக்க வேண்டுமென விதித்தனர்.

இருவருக்குள் நேர்ந்த சண்டையில் ஒருவன் மகனைக் கொன்றவனுக்குக் கொலைத்தண்டனையாக அவ்வூர் சிவன் கோயிலில் நொந்தா விளக்கெரிக்கப் பணிக்கப்பட்ட செய்தியைப் புள்ளமங்கை கல்வெட்டினால் அறியலாம்.

புள்ளமங்கலத்து மகாதேவர் கோயிலில் காவல் பணியிலிருந்த பள்ளி பொன்னி நாடாழ்வானும், வாணராய போயனும் தங்களுக்குள் பகையேற்பட்டுச் சண்டையிட்டுக் கொண்டனர். அந்தச் சண்டையில் வாணராய போயன் எய்திய அம்புபட்டுப் பொன்னி நாடாழ்வான் மகன் குப்பை பெருமாள் இறந்துபட்டான். கொலைக்குற்றம் செய்த வாணராய போயனுக்கு ¾ நுந்தா விளக்கு எரிக்கச் சபையார் ஆணையிட்டனர். வாணராயபோயனும் 72 ஆடுகளைச் சிவப்பிராமணர் வசம் ஒப்படைத்து நொந்தா விளக்கெரிக்க ஏற்பாடு செய்தான். இந்த விளக்கு குப்பைப் பெருமாளைச் சார்த்தி (நினைவாக) வைக்கப்பெற்றது.

இத்தகு நோக்கில் முற்காலச் சோழர் கலைப் பாணியில் அமைந்த முதலாம் பராந்தகச் சோழனின் அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுகளைப் பெற்று விளங்கும் திருக்கடைமுடிநாதர் திருக்கோயில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

# தேவாரத்தில் திருக்கடைமுடி

காவிரியின் வடகரையில் அமைந்துள்ள திருக்கடை முடிநாதர் திருத்தலம் தேவாரப் பாடல் பெற்ற தலமாகும். திருஞானசம்பந்தர் இத்தலத்தினைப் பாடியுள்ளார். அப்பர் தமது சேஷத்திரக்கோவையில் கடைமுடி என்று குறிப்பிட்டுள்ளார். சம்பந்தர் பாடிய திருக்கடைமுடி என்னும் திருத்தலம் இதுவன்று என்றும், அது காவிரி வடகரைத்தலமான கீழைத்திருக்காட்டுப்பள்ளி எனவும் பரவலான கருத்துள்ளது. கீழைத்திருக்காட்டுப்பள்ளி திருத்தலத்திலும் திருக்கடைமுடி பாடலே தலப்பாடலாக அமையப்பெற்றுள்ளது.

ஆனால் இராகவையங்கார் கல்வெட்டுச் சான்றுகளின்படி திருக்கடைமுடி எனத் தேவாரத்தில் குறிப்பிடப்பட்ட தலம் சடையார்கோவில் என்னும் இத்தலமேயாகும் என்று குறிப்பிட்டுள்ளார். சடையார் கோயிலில் உள்ள அனைத்துக் கல்வெட்டுகளிலும் இங்குள்ள இறைவன் சடைமுடி மகாதேவர் என்றும், கடைமுடி மகாதேவர் என்றும் குறிப்பிடப்படுகின்றார். ககரம் சகரமாகக் கல்வெட்டு வாசித்தலில் அமைதலுக்கு வாய்ப்புண்டு.

மேலும் கல்லணையிலிருந்து காவிரி கொள்ளிடம், குடமுருட்டி, வெண்ணாறு முதலான ஏழு கிளைகளாகப் பிரிகின்றது. இதில் முதன்மையான கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள திருத்தலமே கடைமுடியாகும். இச்செய்தியை இக்கோயிலில் உள்ள கல்வெட்டுச் செய்தி உறுதிப்படுத்துகின்றது.

'தென்கரை இடையாற்று நாட்டு திருக்கடைமுடி மகாதேவர்க்கு' என்று ஊரும் இங்குள்ள இறைவனும் அனைத்துக் கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே காவிரிக்கு வடகரையிலும், கொள்ளிடத்திற்குத் தென்கரையிலும் திருக்கடைமுடி திருத்தலம் அமைந்துள்ளது. இதனைச் சம்பந்தரும் தமது பாடலில் உறுதிப்படுத்துகின்றார். 'சடையிடை புனல்வைத்த சதுரனிடம் கடைமுடி அதன் அயல்காவிரியே' என்று காவிரியாறு இத்தலத்திற்கு அயலாக உள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

"அருத்தனை அறவனை அமுதனை நீர்
விருத்தனை பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை அல்லது இங்கு உலகம் ஏத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே."

எல்லாவற்றுக்கும் பொருளாக விளங்கு பவனாகிய இறைவனை, அறத்தின் தலைவனை, யாவர்க்கும் அமுதமானவனை, என்றும் இளமையாயும், எல்லோர்க்கும் மூத்தோனாகியும் இருப்பவன் யார் என வினவுவீர்களாயின் அவன் ஒருவனாகிய ஈசன், அவன் உலகம் ஏத்திப் பரவும் கருத்துடையவனாகிக் கடைமுடி நகரில் வீற்றிருப்பவன்.

"திரைபொரு திருமுடி திங்கள் விம்மும்
அரைபொரு புலியதள் அடிகளிடம்
திரையொடு நுரைபொரு தெண்சுனை நீர்
கரைபொரு வளநகர் கடைமுடியே."

கங்கையும் திங்களும் சடையில் பொலிய, புலியின் தோலை ஆடையாகக் கொண்ட அடிகள் உறையுமிடம் எதுவெனில், அலையொடு நுரைமிகும் தெளிந்த சுனைநீர் மோதும் கடைமுடி என்ற வளநகர் ஆகும்.

"ஆலின மதியினொடு அரவு கங்கை
கோலவெண் ணீற்றனைத் தொழுது இறைஞ்சி
ஏலநன் மலரொடு விரைகமழும்
காலன வளநகர் கடைமுடியே."

இளம்பிறைச் சந்திரனையும், அரவமும், கங்கையும் தலைமேற்கொண்ட கோலமுடைய, வெண்ணீறணிந்த ஈசனை மணம் வீசும் மலர்களைக் கொண்டு ஏத்தித் தொழுவார்க்கு, வளநகர் கடைமுடியில் வீற்றிருந்து அவன் அருள்பாலிக்கின்றான்.

"கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவன் ஊர்
பையணி அரவொடு மான்மழுவாள்
கையணி பவனிடம் கடைமுடியே."

கொய்து அணியக்கூடிய நறுமணமுள்ள கொன்றைத்தாரை அணிந்தவனும், கருத்த கண்டமுடையவனுமாகிய வேதங்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானின் ஊரானதும், அரவமணிந்தும், மான், மழுவாள் இரண்டினையும் கையணிகளாகக் கொண்டு விளங்குபவனுமாகிய ஈசனின் இடமானதும் கடைமுடியே ஆகும்.

"மறையவன் உலகவன் மாயம் அவன்
பிறையவன் புனலவன் அனலும்அவன்
இறையவன் எனஉலகு ஏத்தும் கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே."

சிவபெருமான் வேதமாவான். உலகமும் மாயையும் அவனேயாவான். சந்திரனும், கங்கையும், அனலும் அவன் உருவேயாம். இறைவன் என உலகம் ஏத்திப் போற்றும் கண்டம் கறுத்தவனாகிய ஈசன் இருக்குமிடம் வளநகர் கடைமுடியே.

"படஅரவு ஏர்அல்குல் பல்வளைக்கை
மட வரலாளையொர் பாகம் வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே."

அழகிய பல வளையல்களை அணிந்த கைகளையுடைய உமையவளை இடபாகம் வைத்தவனும், மேற்குத்திசையில் தோன்றும் சந்திரனைத் தலையில் சூடியவனுமாகிய கடவுளாகிய சிவபெருமான் தன்னிடமாகக் கொண்டுள்ள வளநகர் கடைமுடியே ஆகும்.

"பொடிபுல்கு மார்பினில் புரிபல்குநூல்
அடிபுல்கு பைங்கழல் அடிகள்இடம்
கொடிபுல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே."

வெண்ணீறு பொலியும் மார்பினில் முப்புரிநூல் திகழவும், அழகிய திருவடிகளில் கழல் ஒலிக்குமாறும் விளங்கும் அடிகள் வீற்றிருக்கும் இடமானது, குளிர்ந்த சுனைநீரில் அழகிய கொடிகளில் மலர்கள் நிறைந்துள்ள வளநகர் கடைமுடியாகும்.

"நோதல்செய்து அரக்கனை நோக்குஅழியச்
சாதல்செய் தவன்அடி சரண்எனலும்
ஆதரவு அருள்செய்த அடிகள்அவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே."

இராவணன் தன் அகந்தை அழியுமாறு அவனைத் துன்பத்திற்கு ஆளாக்கி, பிறகு அவன் திருவடிகளைச் சரணடைய அரக்கனுக்கு ஆதரவு காட்டி அருள்செய்த இறைவன் விரும்பும் வளநகர் கடைமுடியே.

"அடிமுடி காண்கிலர் ஓரிருவர்
புடைபுல்கி அருள்என்று போற்றிசைப்பச்
சடையிடை புனல்வைத்த சதுரனிடம்
கடைமுடி அதன் அயல்காவிரியே."

பிரமனும், திருமாலும் அடிமுடி காணாது தேடி அலையவும், பின்பு அடியவர் புடைசூழ அருள்வேண்டி போற்றி இசைக்கவும் சோதி வடிவாய் ஈசன் விளங்கினார். அப்பெருமான் தன் சடையில் நீர் தரித்த சதுரன். அவன் விளங்கும் இடம் காவிரிக்கு அயல் விளங்கும் கடைமுடி என்னும் திருத்தலமாகும்.

"பொன்திகழ் காவிரிப் புனல்பொருசீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தன்சொன்ன
இன்சொல் இவைசொல இன்பமாமே."

பொன்போல் திகழும் காவிரியின் புனலானது சீராகச் சென்றடையும் கடைமுடித் தலத்தின் சிவனடியை நன்றுணர்ந்து கொள்ள திருஞானசம்பந்தர் பாடிய இப்பாடல்களைச் சொன்னால் இன்பமாம்.

# அரசியல் பின்னணி

## 4.1. மூன்றாம் நந்திவர்மன்

மூன்றாம் நந்திவர்மனை வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் சிவபெருமானுக்கு இணையாகக் கூறுகின்றன. ஸ்ரீகண்டன் என்ற பெயரைக்கொண்ட ஓர் அரசனுடைய தோள்வலியைப் புகழ்ந்து கூறுவதாக அமைந்திருப்பதுபோல் தோன்றுகிறது. அவன் பொத்தப்பிக் குலத்துச் சோழனான ஸ்ரீகண்டனேயாகும்.

இந்த நந்திவர்மனும் தன் பாட்டனைப் போலவே ராஷ்டிரகூட வம்சத்து சங்கா என்ற அரசகுமாரியை மணந்திருந்தான். அவளுக்குப் பிறந்த மகனே பின்னால் நிருபதுங்கவர்மன் என்ற மன்னனாவான். நந்திவர்மனுக்கு அடிகள் கண்டன் மாறம்பாவையார் என்ற மற்றொரு தேவியும் இருந்தாள். இவள் மகன் அபராஜிதவர்மன் என்று பல்லவர் செப்பேடுகள் எழுதிய தி.நா.சுப்ரமணியம் கூறியுள்ளார். ஆனால் அதற்குப் பிறகு கிடைத்த கம்பவர்மனின் வேலஞ்சேரி செப்பேடுகள் கூறுவதிலிருந்து மூன்றாம் நந்திவர்மனுக்கும் கண்டன் மாறம்பாவையாருக்கும் பிறந்த மகன் கம்பவர்மனே என்று அறியலாம். இந்தக் கம்பவர்மன் மகனே அபராஜித வர்மன் என்றும் அறியக்கூடும்.

மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டுகள் நன்னிலம், திருச்சென்னம்பூண்டி, திருப்புள்ளமங்கை, திருவாவடுதுறை ஆகிய கோயில்களில் இடம்பெற்றுள்ளன. திருச்சென்னம்பூண்டி சடையார்கோயிலில் இம்மன்னன் தெள்ளாறெறிந்த நந்தி போத்தரையன் என்ற பட்டப்பெயருடன் இவன் ஆட்சியாண்டில் இவனது தேவியார் அடிகள் கண்டன் மாறம்பாவையார் திருவிளக்கெரிக்கவும், மாசிமகத் திருவிழா ஏழுநாள் நடத்தவும் அளித்த பொன் கழஞ்சு கொடைகள் பற்றிய கல்வெட்டுகள் மூன்று உள்ளன.

## 4.2. நிருபதுங்கவர்மன்

புதுச்சேரிக்குப் பக்கத்திலுள்ள வாகூர் (பாகூர்) என்னுமிடத்தில் விளங்கிய ஒரு வித்யா ஸ்தானத்திற்கு மூன்று கிராமங்களைப் பிரம்மதேயமாக அளித்த நிருபதுங்கனின் செப்பேட்டுச் சாசனமே பல்லவச் செப்பேடுகளுள் காலத்தால் பிற்பட்டதாகும்.

நிருபதுங்கன் இலங்கையை வெற்றிகொண்டதும், பாண்டியர்கள் தங்கள் எதிரிகளை வீழ்த்த இவன் உதவியதும் இவனளித்த செப்பேடுகளால் தெரியவருகின்றது. இவனுடைய ஆட்சிக்காலத்திலே பாண்டிய அரசனாக இருந்தவன் வரகுணன் என்பவன் ஆவான். நிருபதுங்கனுடைய ஆட்சியின் 26-ஆம் ஆண்டுக்குப் பிறகு 41-ஆம் ஆட்சியாண்டு கொண்ட ஒரு சாசனம் கிடைத்துள்ளது.

இச்சாசனம் திருத்தணிக்குப் பக்கத்திலுள்ள கிராமமாகிய வேலஞ்சேரியில் கிடைத்துள்ளது. இதன்மூலம் இம்மன்னனின் 26-ஆம் ஆட்சியாண்டிற்குப் பிறகு ஓரிரண்டு வருடங்களில் திருப்புறம்பியப் போர் நடந்திருக்கவேண்டும். இப்போரில் பாண்டியன் வரகுணன் தோற்றுப்போனான். அபராஜிதப் பல்லவன் வெற்றி கொண்டான். இப்போரில் நிருபதுங்கனின் ஆட்சிப்பகுதிகளைப் பிடிக்க அபராஜிதனுக்கு உதவியவன் கங்கமன்னன் இரண்டாம் பிருதிவிபதி ஆவான்.

அதன்பின் நிருபதுங்கவர்மன் இழந்த நாட்டை மீண்டும் பெற செய்த முயற்சியில் முழுவெற்றியடைய இயலவில்லை. எல்லையோரப் பகுதிகளை மட்டுமே அவனால் மீட்க முடிந்தது. இம்மன்னனின் கல்வெட்டு தொண்டைமண்டலத்தில் அதிகமாகக் கிடைக்கவில்லை. தஞ்சை, திருச்சென்னம்பூண்டி முதலிய இடங்களில் பரவலாகக் கிடைக்கின்றன. திருச்சென்னம்பூண்டி சடையார்கோயிலில் இம்மன்னன் ஆட்சியாண்டு கொண்ட நான்கு கல்வெட்டுகள் உள்ளன. அவை விளக்கெரிக்கவும், திருவாதிரை நாளில் இறைவன் அபிஷேகத்திற்கும் அளிக்கப்பட்ட கொடைகளைப் பற்றிக் கூறுகின்றன.

## 4.3. கோவிளங்கமுத்தரையர்

முத்தரையர் மூன்று நிலப்பகுதிகளுக்குத் தலைவர்களாக விளங்கினார்கள் என்று திரு.கே.ஜி. கிருஷ்ணன் கூறியுள்ளார். அரையர் என்ற சொல் அரைசர் என்பதன் திரிபு. அரையர் என்போர் சிறுநிலப்பகுதிகளுக்குத் தலைவர்களாக இருந்திருக்கின்றனர் என்ற கருத்து, பிற்காலப் பாண்டியர் காலத்தில் புதுக்கோட்டைப் பகுதிகளில் குறுநிலப்பகுதிகளை ஆட்சி செய்ததையும், அவர்கள் காவல் தொழிலைப் புரிந்து வந்ததையும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

முத்தரையரும் களப்பிரர்களும் பொதுவான ஒரு குடியிலிருந்து பிரிந்தவர்களாயிருக்கலாம். முத்தரையர் வேளிர்களில் ஒரு பிரிவினர் தாம் என்பது வேளிர்களான இருக்குவேளிருக்கு முத்தரையர்கள் பெண் கொடுத்திருப்பதனால் உறுதிப்படுகிறது.

"ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு ஏ குன்றியூர் நாட்டுத் தேவதானந் திருநலக் குன்றத்துத் திருமூலட்டானத்துப் பெருமானடிகளுக்கு செம்பியனிருக்குவேள் தேவியார் முத்தரையர் மகளார் வரகுணனாட்டி பெருமாள்.... நொந்தா விளக்குக்கு வைத்த துளைப்பொன் எழு கழஞ்சு... நிய வைத்த நிலை விளக்கொன்று பன்மாஹேஸ்வர ரக்ஷை" என்கிற உத்தமசோழனது கல்வெட்டால் மேலும் உறுதியாகின்றது

முத்தரையர்கள் பிடாரி வழிபாட்டை உடையவர்கள் என்பது நியமத்தில் சுவரன்மாறன் பெரும்பிடுகு முத்தரையன் எழுப்பிய காளாபிடாரி கோயில் தூண் கல்வெட்டுகளால் அறியலாம். செந்தலையில் உள்ள இத்தூண் கல்வெட்டுகள் முத்தரையர்களின் வரலாற்றை விளக்குவனவாக அமைந்துள்ளன.

சுவரன்மாறனின் பட்டப்பெயர் ஸ்ரீகள்வர்கள்வன் என்று செந்தலைக் கல்வெட்டு கூறுகிறது. எனவே களப்பிரர்களை அடக்கிய தலைவன் என்று பொருள் கொள்ளலாம். சுவரன்மாறனது கொடியில் வேலும் கயலும் பொறிக்கப்பட்டு இருந்தது என்பதைப் 'பொருகயல் சேர்வேல் கொடியான்' என்று கல்வெட்டு கூறுகிறது. இவ்வழி

வந்தவனான தென்னவன் இளங்கோ முத்தரையன் என்பவனது ஆட்சியாண்டு கல்வெட்டொன்று திருச்சென்னம்பூண்டியில் உள்ளது. "எயிநாட்டு அட்டுப்பள்ளி நியமத்து அரிஞ்சிகை புரத்து" என்ற ஊர் பயின்று வருகின்றது. இவ்வரிந்திகைபுரம் பூதி அரிந்திகையின் பெயரால் ஏற்பட்டிருக்கலாம் என்று திரு கே.ஜி. கிருஷ்ணன் கூறுகிறார். பூதி அரிந்திகை கொடும்பாளூர் மன்னனான சாத்தன் மறவன் என்பானை மணந்திருக்கிறாள். ஒருவேளை இவ்விளங்கோ முத்தரையன் பூதி அரிந்திகையின் மகனாக இருந்தாலும் இருக்கலாம்.

கோவிளங்கோ முத்தரையனுக்கு உத்தமதானி என்ற பட்டப்பெயர் ஒன்று இருந்ததைத் திருச்சோற்றுத்துறைக் கோயிலில் உத்தமதானி என்னும் திருவிளக்கொன்றை இவன் எரிய வைத்திருப்பதனால் தெரிகிறது. இவனது அடைமொழியான தென்னவனிளங்கோவேள் என்னும் பெயர் கொடும்பாளூர் மன்னர் பூதி விக்கிரமகேசரியின் அடைமொழியை நினைவுபடுத்துகிறது. அவ்வாறெனின் இம்மன்னன் ஒருவழியில் முத்தரையருக்கும் ஒரு வழியில் கொடும்பாளூர் மன்னருக்கும் தொடர்புடையவனாக இருந்திருக்க வேண்டும் என்கிறார் நடன.காசிநாதன்.

## 4.4. முதலாம் பராந்தகன் - கி.பி. 907-955

திருக்கடைமுடி மஹாதேவர் கோயிலில் உள்ள மொத்தம் 28 கல்வெட்டுகளில் 18 கல்வெட்டுகள் மதிரை கொண்ட கோப்பரகேசரியான முதலாம் பராந்தகச் சோழனுடைய ஆட்சியாண்டைக் குறிப்பிடுவனவாகும். முதலாம் பராந்தகன் ஆதித்தசோழனின் மகனாவான். பராந்தகன் 48 ஆண்டுக்ள் சோழநாட்டை ஆட்சி செய்தான் என்பதை அவனின் 48-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. தன் தந்தை முதலாம் ஆதித்தனின் வெற்றிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டும், சோழப்பேரரசை விரிவுபடுத்தி நிலைப்படுத்தவும், தன் வாழ்நாள் முழுவதும் ஈடுபட்டிருந்தான். தனது தந்தையின் காலத்தில் நிறைவேறாத கனவாயிருந்த பாண்டிய நாட்டைக் கைப்பற்றுதலை இவன் தன் 3-ஆம் ஆட்சியாண்டில் மெய்ப்பித்தான். பாண்டியர்களோடு போரிட்டுக் கன்னியாகுமரி வரை பேரரசை விரிவுபடுத்தினான்.

## பாண்டியர்களுடன் போர்

பராந்தகன் தன் 3-ஆம்ஆட்சியாண்டின் தொடக்கத்திலேயே 'மதிரை கொண்ட கோப்பரகேசரி' என்ற பட்டம் வாங்கினான். ஆயினும் அவனது 24-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகளே பாண்டிய நாட்டில் கிடைத்துள்ளன. பராந்தகனது 12-ஆம் ஆட்சியாண்டின் இரு கல்வெட்டுகள் பாண்டிய, ஈழத்துப் படைகள் வெள்ளூர் போரில் சோழரிடம் தோற்றதைக் குறிப்பிடுகின்றன. வெள்ளூர் போரில் பாண்டிய, ஈழப்படைகளுக்கு எதிராகப் பராந்தகனோடு நின்று போர் புரிந்த பழுவேட்டரையர் கண்டன் அமுதனார் என்பவர் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் வகையில் கொடுக்கப்பட்ட தானத்தைக் குறிப்பிடுகிறது. இப்போர் கி.பி. 915-இல் நடைபெற்றிருக்கலாம். இவ்வெற்றியால் பாண்டிய நாடு சோழப் பேரரசோடு சேர்த்துக்கொள்ள வழி வகுத்தது. இதனைத் திருவாலங்காட்டுப் பட்டயம் உறுதிப்படுத்துகிறது. இப்போரில் தோல்வியுற்று ஈழத்திற்கு ஓடி ஒளிந்த பாண்டிய மன்னன் இராசசிம்மன் ஆவான். தென்குமரி முதல் நெல்லூர் மாவட்டத்தின் வடஎல்லை வரை பராந்தகனது சோழப் பேரரசு விரிந்து பரந்திருந்தது.

## ஈழம் மற்றும் வல்லம் போர்கள்

பராந்தகனது 37-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இவனை 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி' என்று குறிப்பிடுகிறது. பராந்தகன் மதுரையில் தன் வெற்றியைத் தொடர்ந்து, தோற்றோடிய பாண்டிய மன்னனின் மணிமுடியையும், மற்ற சின்னங்களையும் கைப்பற்ற எண்ணி ஈழத்தின் மேல் படையெடுத்தான். அப்பொருட்கள் இராசசிம்மனால் ஈழமன்னன் நான்காம் உதயன் (கி.பி. 945-53) வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆனால் நான்காம் உதயன் மணிமகுடத்தையும், மற்ற அரிய பொருட்களையும் எடுத்துக்கொண்டு ரோஹணாவுக்குச் சென்று மறைந்துவிட்டான். துரத்திச் சென்ற சோழர் படைப் பொருட்களைப் பெற இயலாமல் வெறுங்கையுடன் திரும்பிவிட்டது. ஈழப்படையெடுப்பு கி.பி. 944-ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டும்.

உதயேந்திர செப்பேடுகள் பராந்தகன் இரண்டு வாணர்குல அரசர்களை வென்று வாணகப்பாடி நாட்டை கங்கமன்னனாகிய இரண்டாம் பிருதிவிபதிக்கு வழங்கியதோடு, அவனுக்குச் செம்பியன் மாவலி வாணதிராயன் என்ற பட்டமும் அளித்தான் என்று கூறுகின்றன. சோளசிங்கபுரத்திலுள்ள பராந்தகனது ஆட்சியில் 9-ஆம் ஆண்டுக் கல்வெட்டு வல்லாள என்ற இடத்தில் நடைபெற்ற போரைக் குறிப்பிடுகிறது. வல்லாள என்ற ஊர் வாணர்களின் தலைநகராகிய வல்லமாக இருத்தல் வேண்டும்.

வல்லத்துப் போர் கி.பி.913-ஆம் ஆண்டிற்கு முன்னர் நடைபெற்றிருக்க வேண்டும். வாணர்கள் பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் மாவட்டம் வரையில் உள்ள வாணகப்பாடி நாட்டை 200 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்து வந்தவர்கள். இவர்களின் தலைநகரம் வல்லம், வாணபுரம் ஆகும். இவர்கள் பல்லவர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாய் இருந்தனர் என்பதைப் பல நடுகற்கள் மூலம் அறியலாம். பல்லவர்களை வென்ற சோழப்படைகள் அவர்களுக்கு அடங்கிய வாணர்களை அடக்குவது தேவையாயிற்று. வல்லம் போரில் வாணர்குல மன்னன் இரண்டாம் விஜயாதித்தன் இறந்ததால், அவன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தன் என்பவன் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணதேவனிடம் அடைக்கலம் புகுந்தான். பராந்தகன் ரேணாண்டு நாட்டை அரசாண்ட தெலுங்கர்களாகிய வைதும்பர்களைப் போரில் வென்றான் என்பது உதயேந்திர செப்பேட்டுச் செய்தியாகும்.

சீட்புலி என்பது நெல்லூர் மாவட்டத்தில் வடபகுதியில் இருந்த ஒரு நாடு. பராந்தகனது 36-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 941) இவன் படைத்தலைவன். சிறுகுளத்தூர் மாறன் பரமேசுவரன் செம்பியன் சோழியவரையன் என்பவன் சீட்புலியை வென்று நெல்லூரையும் கைப்பற்றினான் என்ற செய்தியைத் திருவொற்றியூர் கல்வெட்டுகள் கூறுகின்றன. கீழைச்சாளுக்கிய மன்னன் இரண்டாம் வீமனை வெற்றி கொள்ளவே இப்படையெடுப்பு நிகழ்ந்திருக்க வேண்டும்.

## பராந்தகனின் கோயில் திருப்பணிகள்

பராந்தகன் சிறந்த சிவபக்தன். தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்து அதனைப் பொன்னம்பலமாக்கியவன்.

"வெங்கோல் வேந்தன் தென்னாடும் ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லையம்பலம்"

என்று கண்டராதித்தசோழன் இச்செயற்கரிய பணியைப் பாடுகிறான்.

"கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றல்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்"

என்று ஒட்டக்கூத்தரும் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பராந்தகனின் காலம் 'தென்னாட்டுக் கோயில்களின் பொற்காலம்' எனக் கூறலாம். அவன் காவிரியின் கரையில் 42-க்கும் மேற்பட்ட கோயில்களை எடுப்பித்தான். கோயில் திருப்பணிகளில் தன் தந்தை ஆதித்தனை அவன் முழுவதும் பின்பற்றினான். திருவாவடுதுறை, திருச்செந்துறை, உறுமூர், திருவிடைமருதூர், திருச்சென்னம்பூண்டி, புள்ளமங்கை ஆகிய கோயில்களைக் கற்றளிகளாக்கினான்.

திருவாவடுதுறை கோயிலுக்கு அவனே நேர்நின்று 500 கழஞ்சு பொன் கொடுத்த செய்தியை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. புள்ளமங்கை கோயில் பராந்தகனின் போர் வெற்றியைக் குறிப்பிடும் ஜயத விமானம் கொண்டதாகும். மேலும் அக்கோயில் கல்வெட்டுகள் மூலம் உத்தரமேரூர் மகாசபை போல புள்ளமங்கையும் ஒரு மகாசபையென அறியமுடிகிறது.

மேலும் பராந்தகன் தனது தந்தை முதலாம் ஆதித்த சோழனுக்குத் தொண்டைமானாற்றூரில் ஆதித்தேச்சுரம் என்னும் பள்ளிப்படையை எடுப்பித்தான். அவனுடைய இவ்வரிய செய்கை பின்வந்த இராஜராஜப் பெருமன்னன் அரிஞ்சேச்சுவரம் என்னும் பள்ளிப்படையைக் கட்டுவிக்க முன்னோடியாக அமைந்தது எனில் மிகையில்லை.

## குடிகளைப் போற்றுதல்

நிலவுடைமைக் கொள்கை சோழர்கள் காலத்தில் பராந்தகன் ஆட்சியிலேயே தொடங்கியது எனலாம். கரையீடு, கரையாண்மை

மூலம் நிலத்தைப் பங்கீடு செய்து வேளாண்மை சிறக்கச் செய்வது அவனுடைய நோக்கமாக இருந்தது. சிதம்பரத்திற்கு மேற்கே காட்டுமன்னார் கோயில், வீரநாராயண சதுர்வேதிமங்கலம் மற்றும் அதன் வடக்கே வீரநாராயணன் ஏரி ஆகியவற்றை இவன் அமைத்தான். சோழசிங்கபுரத்திற்கு அண்மையில் சோழவாரிதி என்னும் ஏரி இவன் ஆட்சிக் காலத்தில் தோண்டப் பெற்றது. கிராமசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் குடவோலைமுறை உத்தரமேரூர் கல்வெட்டில் இவனது ஆட்சித்திறமையைப் பறைசாற்றுகின்றன.

## பராந்தகனது பட்டப்பெயர்கள்

வீரநாராயணன் என்ற சிறப்புப் பெயர் பல போர்களில் வெற்றி கொண்டதாலும், இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனைப் போரில் வென்றதால் வீரசோழன் என்ற பெயர் பெற்றதாகவும் கன்னியாகுமரி கல்வெட்டுக் கூறுகிறது. புலவர்களை அன்போடு ஆதரித்து வந்ததால் பண்டித வத்சலன், மற்போரில் வல்லவனாகவும், வலிமை மிக்கவனாகவும் விளங்கியதால் குஞ்சரமல்லன், இராமனைப் போல் ஈழநாட்டில் போர் நிகழ்த்தி வென்ற சங்கிராமராகவன், பாண்டிய நாட்டை வென்று இருமுடிச் சோழன் எனவும் பட்டங்கள் பெற்றான்.

## பராந்தகன் குடும்பம்

பராந்தகனுக்குத் தேவிமார் பலர் ஆவர். இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி என நான்கு புதல்வரும், வீரமாதேவி, அநுபமா என்ற இருமகளிரும் இருந்தனர். இராசாதித்தன் தாயாகிய கோக்கிழானடிகளே பட்டத்தரசியாக விளங்கியவள்.

அரிஞ்சயன் தாய் பழுவூரில் வாழ்ந்த கேரள மன்னனாகிய பழுவேட்டரையன் மகளாகிய அருமொழி நங்கையாவார். இத்தேவியாரின் பரிவாரமாகிய குணவன் சூரதொங்கி என்பவன் விளக்கெரிக்கக் கொடுத்த பதினாறு பொன்கழஞ்சினை, சடையார் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது (A.R.No.299/1901). இக்கல்வெட்டு பராந்தகச் சோழனின் 18-ஆவது ஆட்சியாண்டைக் குறிப்பிடுகிறது.

வில்லவன் மாதேவி, திரிபுவன மாதேவி, வளவன் மாதேவி, சோழசிகாமணி, சோழ மாதேவி, தென்னவன் மாதேவி ஆகியோர் மற்ற அரசிகள் ஆவர்.

இராசாதித்தன் தந்தை இருக்கும்பொழுதே தக்கோலப்போரில் உயிர் துறந்தான். மகள்கள் வீரமாதேவி இராஷ்டிரகூட மன்னன் நான்காம் கோவிந்த வல்லவரையனையும், அநுபமா கொடும்பாளூர் சிற்றரசன் பூதி விக்கிரமகேசரியையும் மணந்தார்கள்.

# கல்வெட்டுச் செய்திகள்

திருச்சென்னம்பூண்டி ஊரில் உள்ள திருக்கடைமுடிநாதர் கோயிலில் மொத்தம் 28 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் கல்வெட்டுகள் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினரால் கி.பி.1901-இல் படியெடுக்கப்பட்டுத் தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 7-இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் இடம்பெற்றுள்ள 28 கல்வெட்டுகளில் 18 கல்வெட்டுகள் முதலாம் பராந்தகன் காலத்தைச் சேர்ந்தவை. மேலும் தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கவர்மன், கோவிளங்கோ முத்தரையன் ஆகிய பல்லவ மற்றும் முத்தரைய மன்னர்களின் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும் இங்குள்ளன.

பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனின் மஹாதேவியான அடிகள் கண்டன் மாறம்பாவையார் விளக்கெரிக்கவும், விஷு திருவிழாவுக்கும் கொடுத்த இரண்டு நிவந்தக் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. பராந்தகனின் பட்டத்தரசியார் பழுவேட்டரையர் மகளார் நம்பிராட்டியார் அருமொழி நங்கையார் அளித்த விளக்குக் கொடை கல்வெட்டொன்று உள்ளது.

பெரும்பாலான கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு விளக்கெரிக்கக் கொடுத்த பொன்கழஞ்சினைப் பற்றிப் பேசுகின்றது. பராந்தகனின் புள்ளமங்கைக் கோயில் கல்வெட்டுகள் விளக்கெரிக்க நிவந்தங்களாக நிலத்தினைப் பெற்றுள்ளன. ஆனால் இக்கோயில் கல்வெட்டுகள் பெரும்பான்மையானவற்றில் பொன்கழஞ்சு நிவந்தமாகக் கொடுக்கப்பட்ட செய்தியைக் காணலாம். இக்கோயிலுக்கு மன்னரும், மக்களும் கொடுத்த அனைத்துக் கொடைகளும் பொன்கழஞ்சினையேப் பெற்றுள்ளன.

மாசிமகத் திருவிழாவிற்காக இரண்டு நிலக்கொடைகளும், திருவமுது செய்விக்க ஒரு வேலி நிலம் அளித்த கொடையும் ஆக மூன்று நிலக்கொடை கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன.

விளக்கெரிக்க அளிக்கப்பட்ட சாவாமூவாப் பேராடுகள் தொண்ணூறு உடைய மூன்று கல்வெட்டுகளும் தவிர, பிற கல்வெட்டுகள் கொடையாகப் பொன்கழஞ்சு அளிக்கப்பட்ட செய்திகளையே கூறுகின்றன.

## 5.1. கல்வெட்டில் இறைவன் பெயர்

இக்கோயிலில் குடிகொண்டுள்ள இறைவன் தென்கரை இடையாற்று நாட்டுத் திருக்கடைமுடி மஹாதேவர் என்றும், சில கல்வெட்டுகளில் தென்கரை இடையாற்று நாட்டுத் திருச்சடைமுடி மஹாதேவர் என்றும் குறிப்பிடப்படுகிறார். மேலும் இக்கோயிலின் பரிவாரதேவதையான திருச்சடைமுடி சண்டேசுவர தேவர் மாசிமகத் திருவிழா ஏழுநாளும் எடுப்பிக்கப்பெற்ற காணிக் கொடையைப் பற்றி மண்டபத்திலுள்ள ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

## 5.2. கல்வெட்டு காட்டும் ஊர்ப்பெயர்

திருக்கடைமுடி மஹாதேவர் கோயிலில் உள்ள அனைத்துக் கல்வெட்டுகளிலும் இக்கோயில் தென்கரை இடையாற்று நாட்டில் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்கரை என்பது வடகாவிரி என அழைக்கப்படும் கொள்ளிடத்திற்குத் தென்கரையாகும். ஏனெனில் இத்தலம் காவிரிக்கு வடகரையிலுள்ளது. எனவே கல்வெட்டில் குறிப்பிடப்படும் தென்கரை என்பது கொள்ளிடத்தையே குறிக்கிறது. இடையாற்று நாடாவது ஆற்றின் இருகரைகளுக்கு இடைப்பட்ட அல்லது இரு ஆற்றின் கரைகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதியைக் குறிக்கலாம்.

## 5.3. நாட்டுப்பிரிவுகள்

திருக்கடைமுடி மஹாதேவர் கோயில் கல்வெட்டுகளில் நாட்டுப்பிரிவுகளாகத் தென்கரை இடையாற்று நாடு, வடகரை மழநாடு, கிளியூர் நாடு, எயிநாடு, புறக்கிளியூர் நாடு, கொட நாடு, பாண்டி நாடு முதலியன குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் தென்கரை இடையாற்று நாட்டில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. இது கொள்ளிடத்தின் தென்கரையாகும். வடகரை மழநாடு காவிரியின் வடகரையில் அமைந்துள்ள நிலப்பகுதியாகும்.

கொல்லிமலையிலிருந்து திருமழபாடிவரை வடகரை மழநாட்டு எல்லை பரவியிருந்தது. மழவர்கள் நிறைந்த நாடு மழநாடு எனப்பட்டது. எயி நாடு பிரம்மதேயங்களைப் பெற்ற நாட்டுப்பகுதி எனலாம். நியமம் பகுதி எயி நாட்டில் உள்ள நிலப்பரப்பாகும். ஸ்ரீகண்டபுரம் எயிநாட்டின் தேவதான ஊராகும்.

## கூற்றங்கள்

இக்கோயில் கல்வெட்டுகள் கிலார்க் கூற்றம், கீழ் கூற்றம், ஆர்க்காட்டுக் கூற்றம் ஆகிய மூன்று கூற்றங்களைக் குறிப்பிடுகின்றது.

## கிலார்க் கூற்றம்

கிலார்க் கூற்றம் வடகரை மழநாட்டில் அமைந்த ஒரு கூற்றமாகும். வடகரை மழநாடு கொல்லிமலையிலிருந்து அன்பில் வரை பரவியிருந்தது எனலாம். மழநாடு என்பது கொல்லிமழவர்கள் ஆண்ட பகுதியைக் குறிக்கிறது.

மழவர் என்பது இளையவீரர்களைக் குறிப்பிடுவதாகும். ஒவ்வொரு குடியிலும் உள்ள இளையவீரர்கள் மழவர்கள் எனப்பட்டனர். பின்னாளில் இவ்வழக்கு மாறி மழவர்குடி என்று தனியாக இனங்காணப்பட்டது.

சங்ககால அரசர்களான வல்வில்ஓரி, அதியமான் ஆகியோர் மழவர் பெருமகன் என்ற பட்டப் பெயர் பெற்றவர்களாவர். காவிரியின் வடகரையில் அமைந்துள்ள இக்கூற்றம் வளமிக்க மருதநிலப்பகுதி எனக் கொள்ளலாம்.

## கீழ்க்கூற்றம்

கீழைக்கூற்றம் என்ற பொருளில் கிழக்குத்திசையில் உள்ள கூற்றத்தினைக் குறிக்கிறது. இக்கூற்றம் கிழார்க்கூற்றத்திற்குக் கிழக்கில் அமைந்திருந்திருக்கலாம்.

## ஆர்க்காட்டுக் கூற்றம்

ஆர்காடு-ஆத்திமரங்கள் நிறைந்த காடு என்ற பொருளில் வழங்கி வருகிறது. ஆத்திமலர் சோழர்களுக்குரியது என்பது அறிந்ததே. ஆர்க்காடு பாண்டிகுலாசனி வளநாட்டில் அமைந்துள்ள ஒரு கூற்றமாகும். இப்பகுதி வளம் நிறைந்ததும், காவிரியின் பொழில்

சூழ்ந்தும் விளங்கும் பகுதியாக முன்னர் இருந்தது. சங்க இலக்கியத்தில் குறுந்தொகையிலும், நற்றிணையிலும் இந்த ஆர்க்காடு பற்றி குறிப்பு வருகின்றது. குறுந்தொகை 258-ஆம் பாடலான ஆர்க்காட்டை விளக்கும் பாடலைப் பரணர் பாடியுள்ளார்.

"வாரல் எம்சேரி தாரல் நின்தாரே
அலரா கின்றால் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகொட் டியானைச் சேந்தன் தந்தை
அரியலம்பு கவின் அம் தோட்டு வேட்டை
நிறைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்கா டன்ன இவள்
பழிதீர் மாணலம் தொலைதல் கண்டே"

காவிரியாற்றில் நீராடும் துறைகள் பல உள்ளன. அத்துறைகளில் மருதமரங்கள் செழித்து வளர்ந்துள்ளன. அம்மரங்களில் யானைகள் கட்டப்பட்டுள்ளன. அந்த யானைகள் ஆர்க்காட்டுக்குத் தலைவனாகிய அழிசி என்பவனுக்கு உரிமையானவை ஆகும்.

அழிசி சேந்தனுடைய தந்தையாவான். அழிசியின் வீரர்கள் விலங்குகளை வேட்டையாடும் தொழிலைக் கொண்டவர்கள். பகைவர்களுக்கு நரக வாழ்வைப் போன்ற துன்பத்தைத் தரக்கூடியவர்கள். ஒளிமிக்க வாளினை உடையவர்கள். அவர்களுக்குத் தலைவனாக விளங்கியவன் அழிசி ஆவான் என்பது குறுந்தொகைப்பாடல் காட்டும் ஆர்க்காடும் அதன் தலைவனும் இருந்த நிலையாகும்.

நற்றிணை 190-ஆம் பாடல் 'தேங்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும் அரியலங் கழனி ஆர்க்காடு' என்று சுட்டுகிறது.

ஆர்க்காடு என்னும் ஊர் சங்ககாலத்தில் சேந்தன், அழிசி என்பவர்களால் பெருமை பெற்றிருந்தது என்பது இப்பாடல்களால் புலப்படுகின்றது. அழிசியின் பெயரால் ஆர்க்காட்டுக் கூற்றத்தில் அழிசிகுடி என்னும் ஊர் உள்ளது. ஆர்க்காட்டுக் கூற்றம் மேற்கே கல்லணை முதல் கிழக்கே திருவேதிகுடி வரை பரவியிருந்தது.

## 5.4. ஊர்ப் பிரிவுகள்

சடையார் கோயில் கல்வெட்டுகள் பல ஊர்ப் பிரிவுகளைச் சுட்டுகின்றன. இவற்றுள் அன்பில் சபையும், எயினாட்டு அட்டுப்பள்ளி நியமத்து அரிஞ்சிகைபுரம், எயினாட்டு தேவதானமான சிரிகண்டபுரம் முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் அரிஞ்சிகைபுரமும், சிரிகண்டபுரமும் தேவதான ஊர்களாகும். அரிஞ்சிகைபுரம் பூதி அரிந்திகை என்னும் முத்தரையர் அரசியின் பெயரில் அமைந்ததாகக் கருத இடமுண்டு. இத்தேவியார் தென்னவன் கோவிளங்கோ முத்தரையனின் தாயாகலாம். சடையார் கோயிலில் காணப்படும் இம்மன்னனின் கல்வெட்டொன்று 'எயிநாட்டு அட்டுப்பள்ளி நியமத்து அரிஞ்சிகைபுரம்' என்று குறிப்பிடுகிறது.

சிரிகண்டபுரம் ஸ்ரீகண்டன் என்னும் தெலுங்குச் சோழ மன்னன் ஒருவன் பெயரிலும் உள்ள தேவதானங்களாகக் கருத இடமுண்டு. இவன் முதலாம் ஆதித்தனுக்கு முந்தைய காலத்தவனாகவும், மூன்றாம் நந்திவர்மனின் காலத்தில் இப்பகுதிக்குக் கொடையளித்தவனாகவும் கருதலாம். சோழர்களுக்கு மிகுந்த விருப்பமான நியமப்பகுதியில் இவ்விரு தேவதானப் பகுதிகளும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கிளியூர் நாட்டுப் புளியங்குடி, ஆர்க்காட்டுக் கூற்றத்துப் படைஏவிய தத்தக்குடி, மேற்கடம்பங்குடி, சுரைக்குடி முதலிய குடிப்பெயர்களுடைய ஊர்களும் இக்கோயில் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

மேலும் சிற்றாயல் வட்டம், கச்சிப்பேடு, வடகரை மழநாட்டு செம்புறை கண்டம், பாண்டி நாட்டு சாளக்கிராமம், புறக்கிளியூர் நாட்டு புன்கனூர், கீழ்மாந்தூர் முதலிய ஊர்களும் சுட்டப்பட்டுள்ளன. இவற்றுள் கச்சிப்பேடு என்பது காஞ்சிபுரத்தைக் குறிக்கும். தொண்டைமண்டலத்திலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திண்டியன் என்பவன் நிருபதுங்கவர்ம பல்லவன் காலத்தில் இக்கோயிலுக்குத் திருவாதிரை மற்றும் திருக்கேட்டை நாளில் இறைவன் அபிஷேகத்திற்குப் பத்து பசுக்களை நிவந்தமாக வழங்கியுள்ளான். (A.R.No. 300/1901)

குடி சேரி என்னும் சேரிப்பகுதியும் இக்கோயில் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

# கல்வெட்டில் அரசியல்

திருக்கடைமுடிநாதர் கோயிலைப் பொறுத்தவரை மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கவர்மன் ஆகிய பல்லவ மன்னர்களின் கல்வெட்டுகளும், கோவிளங்கோ முத்தரையன், முதலாம் பராந்தகச் சோழன் முதலிய முத்தரையர் மற்றும் சோழ மன்னர்களின் கல்வெட்டுகளும் காணக்கிடைக்கின்றன.

**கல்வெட்டில் குறிக்கப்படும் மன்னர்கள்**

## மூன்றாம் நந்திவர்மன்

1. தெள்ளாற்றெறிந்த நந்திப்பொத்தரையர்க்கு யாண்டு 18-ஆவது... 283 / 301/303/1901

## நிருபதுங்கவர்மன்

1. கொவிசைய நிருபதொங்க விக்கிரமபருமர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது... 300/1901
2. ஸ்வஸ்திஸ்ரீ கொவிசைய நிருபதொங்க விக்கிரமபருமர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது நாள் பதினொன்றினால். . . 301/1901
3. ஸ்வஸ்திஸ்ரீ கொவிசைய நிருபதொங்க விக்கிரமபருமர்க்கு யாண்டு எட்டாவது... 303-A/1901
4. ஸ்வஸ்திஸ்ரீ கொவிசைய நிருபதொங்க விக்கிரமபருமர்க்கு யாண்டு இருபத்திரெண்டாவது... 303-C/1901

## தென்னவன் கோவிளங்கோ முத்தரையன்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொ விளங்கொமுத்தரையற்கு யாண்டு 14-ஆவது ... 303-D/1901

## முதலாம் பராந்தகச் சோழன்

1. கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு இரண்டாவது'..—— 282.1901, 2-ஆவது'- 295.1901

2. மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மர்க்கு யாண்டு 27-வது' -284.1901, 30வது'- 285, 290,296.1901, 34-வது'- 286,287.1901, 18-வது'- 288.1901, 20-வது'- 291.1901, 35-வது'- 292.1901, 29-வது'- 293.1901, 26-வது'- 294.1901, 14வது... 298.1901, 8வது... 299.1901,

### பல்லவர் காலத்து விளக்குக் கொடைகள்

தேவாரப் பாடல்பெற்ற திருத்தலமான திருக்கடைமுடி மஹாதேவர் கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னதாகவே வழிபாட்டில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அக்காலத்தில் இக்கோயில் செங்கல் தளியாகவே இருந்திருக்கும். ஏனெனில், பல்லவர் காலத்துக் கல்வெட்டுகள் இக்கோயிலில் கற்றூண்களிலேயே காணப்படுகின்றன. முதலாம் பராந்தகன் காலத்திலேயே இக்கோயில் கற்றளியாய் எடுப்பிக்கப்பட்டது என்பதை இதன் விமானத்தின் அதிட்டானத்தில் உள்ள கல்வெட்டுகள் பராந்தகன் காலத்தைச் சேர்ந்தவையாய் இருப்பதால் அறியலாம்.

அங்ஙனம் தூணில் உள்ள பல்லவ மன்னன் நிருபதுங்க வர்மனின் 22-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, 'ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய நிருபதொங்கவன் மற்கு இருபத்திரண்டாவது நாள் பதினொான்றினால் கொட நாடுடைய வெட்டுவதியரையர் திருக்கடைமுடி மாதெவர்க்கு நொந்தா விளக்கெரிப்பதற்கு குடுத்த பொன் பன்னிருகழஞ்சு இது பன்மாயெஸ்வர ரக்ஷெ.' என்பதாக ஒரு நொந்தா விளக்கெரிக்க கொடநாடு வேட்டுவதியரையரிடமிருந்து 12 பொன் கழஞ்சினைப் பெற்றதாக கூறுகிறது (A.R.No.301/1901).

இம்மன்னனின் 18-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, (A.R.No.303-A/1901) ஸ்ரீகண்டபுரத்துத் தேவனார் மகள் நக்கங்காளி என்பவள் இக்கோயில் இறைவற்கு ஒரு நொந்தா விளக்கெரிப்பதற்கு வைத்த செம்பொன் 12 கழஞ்சும் ஸ்ரீகண்டபுரத்து பெருஞ்சேரியார் கைவசம் ஒப்படைக்கப்பட்டு இதன் பொலிசையால் (வட்டி) நாளும் உழக்கு நெய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

நிருபதுங்கனின் 22-ஆவது ஆட்சியாண்டில் மேற்கண்ட கல்வெட்டுச் செய்தி போலே ஸ்ரீகண்டபுரத்து பெருஞ்சேரியார் கைவசம் ஒப்படைக்கப்பட்ட பொன் பன்னிரு கழஞ்சும் ஒரு நொந்தா விளக்கெரிப்பதற்காக திண்டியூர் சிலயன் கொடுத்ததாகும் (A.R.No.303-C/1901).

### ௬.1. தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் கொடை

சடையார் கோயிலில் உள்ள தூண் கல்வெட்டொன்றில் மூன்றாம் நந்திவர்மனின் பட்டத்தரசியான அடிகள் கண்டன் மாறம்பாவையார் மாசிமகத் திருவிழாவிற்கு அளித்த கொடையொன்று குறிக்கப்படுகிறது.

இத்தேவியார் முத்தரையரின் மகளாக இருக்கவேண்டும். ஏனெனில் கண்டன் மாறன் என்பது முத்தரைய மன்னனைக் குறிக்கிறது. மேலும் முத்தரையர்களின் தலைமைப்பகுதியான நியமம் இக்கோயிலுக்கு அருகிலேயே உள்ளது. எனவே தன்னுடைய பிறந்த இடத்தில் அமைந்த திருக்கோயிலுக்கு இவ்வம்மையார் மாசிமகத் திருவிழா நடைபெற நிவந்தம் அளித்திருக்கலாம். மேலும் இந்நிவந்தம் சிரிகண்டபுரம் அறுகை வணிகம் கைவ்வழி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிரிகண்டபுரம் மாறன் கண்டம் என்ற முத்தரைய மன்னன் பெயரால் அமைந்த தேவதானமாகும். தன் தந்தையின் பெயரில் அமைந்த தேவதான ஊரான சிரிகண்டபுரத்து அறுகை வணிகரிடம் கைவ்வழியாகக் கண்டன் மாறம்பாவையார் நிவந்தம் அளித்திருக்கலாம்.

> '. . . . .த்தி . . . முடிமஹாதெவற்கு மாசிமகந் திருவிழா வெடுப்பதற்க்கு சந்திராதித்தவற் பல்லவதிலக குலத்து நந்திப்பொத்தரையர் மஹாதெவியாரான அடிகள் கண்டன் மாறம்பாவையார் வைத்த பொன் பதினெழு கழஞ்செகால் இப்பொன்னில் முதல் விழா எடுக்குநான்று எழுகழஞ்சு பொன்னா லொராண்டில் கழஞ்சின்வாய் கலவரிசியாக . . . . .'

என நீண்டு செல்லும் இக்கல்வெட்டில் மாசிமகத் திருவிழா ஏழுநாட்கள் நடைபெறவேண்டும் என்பதும், ஒவ்வொரு நாளும் இறைவன் திருமேனியாடவும், திருவமுது செய்யவும் நெய், பால், தயிர், அரிசி, காய்கறிகள், பழங்கள் முதலியன அளவுகளொடு சொல்லப்பட்டுள்ளது. மேலும் திருவிழாக் காலத்தில் பிராமணர்க்கும், அடிகள்மாருக்கும் உணவளிக்க வேண்டுமென்பதும் காட்டப்பட்டுள்ளது.

இந் நிவந் தமானது எயிநாட்டு தேவதானமாகிய சிரிகண்டபுரத்தின் அறுகை வாணிகர் கைவ்வழி வைத்ததாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

எயிநாட்டு தேவதானம் சிரிகண்டபுரத்தின் அறுகை வணிகரிடம் கைவ்வழியாகக் கொடுக்கப்பட்ட மற்றொரு நிவந்தக் கல்வெட்டும் இத்தேவியாரால் விஷுத் திருநாளுக்காக அளிக்கப்பட்டதாகும். ஐப்பசி மற்றும் சித்திரைத் திங்களின் விஷுத் திருநாளில் இறைவன் திருமேனியாடவும், திருவமுது செய்யவும் மற்றும் பிராமணர், பணியாட்கள், அடிகள்மார் ஆகியோர் உண்பதற்குமாகவும் கொடுக்கப்பட்ட கொடையைக் கூறுகிறது.

## 6.2. முத்தரையர் கால கொடை

> 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோ விளங்கோ முத்தரையற்கு யாண்டு 30-ஆவது எயினாட்டு அட்டுப்பள்ளி நியமத்து அறிஞ்சிகைபுரத்து தெவனார் மகள் நக்க .... வைத்த பொன் பந்நிரு கழஞ்சு இப்பொன் பந்நிரு கழஞ்சினுக்கு நொந்தா விளக்கு எரிப்பதற்கு ப ....' (A.R.No.303-D/1901)

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் நியமப்பகுதி முத்தரையர்களின் வரலாற்றினை கல்வெட்டுகளாகப் பெற்ற பகுதியாகும். பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறன் என்பவன் கட்டிய பிடாரி கோயில் நியமத்தில் அமைந்திருந்தது. இக்கோயில் அழிவுற்றபோது முத்தரையர் வரலாற்றுச் செய்தியைத் தாங்கிய கல்வெட்டுத்தூண்கள் செந்தலையில் உள்ள கோயிலுக்கு விசயநகர மன்னர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

எயிநாட்டுப் பிரிவைச் சேர்ந்த அட்டுப்பள்ளி நியமத்து அரிஞ்சிகைபுரம் என்ற ஊரைச் சார்ந்த தேவனார் என்பவர் மகள் நக்கந் நக்கன் என்பவளால் விளக்கெரிக்க, பொன் பன்னிரு கழஞ்சு கோ இளங்கோ முத்தரையரின் 13-ஆவது ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டது.

### 6.3. பராந்தகன் காலத்து விளக்குக் கொடைகள்

திருக்கடை முடிநாதர் கோயில் கல்வெட்டுகளின் சிறப்பு யாதனில் அதிக விளக்குக் கொடைகளைப் பெற்றிருப்பதே ஆகும். நீர்நிலை தலமாதலின் விளக்கேற்றுதல் இங்குச் சிறப்புப் பெற்றிருக்கலாம்.

சடையார் கோயிலின் நுழைவாயில் இடதுபுறம் உள்ள கல்வெட்டொன்று, 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு 2-வது திருக்கடைமுடி மஹாதேவர்க்கு வெளார் மகளார் கொழம்பத்தடிகள் சூளை ஓலை கற்பகம் ஒரு பகல் விளக்கினுக்கு வைத்த பொன் அறு கழஞ்சு பன்மாஹேஸ்வர ரக்ஷை.' என்று கற்பகம் என்ற பெண் ஒரு பகல் விளக்கெரிக்க ஆறு கழஞ்சு பொன் வைத்த செய்தியைக் கூறுகின்றது (A.R.No.282/1901).

மேற்படி மன்னனின் 14-ஆவது ஆட்சியாண்டில் இக்கோயிலில் ஒரு பகல் விளக்கினுக்குப் புறக்கிளியூர் நாட்டு மேற்கடம்பங்குடி ஊர்கிழத்தி சிராமன் என்பவனின் மூத்தாள் பொன் ஏழு கழஞ்சு அளித்துள்ளாள்.

நுழைவாயிலின் வலப்புறமுள்ள மூன்றாம் நந்திவர்மனின் 18-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (A.R.No.283/1901) இரண்டு நொந்தா விளக்கெரிக்க அன்பில் சபையோரால் கொடுக்கப்பட்ட பொன் அறுபதின் கழஞ்சு பலிசை ஊட்டினால் (வட்டிக்கு விடப்பட்டு அதன் வருவாய் கொண்டு விளக்கெரித்தல்) அருச்சிப்போர் கையிலே ஒப்படைக்கப்பட்டதைப் பற்றிப் பேசுகின்றது.

மதிரைகொண்ட கோப்பரகேசரியின் 20-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டானது, வடகரை மழநாட்டுக்

கிலார்க்கூற்றத்து கீழ்கூற்றத்து பிரம்மதேயமான அன்பில் பாரதாயனத்தனங்காளி வைத்த பொன் 15 கழஞ்சும், ஆறு மஞ்சாடியும் குன்றியும் கொண்டு நெய் விளக்கு இரவும் பகலும் எரிக்க ஏற்பாடு செய்யப்பட்டதையும், நிலைவிளக்கு ஒன்று அப்பெண்ணால் கொடுக்கப்பட்டதையும் காட்டுகின்றது (A.R.No.284/1901).

மதிரை கொண்ட கோப்பரகேசரியான பராந்தகனின் 30-ஆம் ஆட்சியாண்டில் சகோதரன் ஒருவன், தன்னுடைய உடன் பிறந்தாள் கூற்றன்தேவி என்பாளுக்காக நொந்தா விளக்கெரிக்க பொன் ஆறு கழஞ்சினை (A.R.No.285/1901) அளித்துள்ளான். மேலும் மேற்கண்ட அரசனின் 34-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று (A.R.No.286/1901) இக்கோயில் மகாதேவர்க்கு கொகிளங்குலையின் கிழக்கே உள்ள குடிசேரியைச் சேர்ந்த ஆற்றில் விடும் ஓடத்திற்கு உரிமையாளனும், முன்னூற்று அரையர்களின் வழியைச் சேர்ந்தவனுமாகிய கணதான் அடவி என்பான் ஒரு நொந்தா விளக்கெரிக்க 12 பொற்காசும், 3 காசு விலையுள்ள நிலைவிளக்கு ஒன்றும் வழங்கியுள்ளான்.

அதே ஆட்சியாண்டின் மற்றொரு கல்வெட்டு (A.R.No.287/1901) பாண்டிய நாட்டு சாளக்கிராமம் என்னும் ஊரைச் சேர்ந்த விமலாங்குஸன் இடர்நீக்கி என்பவனுடைய மணவாட்டி கலிவாள சிங்கி என்பவள் ஒரு நொந்தா விளக்கெரிக்க 10 பொன் காசு நிவந்தமாக வைத்துள்ளதைப் பகர்கிறது. கலிவாள சிங்கியின் பெயருக்கு முன்னால் கிளியூர் நாட்டுப் புளியங்குடி உடையாள் என்று அவளுடைய பிறந்த ஊர் காட்டப்பட்டுள்ளது.

ஆட்சியாண்டு சிதைந்துள்ள பராந்தகன் காலக் கல்வெட்டு (A.R.No.289/1901) திருச்சடைமுடி மகாதேவர்க்கு ஒரு நொந்தா விளக்கெரிக்க 12 பொன்னும், ஐந்து சாண் நீளமுள்ள நிலைவிளக்கு ஒன்றும் அளித்த ஆற்காட்டுக் கூற்றம் படைஎவிய தத்தகுடி என்னும் ஊரைச் சேர்ந்த தத்தகுடானாகிய குழகவட்டன் என்பவனைக் குறிப்பிடுகிறது.

பராந்தகச் சோழனின் 30-ஆவது ஆட்சியாண்டில் இரவும் பகலும் எரியும் (நொந்தா) விளக்குக் கொடை எயிநாட்டு தேவதான ஊராகிய ஸ்ரீகண்டபுரத்து தேவனார் மகள் கொடுத்தது. அவள் பெயரும், கொடுத்த கொடையும் தெரியவில்லை (A.R.No.290/1901).

## 6.4. பராந்தகன் பட்டத்தரசியின் கொடை

அர்த்தமண்டப தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டொன்று, 'ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கொப்பரகெசரி பன்மற்கு யாண்டு ௰௪-வது இடையாற்றுநாட்டித் திருச்சடைமுடி மஹாதெவர்க்கு சந்திராதித்ததரளவும் ஒரு முழுத் திருவிளக்கினுக்கு பழுவெட்டரையர் மகளார் நம்பிராட்டியார் அருமொழிநங்கையார் பரிவாரம் குணவன் சூரதொங்கி வைத்த பொன் பதின் அறு கழஞ்சு பொன்னாலும் இரவும் பகலும் நொன்தா விளக்கு எரிவதாக வ திருக்கொடிக்கு நம்பன் . . . .. சும் செயிற்றி . . . தாயன் பரமெசுரவன் ஸூ. . . . . நெயும் பாலும் தயிரும் அட்டிஅருள வைத்த பொன் மு . . . . ருபதின்கழஞ்சு பொ. . . .வதா .. . . . ர் சவை௰யொம் . . . பொன்னுக்கு விற்றுக்கு' என்று கூறுகிறது.

பழுவேட்டரையர் மகளான நம்பிராட்டியார் அருமொழிநங்கையார் என இக்கோயில் கல்வெட்டில் குறிக்கப்படும் பராந்தகனின் தேவியார் அருமொழி நங்கையாரின் பரிவாரம் (பணியாள்) குணவன் சூரதொங்கி என்பவன் அப்பிராட்டியாரின் பெயரில் ஒரு முழுத்திருவிளக்கினுக்குப் பதினாறு பொன்கழஞ்சு கொடுத்துள்ளான். மேலும் நொந்தா விளக்குக்கும், இறைவன் ஆடியருள நெய், பால், தயிர் அட்டி அருள வைத்த பொன் இருபது கழஞ்சும் தாயன் பரமேசுவரன் என்பவனால் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவனும் பராந்தகன் தேவியாரின் பணியாளாக இருக்கலாம்.

அந்நாளில் பணியாட்களும், மக்களும், அதிகாரிகளும் கோயில்களுக்குத் தங்கள் அரசன் மற்றும் அவர்தம் பிராட்டியார் பெயரில் நிவந்தம் அளித்தல் மரபாக இருந்ததை இக்கல்வெட்டு சுட்டுகின்றது.

# கல்வெட்டு சொல்லும்...
# சமூக நிலை

திருக்கடைமுடிநாதர் கோயில் கல்வெட்டு கி.பி. 7-10-ஆம் நூற்றாண்டுகளில் கோயில்கள் சமூகத்தில் பெற்றிருந்த ஏற்ற நிலையை எடுத்தியம்புவனவாக உள்ளன. ஆற்றங்கரையோரத் தலங்களில் மக்கள் கூடுவதும், நீரோடு தொடர்புடைய விழாக்களைக் கொண்டாடுவதும் வழக்கத்தில் இருந்தமையை இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட மாசிமகத் திருநாள் நிவந்தங்களிலிருந்து அறியமுடிகிறது.

இக்கோயிலின் பெரும்பாலான கல்வெட்டுகள் விளக்கெரித்தலுக்குக் கொடுக்கப்பட்ட பொன்கழஞ்சினைப் பற்றியே கூறுவதால், விளக்கெரித்தல் சமுதாயத்தில் இன்றியமையாததாக விளங்கியதையும், சமய எழுச்சியினால் இந்நம்பிக்கை ஒரு சடங்காக வழிவழியாக பின்பற்றி வந்தமையையும் அறியலாம்.

பரகேசரி பராந்தகனின் 18 கல்வெட்டுகள் இங்கு உள்ளன. இவன் தேவியார் பெயரும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசன் கோயில்கள் மேல் கொண்டிருந்த பற்றினையும், அவ்வழியே குடிகள் கோயிலுக்கு விளக்கெரித்தலும் நல்லதொரு ஆட்சி நடைபெற்றதையே காட்டுகிறது.

இக்கோயிலின் கல்வெட்டுக்களை நோக்குங்கால் பல்வேறு சாதிப்பிரிவுகளைச் சார்ந்த மக்களும், அரசு அதிகாரிகளும் கொடையளித்துள்ளது தெரிகிறது. எந்தச் சாதியைச் சேர்ந்தவராயினும் இறைவனின் திருக்கோயிலின் முன் அனைவரும் ஒன்றேயென்ற ஓங்கிய தத்துவம் பண்டு நிலவியிருந்தற்கு இதுவே சான்றாகும். மேலும் உடன்பிறந்தாளுக்காகச் சகோதரன் தந்த நிவந்தமும், மாமனுக்காக மருமகன் கொடுத்த நிவந்தமும் நோக்குகையில் சமூகத்தில் குடும்பத்தின் ஒற்றுமை நிலையை உணர முடிகிறது.

மேலும் அன்பில் சபையோரும், சிரிகண்டபுரத்து அறுகை வணிகரும் இந்நிவந்தங்கள் ஒழுங்காக நடைபெற உதவியுள்ளனர். சபைகள் மூலமே ஊர்ப்பகுதிகளில் ஆட்சி நடைபெற்றதையும், நிலங்களை வாங்குதலும், விற்றலும் சபை மூலமே செய்யப்பட்டதும் தெரிகின்றது. சமூகத்தில் பெண்கள் ஓரளவு ஏற்ற நிலை பெற்றிருந்தனர் என்பதைப் பெண்கள் நேரடியாக இக்கோயிலுக்கு விளக்கெரிக்க கொடுத்த கொடைகள் தெரிவிக்கின்றன.

## 7.1. விளக்கு ஏரித்த பெண்கள்

திருக்கடைமுடி மஹாதேவர் கோயிலில் அளிக்கப்பட்ட அதிகமான விளக்குக் கொடைகளை நோக்குங்கால், அவை அதிகமாகப் பெண்கள் பெயர்களைக் கொண்டிருக்கும் என்பதில் வியப்பேதுமில்லை.

அரசகுடும்பத்துப் பெண்களான மூன்றாம் நந்திவர்மனின் மஹாதேவியார் அடிகள் கண்டன் மாறம்பாவையார் மற்றும் பராந்தகச் சோழனின் பட்டத்தரசியார் பழுவேட்டரையர் மகளார் அருமொழிநங்கையார் இருவரும் இக்கோயில் மேல் கொண்டிருந்த பற்றினை இவர்கள் அளித்த விளக்குக் கொடையும், மாசிமகத் திருநாள் ஏழுநாள் நடத்தவும், விஷுத்திருநாள் நடைபெறவும் அளித்த பொன்கழஞ்சுக் கொடைகளுமே விளக்கும்.

வேளார் மகளார் கொழும்பத்தடிகள் சூளை ஓலை கற்பகம், அன்பில் பாரதாயனத்தனங்காளி, சாளக்கிராமத்து இடர்நீக்கியின் மணவாட்டி புளியங்குடி உடையாள் கலிவாள சிங்கி, வீரமல்லன் மணவாட்டி கொற்றபிராட்டி, இராமன் மணவாட்டி சாக்கைக்குடான் துலங்காமதன் பெற்றாள், ஊர்கிழத்தி சிராமன் மூத்தாள், நக்கன், சிரிகண்டபுரத்துத் தேவனார் மகள் நக்கங்காளி ஆகிய இப்பெண்கள் யாவரும் திருக்கடைமுடி நாதருக்கு விளக்கெரிக்கக் கொடை கொடுத்தவர்கள் ஆவர். மேலும் இப்பெண்கள் யாவரும் மேட்டுக்குடியைச் சார்ந்த பெண்களாகவே காணப்படுகின்றனர்.

பெண்கள் கோயில்களில் விளக்கேற்றுதல் ஆண்டாண்டு காலமாக நடைபெற்றுவரும் மரபாகும். விளக்கும் பெண்ணும் குடியை விளங்கச் செய்பவை என்பது பழங்காலந்தொட்டு இருந்து வரும்

நம்பிக்கையாகும். இவ்வகையில் சடையாருக்குப் பெண்டுகள் அளித்துள்ள விளக்குக் கொடைகள் அவர்களின் சடங்கு நம்பிக்கையினைக் குறிப்பதாக உள்ளது. மேலும் பெண்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தனர். அவர்களின் பெயராலேயே கொடுக்கப்பட்ட நிவந்தங்களே இதற்குச் சான்றாக விளங்குகின்றன.

## 7.2. கொடையளித்த ஆண்கள்

கொகிளங்குலை கீழ் ஒடமுடையான், சாளக்கிராமத்து விமலாங்குஸன் இடர்நீக்கி, வீரநாராயண மூவேந்த வேளாண், குழக வட்டன், தத்தகுடான் தாமோதிரன், குணகள்வன் வீரமல்லன், ஆதித்தபிடாரன், சிற்றுவக்குடான் தளநம்பன், இராமன், பாண்டங்கண்டராபரணன், உபாஸகன் ஒமயின்தன், சைற்றியன் தாயநான தீரன், குணவன் சூரதொங்கி, அறுகைவணிகன் குமரனழியா நிலை, பெருஞ்சேரியார், விசையாபுரத்து நிலங்குறர் ஆகிய ஆண்மக்களும் கொடையளித்துள்ளனர்.

## 7.3. சாதிப்பிரிவுகள்

திருக்கடைமுடிநாதர் கோயிலில் உள்ள கல்வெட்டுகளில் வரும் பெயர்கள் மூலம் அக்காலத்தில் சமூகத்தில் நிலவிய சாதிப் பிரிவுகளைப் பற்றி அறியலாம். வேளார் (குயவர்-மட்பாண்டம் செய்பவர்) சமூகத்தைச் சார்ந்த ஒருவர் இக்கோயிலுக்கு விளக்கெரிக்கக் கொடையளித்துள்ளார். வேளார் மகளார் கொழம்பத்தடிகள் சூளை ஓலை கற்பகம் என்பவர் ஒரு பகல் விளக்கினுக்கு அறுபது பொன் கழஞ்சினைக் கொடுத்துள்ளாள் (A.R.No.282/1901).

மேலும் இக்கோயிலுக்கு வடகரை மழநாட்டு செம்புறை கண்டத்து குடானாயின வீரநாராயண மூவேந்த வேளாண் என்பான் ஒரு நொந்தா விளக்கெரிக்க, தொண்ணூறு சாவாமூவாப் பேராடுகளை அளித்துள்ளான். (A.R.No.288/1901) வீரநாராயணன் என்பது முதலாம் பராந்தகனின் பட்டப்பெயர்களுள் ஒன்றாகும். இக்கல்வெட்டில் வரும் வீரநாராயண மூவேந்த வேளாண் பராந்தகன் ஆட்சிக்காலத்தில் பணிபுரிந்த அரசு அதிகாரியாக இருக்கலாம்.

குமரனழியா நிலை என்பவன் அறுகை வாணிகன் ஆவான். அறுகை வணிகம் என்பது துணி வியாபாரத்தைக் குறிக்கிறது. உபாஸகன் ஓமயின்தன் அனன்தசயநமிதுணி ஆகிய சுவரங்கணத்தான் என்ற பெயருடையவன் பிராமணக் குலத்தைச் சேர்ந்தவனாய் இருக்கலாம். இதில் வரும் சுவரங்கணத்தான் என்பது முத்தரையன் சுவரன்மாறன் பெரும்பிடுகு என்பவனின் பெயரில் வரும் சுவரன் என்ற பொருளில் பயின்று வருவதாகும். குணகள்வன் வீரமல்லன் என்பவன் ஒரு படைவீரனாய் இருக்கலாம். இவன் மறவர் இனத்தைச் சேர்ந்தவன் எனலாம்.

இராமன், அனந்தசயனமிதுணி, ஸ்ரீராமன், தாமோதிரன், வீரநாராயணன் என்பன போன்ற புராணப்பெயர்களைக் கொண்டவர்கள் வைணவப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவற்றுள் வீரநாராயணன் என்பது பராந்தகனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். இவன் காலத்து அதிகாரி ஒருவனே இப்பெயரைக் கொண்டுள்ளான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கற்பகம், பாரதாயனத்தனங்காளி, கலிவாளசிங்கி, கொற்றபிராட்டி, நக்கங்காளி, நக்கந் நக்கன் போன்றவை சைவ மற்றும் சாங்கிய சமய தெய்வப் பெயர்களாய் இருக்கின்றன. அரசு அதிகாரியான ஆதித்தபிடாரன், குழகவட்டன், பாண்டங்கண்டராபரணன் முதலியன சிவப்பெயர்களாய்த் தெரிகின்றன. சாக்கைக்குடான் துலங்காமதன் என்பவன் பெயரில் பயின்று வரும் சாக்கை என்பது சாக்கைக் கூத்தினைக் குறிக்கலாம்.

### 7.4. மாசிமக விழா

மாசித்திங்களில் வரும் மகம் நட்சத்திரத்தன்று பௌர்ணமியும் வரும் நாளன்று கோயில்களில் சிறப்பு விழாக்கள் நடைபெறுவது தொன்றுதொட்டு மரபாக உள்ளது. அந்நாளில் புனித நீராடல் செய்தல் சிறப்பாகக் கருதப்படுகிறது. கடல், கோயிலில் உள்ள குளம், மற்றும் கரைகளில் திருத்தலங்கள் அமைந்த ஆறு முதலிய நீர்நிலைகளில் நீராடலும், இறையுருவங்களை அங்கு எழுந்தருளச் செய்து நீராட்டலும் முக்கிய சமயச்சடங்காக அந்நாளில் செய்யப்படுகிறது.

திருமயிலைப் பதிகத்தில் மாசிக்கடலாட்டு விழாவினைப் பற்றித் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார்.

'மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆனேறு ஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்'

மயிலைப்பெருமான் கபாலீச்சுவரரை மாசி மகத்தன்று கடலுக்கு எழுந்தருளச் செய்வித்து, கடலாட்டு செய்விக்கும் சிறப்பான விழாவினைக் காணாது உயிர்துறந்த பூம்பாவையை விளித்துக் கூறுகிறார்.

கும்பகோணத்தில் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசி மகாமகம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று புனிதநீராடல் சிறப்பு. திருக்கடைமுடிநாதர் கோயிலில் மாசி மக விழா ஏழுநாட்கள் சிறப்பாக நடைபெற்றதாக இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கொள்ளிடத்தின் தென்கரையில் அமைந்துள்ள இத்தலம் தீர்த்தச் சிறப்பினைப் பெற்று விளங்குவதால் இங்கு மாசி மக விழா பண்டு சிறப்புடன் கொண்டாடப்பட்டுள்ளது.

'த்திரு.....முடிமஹாதெவற்கு மாசிமகந் திருவிழா வெடுப்பதற்க்கு சந்திராதித்தவற் பல்லவதிலக குலத்து நந்திப்பொத்தரையர் மஹாதெவியாரான அடிகள் கண்டன் மாறம்பாவையார் வைத்த பொன் பதினெழு கழஞ்செ கால் இப்பொன்னில் முதல் விழா எடுக்குநான்று எழுகழஞ்சு பொன்னா லொராண்டில் கழஞ்சின்வாய் கலவரிசியாக எழுகலவரிசியால் திருமேனியாட நெய் பால் தயிர் ஐஞ்ஞாழிச் செதும் இளநிர் இருபது அகநாழிகைபரி பார மடங்கத் திருவமிர்தரிசி முக்குறுணியும் திருமிர்துந் திருவிளக்குந் நெய் நாழி தயிர் இருநாழி அமிர்து கறி சற்கரை வாழைப்பழம் அடைக்காயிருபதும் இப்படி யாராதிப்பிக்கவும்...மிக்கவரிசி கொண்டு ப்ராமணரும் அடிகள்மாரும் உண்டு திருவிழா வெடுத்து மிக்க பொன்னில் இருகழஞ்சுபொன்னாற் பவிசை

யாண்டுவரை அரைக்கழஞ்சினால் நிசதி நறும்பூ நூறு வட மொரிலைச்சாந்தும் எழு நாளிடுவிதாக நின்ற பொன்னில் கழஞ்செ காலால் பவிசை ஓராண்டில் பன்னிருநாழியுரிய் நெய்யால் பிராம்மணரும் அடிகள் மாரும் உண்பதாக நிறை எழுகழஞ்சு பொன்.............'

மேற்கண்ட கல்வெட்டு 56 அடிகளைக் கொண்ட மிக நீண்ட கல்வெட்டாக மாசி மக விழாவுக்காகப் பல்லவ அரசி அடிகள் கண்டன் மாறம்பாவையார் கொடுத்த பதினேழு கழஞ்சினைப்பற்றியும், ஏழுநாள் மாசி மக விழாவின்போது திருவமுது செய்விக்கும் முறை பற்றியும், அவ்விழாவின்போது பிராமணரும் அடிகள்மாரும் உண்பதற்காகச் செய்யவேண்டிய வகையும் பற்றிக் கூறுவதாக உள்ளது. சந்திராதித்தவரை இவ்விழாவினை இவ்வாறு குறைவின்றி நடத்தவேண்டிய பொறுப்பினை எயிநாட்டு தேவதான ஊரான சிரிகண்டபுரத்தைச் சேர்ந்த அறுகை (துணி) வணிகர்களிடம் ஒப்படைக்கப்பட்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது. (A.R.No.301A/1901)

மாசிமக விழா கொடைக்கான மற்றொரு கல்வெட்டு,

'ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரைகொண்ட கொப்பரகெசரி பன்மர்க்கு யாண்டு ....யாற்றுநாட்டுத் திருச்சடைமுடி சண்டெஸ்வரதெவர்க்கு கிளியூர்னாட்டு சபையோம் எங்கள் பொதுநிலமாயிந காலெய் காணியு....கிளியூர்நாட்டு கீழ்க்கூற்று ருடெயானக்க ணாதித்தபிடாரன் மாசிமகத் திருவிழாவுக்கு நிசத எழுநாளும் உண் சண்டெஸ்வரர் பெரால் விலைகொண்ட நிலத்தில் ப்ராஹ்மணற்கு நாயர்க்காணிக்கு நிலையம் ப....ணிரட்டுவதற்கு ஒருமா காய்க்கறி புளிங்கறி பொறிகறி தயிரமுது . . . ழி நெ . . . செலுத்துவொமாநொம் எழு நாளும் சந்திராதித்தவற் தேவகன்மிகளுக்கு. . . தாநத்செ....த்தி இப்படி செய்வ்வொமாநொம் இவ்வனைவொம் இது பந்மாஹெஸ்வர ரசைக்ஷ இது ரசக்ஷித்தார் ஸ்ரீபாதம் என் தலை மெலெண' (A.R.No.293/1901).

இக்கல்வெட்டு கிளியூர்நாட்டு சபையோர் தங்கள் பொதுநிலம் கால் காணியை அந்நாட்டு கீழ்க்கூற்றத்தைச் சேர்ந்த ஆதித்த பிடாரன் என்பவனுக்காக இக்கோயில் சண்டேஸ்வரர் பெயரால் விலைகொண்டு மாசிமகத் திருவிழாவுக்கு நித்தம் ஏழுநாளும் கோயில் தேவகன்மிகளுக்கு உண்பிக்க நிவந்தம்அளித்தான் என்று கூறுகிறது.

## 7.5. மாமனுக்காக மருமகன் கொடுத்த கொடை

முதலாம் பராந்தகனின் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று, உபாஸகன் ஒமயின்தன் அனன்தசயநமிதுணி ஆகிய சுவரங்கணத்தாநுக்காக அவன் மருமகன் சைற்றியன் தாயநான தீரன் என்பவன் மாசிமகத் திருவிழாவிற்குக் கொடுத்த நிலக்கொடையைப்பற்றி பேசுகின்றது.

'ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு 20-வது தென்கரை இடையாற்றுநாட்டுத் திருச்சடைமுடி மஹாதேவர்க்கு இஸ்ரீகோயில் உபாஸகன் ஒமயின்தன் அனன்தசயநமிதுணி ஆகிய சுவரங்கணத்தாநுக்கு ஆக இவன் மருமகன் சைற்றியன் தாயநான தீரன் மாசிமகத் திருவிழாவிற்த் திருவாதிரை நாள் எம்பெருமாள் ஆடிஅருள நெய் முன்நாழியுன் தையிர் முன்னாழியும் பால் முன்நாழியும் ஆள்வார் அமுதுசெதுஅருள பழவரிசி கலநெல் இருதூணிப் பதக்கும் தையிரமிது முக்குறுணியும் நெய் முன்நாழியும் எண்ணை நாழியும் கறியமுது 20 சற்கரை 10-பலம் வாழைப்பழம் 60 அடைக்காயமுது 80 சிதாரி 10 பலம் ச்செண்பகம் எண்சாநிளத்து இட்ட ஒரிலைச்ச . . . டைக்கும் வெள்கோவனுக்கும் அக புறகிளியூர் நாட்டு பாம்பார சபையோரிடை விலை கொண்ட நிலம் ஒரு மா இ ஒருமாவிநாற் வன்த இறையும் எச்சொறுஞ் சென்னிர் வெட்டியு மற்றும் எப்பேறப்பட்டதும் இறைஇலி காத்துகுடுப்பதாகவும் இதற்றிம்பிற பன்மாஹேஸ்வர ரசைக்ஷ இருபது பொன் தண்டமிட்டு மறியுங் குடுப்பதாகவும் விற்றுகுடுத்த . . . களும்

இத்தாநத்தொமும் இப்படி செலுத்துவொமானொம் இது . . ன் சந்திராததித்தவற் வைத்து தம் மாமனுக்காக இது ரக்ஷித்தார் ஸ்ரீபாதம் மென் றலை . . . ஸ்வர ரக்ஷை.' (A.R.No.296/1901)

மாசிமகத் திருவிழாவின்போது திருவாதிரை நாளில் எம்பெருமான் அபிடேகத்திற்குத் தேவையான நெய், தை, பால் முதலியனவும், திருவமுது செய்தருள இன்னின்ன பொருட்கள் இவ்வளவு இருத்தல் வேண்டும் என்பதுவும் இக்கல்வெட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிவந்தமானது தன் மாமனுக்காய் மருமகன் ஒருவன் வைத்த வேண்டுதலைக் காட்டுகிறது.

## 7.6. விஷுத்திருநாள் நிவந்தணங்கள்

விஷுத் திருநாள் என்பது புத்தாண்டு நாளாகும். சித்திரை முதல் நாளும், ஐப்பசி முதல் நாளும் விஷுத் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. அதாவது ஆண்டிற்கு இருமுறை இத்திருநாள் பண்டு வழக்கத்திலிருந்துள்ளது. விஷு கனிபார்த்தல் என்பது புத்தாண்டை வரவேற்கும் நிகழ்வாக இன்றும் மலையாள நாட்டில் நடைபெற்று வருகிறது.

நந்திப் பொத்தரையர் மஹாதேவியார் அடிகள் கண்டன் மாறம்பாவையார் திருக்கடைமுடி மஹாதேவர் கோவிலுக்கு ஐப்பசி மற்றும் சித்திரைத் திருநாளில் அபிஷேகம் செய்வதற்கு வைத்த பொன் அறு கழஞ்சினைப் பற்றி இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது.

'க்கு பல்லவதில குலத்து நந்திப்பொத்தரையர் மஹாதேவியாரான அடிகள் கண்டன் மாறம்பாவையார் வைத்த பொன் அறு கழஞ்செ காலால் பூவில் கழஞ்சின்வாய் யரைக்கால்ப் பொன்னாக வந்த பவிசை பூவில் முக்காலெ ஐஞ்சுமா இப்பொன் கொண்டு ஐப்பிகை விஷுவும் சித்திரை விஷுவும் திருமெனியாட நெய் பால் தயிர் ஐஞ்ஞாழிச் செய்தும் பரிபார மடங்க திருவமிர்தரிசி பதக்கு நானாழி இவ்வெல்லை இளநிர் வாழைப்பழஞ் சற்கரை இருபது செய்தும் நறும்பூச் சாந்து குங்கிலியமுங் கொண்டாராதிக்கவும் இந்நாளால்

ப்ராஹ்மணர் ஐம்பதின்மரும் திருக்கோயில் பணிசெய்யும் மாணிகள் ஐவரும் அடிகள்மாரும் பணிசெய் மக்களும் உண்பதாக வைத்தென் எய்யினாட்டுத் தெவதானம் சிரிகண்டபுரத்து அறுகைவாணிகர் இப்படி அறுதிங்கள் வார மாராய்வதாக வைத்தென் கண்டன்மாறம்பாவையென் இது பன்மாஹெஸ்வர ரக்ஷை.'

பல்லவதேவியாரே விஷுத் திருநாளில் இறைவன் ஆடியருளவும்,. திருவமுது செய்யவும் கொடுத்த பொன் அறு கழஞ்சினை, சிரிகண்டபுரத்து அறுகை வாணிகர் வசம் ஒப்படைத்த செய்தியும், இந்நாளில் ஐம்பது பிராம்மணர்களுக்கும், திருக்கோயில் பணி செய்வோர் ஐவருக்கும், அடிகள்மாருக்கும், பணிசெய் மக்களுக்கும் உணவளிக்க வேண்டுமென்ற கட்டளையையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

மேற்கண்ட கல்வெட்டுகள் வாயிலாக மாசி மக விழா, விஷு நாள் போன்றவை வெகு விமரிசையாக அன்றைய நாளில் சமூகத்தில் நடைபெற்றதும், பொதுமக்களும், அரசகுலமும் அவ்விழாக்களில் பங்கெடுத்தமையும் தெரிகின்றது. மேலும் விழாக் காலங்களில் பிராமணர்கள், அடிகளார், பணிபுரிவோர் முதலியோருக்கு உணவிடுதல் வேண்டும் என்பதிலிருந்து கோயில்களில் பண்டுமுதல் அன்னதானம் நடைபெற்றதையும் அறியலாம். மாசிமகம், விஷு நாளில் பிராமணர்கள் ஐம்பது பேருக்கு உணவளிக்கப்படுகிறது. இது பிராமணர்களுக்கு சமூகத்தில் மக்கள் அளித்த ஏற்றத்தினைக் காட்டுகிறது. கோயில்களுக்குப் பிராமணர்களின் பங்கும் இன்றியமையாததாக இருந்ததையே இது உணர்த்துகிறது.

இக்கல்வெட்டில் வரும் உணவு வகைகளைப் பார்க்கையில், சமூகத்தில் மக்களின் உணவு முறையையும், மேலும் வகைப் படுத்தப்பட்ட உணவு வகைகள் அவர்களின் செழிப்புத் தன்மையையும் காட்டுகின்றது. பழவரிசி, நெய், பால், தயிர், சர்க்கரை, வாழைப்பழம் முதலிய உணவுப்பட்டியலைக் கோயிலுக்குக் கொடுத்த மக்களின் உணவுப் பழக்கவழக்கமும் அவ்வகையிலேயே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# பொருளாதார நிலை

ஒரு நாட்டின் பொருளாதார நிலையை அந்நாட்டின் வணிகமும், விளைச்சலும், இயற்கை வளமும் நிர்ணயிக்கின்றன எனலாம். அவ்வகையில் திருக்கடைமுடிநாதர் கோயில் கல்வெட்டுகள் இப்பகுதியின் பொருளாதார நிலை மிகுந்த ஏற்றத்தில் அமைந்திருந்ததையேக் காட்டுகின்றன. வணிகப் பொருளாதாரம் மிகுந்துள்ள நிலையை அறுகை வணிகர் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன.

மேலும் விளக்கெரிக்கக் கொடுக்கப்பட்ட நிவந்தங்கள் யாவும் பொன் கழஞ்சினைப் பெற்றுள்ளன. இரண்டு கல்வெட்டுகள் மட்டுமே நிலத்தினைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. பொன் கழஞ்சு, காசு முதலியன அதிகப் புழக்கத்தில் இருந்ததைக் குடிகளும் பொன்னையே தானமளித்ததிலிருந்து அறியலாம். பொன் மற்றும் காசு வணிகம் அதிகம் நடைபெறுவதன் மூலமே புழக்கத்தில் கிடைக்கும். நிலக்கல்வெட்டுகள் அதிகம் இல்லாமையால் நிலம் பொதுவாக இருந்திருக்கலாம். கரையாண்மை மூலமாக ஆண்டுக்கு ஒருமுறை குடிகளிடம் மாற்றப்பட்டு, அனுபவிக்கும் உரிமை மட்டும் கொண்டதாக இருந்திருக்க வேண்டும். எனவேதான் அதிகமாக நிலம் வாங்கி மற்றும் விற்ற கொடைகளை இக்கல்வெட்டுகளில் காணஇயலவில்லை.

காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையாற்று நாடாக விளங்கிய இக்கடைமுடி மிகுந்த நீர்வளத்தினையும், நிலவளத்தினையும் பெற்று விளங்கியுள்ளது. முல்லையும் மருதமும் சேருமிடமாக இக்கடைமுடி பண்டு விளங்கியிருக்க வேண்டும். இரண்டு கல்வெட்டுகள் இக்கோயில் இறைவனுக்கு நெய், பால், தயிருக்காக வழங்கப்பட்ட சாவா மூவாப் பேராடுகளைப் பற்றிப் பேசுகின்றன. மற்றொரு கல்வெட்டு பசுதானத்தைக் குறிப்பிடுகிறது.

பொருளாதார வளர்ச்சியில் கால்நடைகளும் மிக முக்கிய பங்கு வகிப்பவனவாதலால் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட கால்நடை நிவந்தங்களும் சிறப்பிற்குரியவையே.

### 8.1. சாவா மூவாப் பேராடுகள்

திருக்கோயிலில் விளக்கெரிப்பதற்குத் தேவையான நெய்யைப் பெறுவதற்காக ஆடு மாடுகளை நிவந்தமளிப்பது மரபு. பெரும்பாலும் மாடுகளை விட ஆடுகளே அதிக அளவில் அவ்வாறு விடப்பட்டுள்ளன. அவற்றின் எண்ணிக்கையும் பெரும்பாலும் தொண்ணூறாகவே கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இந்த எண்ணிக்கையில் சிறப்பும் உள்ளது. கோயிலுக்கு வழங்கப்பட்ட 90 ஆடுகள் வழிவழியாகப் பெருக்கப்பட்டுக், கோயிலுக்குத் தேவையான நெய்யை வழங்குவதற்காக வளர்க்கப்படும். எனவே இவை சாவாமூவா பேராடுகள் எனக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன.

திருக்கடைமுடி மஹாதேவர் கோயிலில் உள்ள மூன்று கல்வெட்டுகள் சாவாமூவா பேராடுகள் இக்கோயிலுக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன.

> 'ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு 18-ஆவது இடையாற்று நாட்டு திருக்கடைமுடிப் பெருமானடிகளுக்கு வடகரை மழநாட்டு செம்புறை கண்டத்து கொமான் குடானாயின விரநாராயண முவெந்தவெளானாயின சு . . . .சந்திராதிதவற் . . . விளக்கினுக்கு . . . . . பெராடு தொ . . . . . மா யெ . . . ' (A.R.No.288/1901).

பரகேசரியின் 18-ஆவது ஆட்சியாண்டில் திருக்கடைமுடி இறைவனுக்கு வடகரை மழநாட்டு செம்புறை கண்டத்து தலைவன் குடான் ஆகிய வீரநாராயண மூவேந்தவேளாண் என்னும் பராந்தகனின் அரசு அதிகாரி விளக்கெரிக்க 90 ஆடுகளைக் கொடுத்துள்ளான்.

இம்மன்னனின் 2-ஆவது ஆட்சியாண்டில் திருவிளக்கொன்றிற்கு புறக்கிளியூர்நாட்டுப் புன்கனூர் என்ற

ஊரைச் சேர்ந்த பாண்டங்கண்டராபரணன் என்பவன் வைத்த சாவாமூவா பேராடுகள் தொண்ணூறும் பன்மாஹேஸ்வர ரக்ஷை என்று கல்வெட்டில் (A.R.No.295/1901) கூறப்பட்டுள்ளது.

மேலும் 30-ஆவது ஆட்சியாண்டில் இத்தேவர்க்குப் புறக்கிளியூர் நாட்டு கீழ்மாந்தூரைச் சேர்ந்த நக்கந் நக்கன் என்பவன் ஒரு சந்திராதித்தவரை ஒரு நொந்தா விளக்கெரிக்க 90 சாவாமூவாப் பேராடுகளை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. மேலும் நிலைவிளக்கு, செப்புவிளக்கு, செப்புக்குடம் இவையும் அளிக்கப்பட்டன. நிலைவிளக்கின் நீளம் 5 சாண் அளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 8.2. கோதானம்

திருக்கோயிலில் இறைவன் அபிஷேகத்திற்கும், திருவமுது செயவதற்கும் நெய், பால், தயிர் முதலியன பெறுவதற்காகப் பசுக்கள் கொடையாக வழங்கப்படுதல் மரபு.

> 'கொவிசய நிருபதொங்கவிக்கிரம பருமர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது திருக்கடைமுடிமஹாதெவர்க்கு கச்சிபெட்டு திண்டிக்கு ஆதித்தன்நும் சந்திரநும் உள்ளளவும் திங்கள் தொறு நாள் உவாவும் திருவாதிரையும் திருக்கெட்டையும் இம்மூன்று நாளும் பாலும் நெய்யும் தயிரும் ஆடவைத்த பசு பத்து இவை பன்மாயெஸ்வர ரக்ஷை இவை காப்பான் பாத தலை மெலன.'

கடைமுடி இறையனார்க் கோயிலுக்குப் பல்லவ மன்னர் நிருபதுங்கவர்மன் ஆட்சிக்காலத்தில் மாதந்தோறும் பௌர்ணமி, திருவாதிரை, திருக்கேட்டை ஆகிய மூன்று நாட்களிலும் இறைவன் நெய், பால், தயிர் கொண்டு ஆடியருள பசுக்கள் பத்து கொடையாக வழங்கப்பட்டுள்ளதை மேற்கண்ட கல்வெட்டு சுட்டுகின்றது (A.R.No.300/1901).

## 8.3. அளவைகள்

இக்கோயில் கல்வெட்டுகள் பெரும்பாலும் விளக்கெரிக்கப் பொன் கொடுத்த கொடைகளைக் குறிப்பனவாகவே உள்ளதால்

'கழஞ்சு' என்ற அளவைச் சொல் அதிகக் கல்வெட்டுகளில் பயின்று வருகிறது. மேலும் மஞ்சாடி, குன்றி முதலிய சிறிய பொன் அளவைகளும் இரு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. விளக்கெரிக்க நெய் முகத்தலளவைகளாக உழக்கு, ஆழாக்கு முதலியன குறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலைவிளக்குகளின் நீளம் 'சாண்' என்னும் அளவையால் குறிக்கப்படுகின்றன.

கிளியூர் நாட்டுச் சபையாரின் பொதுநிலமானது அச்சபையோரால் திருக்கடைமுடிநாதர் கோயில் சண்டேசுவர தேவர்க்கு மாசி மகத் திருவிழாவின்போது திருவமுது செய்வித்தற் பொருட்டுக் காணி நிலம் வழங்கப்பட்டுள்ளது. மா என்னும் நில அளவையும் இங்கு இடம்பெற்றுள்ளது. மேலும் மாசி மகத் திருவிழாவின் போது திருவாதிரை நாளில் எம்பெருமான் ஆடியருள நெய், பால், தயிர் முதலியன மூன்று நாழி வழங்கியதாகக் கல்வெட்டொன்று பேசுகின்றது. மேலும் சற்கரை, வாழைப்பழம், அடைக்காயமுது முதலியன 'பலம்' என்னும் அளவையாலும், அரிசி, நெல் முதலியன 'கலம்' என்னும் அளவையாலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 8.4. விளக்குக்குப் பொன்

இக்கோயிலில் விளக்கெரிக்கப் பொன் அதிக அளவில் கொடுக்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இந்நிலையைக் காண்கையில் பொன் அதிகமாகப் புழக்கத்தில் இருந்ததை அறியக்கூடும். மேலும் பொன்னின் அளவினைக் கொண்டே ஒரு நாட்டின் பொருளாதார நிலையை அன்னியச் செலாவணியாக நிர்ணயிக்கிறது. வணிகம் செழித்திருந்தமையை இப்பொன்கழஞ்சுகளின் பயன்பாட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

வடகரை மழநாட்டுக் கிலார்க்கூற்றத்திற்குக் கிழக்குக் கூற்றமான அன்பில் பிரம்மதேயம் ஊரினைச் சேர்ந்த தனங்காளி என்ற பெண் ஒரு நொந்தா விளக்கெரிக்க, பொன் 15 கழஞ்சும், ஆறு மஞ்சாடி குன்றியும் அளித்துள்ளாள் (A.R.No.293-A/1901).

பராந்தகனின் 26-ஆவது கல்வெட்டு (A.R.No.294/1901) அர்த்தமண்டபத் தென்புறச்சுவரில் உள்ளது. சிற்றாயல் வட்டத்து சிற்றுவக்குடான் தளநம்பன் இராமவெ... என்பவனது மணவாட்டி புறக்கிளியூர் நாட்டுச் சாக்கைக்குடான் துலங்காமதன் பெற்றாள் என்பவள் ஒரு நொந்தா விளக்கினுக்கு 12 பொன்கழஞ்சினைக் கொடுத்துள்ளாள்.

மேலும் இம்மன்னனின் 35-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, குணகள்வன் வீரமல்லன் மணவாட்டியாகிய கொற்றபிராட்டி நித்தமும் எரியும் விளக்கிற்கு வைத்த பொன் ஆறு கழஞ்சினைக் குறிப்பிடுகிறது.

# கோயில் அமைப்பும் தோற்றமும்

திருக்கடைமுடிநாதர் கோயில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தகச் சோழனால் கற்றளியாக்கபட்டது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இக்கோயில் வழிபாட்டில் இருந்திருக்க வேண்டும் என்பது தேவாரப் பாடலினால் அறியலாம்.

காவிரியின் கரைகளில் பராந்தகச் சோழன் எடுப்பித்த 42க்கும் மேற்பட்ட கற்றளிகளுள் இதுவும் ஒன்றாகும். பல்லவர் காலத்தில் இக்கோயில் செங்கல் தளியாய் இருந்திருக்கலாம். பல்லவ மன்னர்களான மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கவர்மன் மற்றும் கோவிளங்கோ முத்தரையர் இவர்கள் காலக் கல்வெட்டுகள் தூண்களிலேயே காணப்படுகின்றன. அர்த்தமண்டப வெளிப்புறச் சுவரிலும், விமான அதிட்டானத்திலும் பராந்தகனது 18 கல்வெட்டுகள் உள்ளன. இது மேற்கண்ட செய்தியை உறுதிப் படுத்துவதாக அமைந்துள்ளது.

திருக்கடைமுடியார் கோயில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இக்கோயில் முன்பு பராமரிப்பு இன்றி மண்மேடிட்டு இருந்திருக்க வேண்டும். சிதிலமடைந்திருந்த கோயிலின் பல கட்டிட உறுப்புகளும், சிற்பங்களும் கிடைக்காத நிலையிலும் தொல்துறையினர் திருப்பணி செய்திருப்பதால் இக்கோயிலின் முந்தைய அமைப்பினை நாம் சற்று யூகித்து உணரலாம்.

சடையார் கோயில் தற்போது மக்கள் வழிபாடின்றி இருப்பதால் பலிபீடம், கொடிமரம் முதலியன காணப்படவில்லை. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் இவற்றோடு கூடிய சுவாமி சந்நிதியும், பிற்காலத்தில் கட்டப்பட்ட செங்கல்தளியான அம்மன் சந்நிதியும், சண்டேசுவரர் ஆலயமும் பெற்று விளங்குகிறது. இதில் சண்டேசுவரர் ஆலயம் மிகுந்த சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

## ௯.1. இறைவன் கருவறை

திருக்கடைமுடிநாதரின் கருவறை சதுர வடிவமானது. அரைத்தூண்களுடன் கூடிய நுழைவாயிலைக் கொண்டுள்ளது. கருவறையின் மேற்புறம் கற்கூரை கொண்டு மூடப்பட்டு மேலே முழுவதும் கற்றளியான இக்கருவறை விமானம் நாகர பாணியாக இருக்கலாம். இரண்டு தளங்களைக் கொண்டதாகவும் விளங்கியிருக்க வேண்டும். இக்கருவறையின் மையப்பகுதியில் இறைவன் சடைமுடிநாதர் இலிங்கத் திருமேனியராய்த் திகழ்ந்திருக்கிறார். வட்டவடிவ ஆவுடையாரின் மேல் இலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்திய இலிங்கமாக, பெரிய அளவாக உள்ளது. ஆவுடையார் பிற்காலத்தில் மாற்றப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. தற்போது சடையார் அம்மன் சந்நிதியில் காணப்படுகிறார்.

## ௯.2. அர்த்தமண்டபம்

கருவறையை அடுத்துள்ள அர்த்தமண்டபம் செவ்வக வடிவத்துடன் விளங்குகிறது. இருபுறமும் அரைத்தூண்களைப் பெற்று விளங்கும் நுழைவாயிலுடன் கூடிய இம்மண்டபத்தில் நான்கு சோழர்காலத் தூண்கள் உள்ளன. வெட்டுப்போதிகை பெற்றும், பதினாறு பட்டைகளைக் கொண்டும் இத்தூண்கள் அமைந்துள்ளன.

## ௯.3. மகாமண்டபம்

இம்மண்டபத்தின் தாங்குதளத்துடன் மட்டுமே காட்சியளிக்கிறது. தூண்களோ, சுவர்களோ அற்ற நிலையில் மகாமண்டபம் கிழக்குப்புறத்தில் செங்கல்படிகளைக் கொண்டுள்ளது. பண்டு இம்மண்டபம் கல்வெட்டுகள் பெற்ற தூண்களைப் பெற்று விளங்கியிருக்கக்கூடும். இக்கல்வெட்டுத் தூண்கள் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் மற்றும் கோவிளங்கோ முத்தரையர் ஆகியோரின் கல்வெட்டுகளைப் பெற்றிருக்கலாம். மண்டபச் சிதிலத்திற்குப் பின் அவை தனித்தனியாகக் கிடக்கின்றன.

### 9.4. அம்மன் கருவறை

அம்மனுக்கு அமைக்கப்பட்ட சிற்றாலயமானது செங்கல் தளியாகும். வடகிழக்கு மூலையில் தெற்கு நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. மூன்று தளங்களைக் கொண்டதாகவும், நாகர பாணியாகவும் உள்ளது. ஒரு சிறிய சதுர வடிவ கருவறை மற்றும் அதனினும் சற்றுப் பெரிய வடக்கு-தெற்காக நீண்ட அர்த்தமண்டபம் கொண்டதாகக் காணப்படுகிறது. இக்கருவறை பிற்காலக் கட்டடமாகும்.

### 9.5. சண்டேசர் கருவறை

செங்கற்களால் ஆன இக்கருவறையும் காலவெள்ளத்தில் மறைந்துள்ளது. ஆனால் வடபுறத்தில் சண்டேசருக்குத் தனியாக கருவறை அமைக்கப்பட்டிருந்த தடயங்கள் உள்ளன.

மேலும் இக்கோயில் திருச்சுற்றும், மதிற்சுவரும் பெற்று விளங்கியிருக்க வேண்டும். இதற்கான கட்டட இடிபாட்டுத் தடயங்களையும் இங்கு காணமுடிகிறது.

கடைமுடிக் கோயிலைப் பொறுத்தவரை பல்லவ, முற்காலச் சோழருக்குப் பிறகு பிற்காலப் பேரரசுகளின் திருப்பணிகள் எதுவும் பெற்றிருக்கவில்லை. கட்டடப் பாணியிலும் பிற்காலத் தாக்கம் எதுவுமில்லை. பஞ்சத்தால் கடைமுடி ஊர்மக்கள் இடம் பெயர்ந்ததால் இக்கோயில் கவனிப்பாரற்றுப் போயிற்று. ஆயினும் பராந்தகனின் கற்றளிக்குக் காலம் இன்னும் கைகொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதையும் உணரமுடிகிறது.

# கட்டடக் கலை

முதலாம் பராந்தகனின் கற்றளியாக விளங்கும் இக்கோயில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் விளங்கிய கட்டடக்கலை அமைப்பைப் பெற்றுள்ளது. அக்காலத்தில் காவிரிக்கரையில் கட்டப்பட்ட பல கோயில்கள் இவ்வமைப்பைப் பெற்றிருந்தாலும் அவை ஒவ்வொன்றும் தனக்கே உரிய தனித்தன்மையையும் பெற்று விளங்குவதையும் காணமுடிகிறது. அத்தகைய கட்டுமானம் பெற்ற சடையார் கோயில் பராந்தகனின் கட்டடக்கலை அமைப்பைப் பறைசாற்றுவதாகவே காணப்படுகிறது.

## 10.1. விமானம் பொதுத் தோற்றம்

தாங்குதளம் அகழி அமைப்புடையதாக உள்ளது. உபபீடமற்ற நிலையில் அதிட்டானத்தில் இருந்தே தாங்குதளம் தொடங்குகிறது. அதிட்டானப்பகுதி நாற்புறமும் குழிவாக, பள்ளப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் அகழி போன்ற தோற்றம் பெற்றுள்ளது. இக்கோயில் இரண்டு தளங்களையுடைய நாகர பாணி விமானத்தை உடையதாக இருந்திருக்கலாம். கடைமுடிநாதர் கருவறை விமானம் தற்போது முழுமையாக இல்லை. விமானத்தின் தளங்களில் சிற்றுருவங்கள் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. கருவறை சதுர வடிவம் பெற்றுக் கிழக்கு நோக்கியதாக அமைந்துள்ளது. எனினும் இரண்டு தளங்களிலும் கர்ணக்கூடு, பஞ்சரம், சாலைப் பத்திகள் அமைந்துள்ளன. ஆனால் இவற்றிலும் சிற்பங்கள் காணப்படவில்லை.

## 10.2. விமான கட்டிட அமைப்பு

நீர் தேங்குவதற்கான நாற்சதுர வடிவக் குழிவில் அதிட்டானம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு முற்கால சோழர்கலைப் பாணியாகும். உபானம், ஜகதி, இரு பத்மவரிகளுக்கிடையே அமைந்த விருத்தகுமுதம், கம்புகளுக்கிடையேயான கண்டப்பகுதியின் பாதங்களில் இராமாயணக் காட்சிகளின்

புடைப்புச் சிற்பங்கள் சிற்றுருவங்களாகவும் மற்றும் கபோதத்தின் முனைகளிலும், தேவகோட்டத்தின் மையப்பகுதியிலும் வள்ளிமண்டலமும் அமைந்துள்ளன. அடுத்து, யாளிவரிசை நேர்நோக்கில் ஒன்றன்பின் ஒன்றாகவும், ஒன்றையொன்று நோக்கியும் காணப்படுகின்றன. யாளிவரிசையின் முனைகளில் திறந்த யாளியின் வாயில் வீரர் உருவம் உள்ளது. தொடர்ந்துள்ள வேதிகையின் கண்டப்பாதங்களில் சிவபுராணச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரு கம்புகளுக்கிடையே இவை உள்ளன.

முகமண்டபம் மற்றும் கருவறையின் தாங்குதளத்தின் வெளிப்புறத்தில் இவை காணப்படுகின்றன. சுவர்ப்பகுதியில் அமைந்துள்ள தேவகோட்டங்களும், கோட்டப்பஞ்சரங்களும் முன்னோக்கி நீட்டம் பெற்றதாகச் சோழர்காலத் தனிப்பட்ட கலைப்பாணியைக் காட்டி நிற்கின்றன.

கோட்டப்பஞ்சரங்கள் இங்கு இரண்டு வகையாக உள்ளன. பத்ம ஜகதியைக் கொண்ட நிஷ்காந்த பஞ்சரம் சிறப்பாக அமைக்கப்பட்டும், அகழி அமைப்பின் மேல் அமைக்கப்படும் தாங்குதளத்தின் பத்ம ஜகதியானது நீரில் மிதக்கும் தாமரையைப் போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது.

அரைத்தூண்களைப் பெற்றுள்ள சுவர்ப்பகுதியானது தரங்கப்போதிகையுடன் உத்தரத்தில் இணைகிறது.

கூரைப்பகுதியானது வலபி, பூதவரி, கம்பு, கபோதம், கபோதத்தில் சந்திரமண்டல வரிசை மற்றும் முனைகளில் வள்ளிமண்டலம், கூடுமுகம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

கூரைப்பகுதியைத் தொடர்ந்து தளஅமைப்பில் கம்புகளின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள யாளிவரி, வேதிகையின் கண்டப்பகுதியில் கொடிக்கருக்கு வேலைப்பாடுகள் உள்ளன. இந்தத் தொகுதி தள அமைவிற்குத் தாங்குதளமாக அமைகிறது.

கர்ணக்கூடு, அகாரை-2, சாலா-2, அகாரை-2, கர்ணக்கூடு என எட்டுப்பத்திகளாக முதல்தளம் அமைந்துள்ளது. இரண்டாம் தளம் காணக்கூடவில்லை. கிரீவப்பகுதியின் நான்குபுறமும் இரண்டிரண்டு நந்திகளாக எட்டு நந்திகள் அமைக்கப்பட்டிருக்கக் கூடும். தற்சமயம் வடபுறம் மட்டும் இரண்டு நந்திகள் உள்ளன.

## 10.3. அதிட்டானச் சிற்பங்களில் அமைவு

அதிட்டானத்தின் கண்டப்படையில் சிறு சிறு சதுரவடிவில் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கண்டப்படை சிற்பங்கள் இராமயணக் காட்சிகள் மற்றும் சிவலீலைகளை விளக்குவனவாக அமைந்துள்ளன. அதிட்டானத்தில் அமையும் வகையில் இப்புடைப்புச் சிற்பங்கள் ஆதித்தன் காலத்தில்தான் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். இக்கண்டப்படைச் சிற்பங்கள் பலவும் தற்போது தேய்ந்து சிதைவுற்றுள்ளன. பல புடைப்புச் சிற்பங்களை அடையாளங் காணக்கூடவில்லை.

## 10.4. சுவர்ப்பகுதி

சுவர் அதிட்டானத்தின் கபோதகத்தின்மீது இடம்பெறும் யாளிவரியின் மேல்மட்டத்திலிருந்து தொடங்குகிறது. இக்கோயிலின் கருவறை புறச்சுவர் பகுதி வேதிகை, பஞ்சரம், தேவகோட்டம், மகரத் தோரணங்கள் ஆகியன பெற்று விளங்குகின்றன.

பாதச்சுவரை அலங்கரிக்கும் வேதிகை வரியானது கண்டம், கம்பு, வேதி பத்மம், வாஜனம் ஆகிய சிற்றுறுப்புகளோடு அமைந்துள்ளது. வேதிகைக் கண்டப்பகுதியிலும் சிறிய சதுரவடிவப் பட்டைகளின் நடுவே புடைப்புச்சிற்பங்கள் சிவ உருவங்களைக் காட்டி நிற்கின்றன. கருவறையைச் சுற்றிலும் மூன்று புறங்களிலும் தேவகோட்டங்கள் இரண்டு அரைத்தூண்களுக்கிடையே உள்ளன.

தேவகோட்டத்தின் மேற்பகுதி மகரத் தோரணம் பெற்றுள்ளது. இதன் மையப்பகுதியில் சிற்றுருவ புடைப்புச் சிற்பங்கள் இருந்திருக்கின்றன. தென்புறக் கோட்டத்தில் மகரதோரணத்தின் நடுவே அமர்ந்த நிலையில் தென்முகக் கடவுளின் சிறிய புடைப்புச் சிற்பம் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

தாங்குதளத்திலிருந்து இரு கர்ணப்பத்திகளும் சற்றே முன்னிழுக்கப்பட்டு, சதுரபாதம் பெற்ற விஷ்ணுகாந்த அதாவது எட்டுப்பட்டை உடைய அரைத்தூண்களைக் பெற்று, சுவர்ப்பகுதியில் அணைவாக உள்ளன. சாலைப்பத்திகள் கர்ணபத்திகளிலிருந்து சற்றே முன்னிழுக்கப்பட்டுச் சதுரபாதம் பெற்ற இந்திரகாந்த

அரைத்தூண்களைக் கொண்டுள்ளன. சாலைப்பத்திக்கும் கர்ணபத்திக்கும் இடையில் காணப்படும் ஒடுக்கங்களில் நான்முக அரைத்தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கோட்டங்கள் சிற்பங்களின்றிக் காணப்படுகின்றன. சில கோயில்களில் இக்கோட்டங்களுக்குள் கல்வெட்டுகள் காணப்படும்.

## 10.5. தேவகோட்டங்கள்

கருவறையின் வெளிச்சுவர்ப் பகுதியில் சாலைப்பத்திகளில் தெற்கு, மேற்கு, வடக்குப்புறங்களில் தேவகோட்டங்கள் அமைந்துள்ளன. இத்தேவகோட்டங்கள் இரண்டு அரைத்தூண்களுக்கு இடையே அமைந்த உட்குழிவான பகுதியாகும். இங்குத் தென்புறக்கோட்டத்தில் வீணாதர தக்ஷிணாமூர்த்தியும், வடக்கில் பிரம்மனும் உள்ளனர். மேற்குப்புறக் கோட்டம் வெற்றிடமாக உள்ளது. இங்கிருந்த அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நான்குமுகம் கொண்ட சதுரபாத அரைத்தூண்கள் இருபுறமும் சதுர பாதம், கால்பகுதி, மாலைத்தொங்கல், தாமரைக்கட்டு, கும்பம், காடி, கலசம், வீரகண்டம், பலகை என அனைத்து உறுப்புகளும் பெற்று அமைந்திருக்க, கோட்டங்களின் மேற்புறம் மகரதோரணம் காட்டப்பட்டுள்ளது. மகரதோரணத்தின் நடுவே புடைப்புச் சிற்பத்திற்கான வட்டவடிவ குழிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதில் தெற்கில் மட்டுமே சிற்பம் காட்டப்பட்டுள்ளது. வடக்கு, மேற்குப் புறங்களில் சிதைவாகக் காணப்படுகின்றன.

## 10.6. அரைத்தூண்கள்

கருவறை மற்றும் அர்த்தமண்டபத்தின் புறச்சுவர்பகுதி முழுவதும் அரைத்தூண்களால் அணிசெய்யப்பட்டுள்ளது. அதிட்டானத்தில் மேல் இடம் பெறும் இவ்வர்க்கம் பாதம் எனப்படும். சுவரைச் சுற்றிலும் அலங்கரிக்கும் இத்தூண்கள் யாவும் கால், இடை, பத்மக்கட்டு. கலசம், குடம், பாலிகை, பலகை, வீரகண்டம், தரங்கப்போதிகை ஆகிய உறுப்புகளோடு அமைந்து உத்திரத்தோடு இணைகின்றன. தூண்கள் சதுரம், நீண்ட கட்டுப்பகுதி நான்குபட்டையாகவும், தேவகோட்ட அரைத் தூண்களில் எட்டுப்பட்டைகளாகவும், மாலைத்

தொங்கல்களுடன் கூடிய இடைப்பகுதியும் கொண்டனவாக அமைந்துள்ளன. மாலாஸ்தானம் எனப்படும் மாலைத்தொங்கல் பகுதியில் பூத்தோரணங்களும், மாலைகள், வட்டங்கள் போன்ற சித்திர வேலைப்பாடுகள் முதலியன இடம்பெறுகின்றன.

சதுரபாதம் கொண்ட நான்முக அரைத்தூண்கள் சதுரபாதம், கால், மாலைத்தொங்கல், தாமரைக்கட்டு, கலசம், காடி, கும்பம், பாலி, பலகை, வீரகண்டம் என உறுப்புகளைப் பெற்றுச் சுவரை அணைத்தபடி உள்ளன. இத்தூண்கள் நான்கும் முகமண்டபத்தின் பக்கச்சுவரை மூன்று பத்திகளாகப் பிரிக்கின்றன. நடுப்பத்தியில் தேவகோட்டம் அமைந்துள்ளது. இக்கோட்டங்களும் நான்முக அரைத்தூண்களைப் பெற்று விளங்குகின்றன.

கருவறையின் தென்கிழக்கு மற்றும் வடகிழக்குக் கர்ணப்பத்திகளில் விளங்கும் அரைத்தூண்களில் உள்ள பாலியும், பலகையும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. பல கோயில்களில் கருவறையும், முகமண்டபமும் நேரடியாக இணைக்கப்படாமல் ஒடுக்கம் கொண்டு இணைக்கப்படுவது முறையாகும். ஆனால் இங்கு முகமண்டபம் கருவறையுடன் நேரடியாகவே இணைக்கப்பட்டுள்ளது.

## 10.7. பிரஸ்தரம்

சுவர்ப்பகுதியில் விளங்கும் நான்முக அரைத்தூண்களில் வீரகண்டத்திலிருந்து எழும் போதிகைகள், பட்டையுடன் கூடிய தரங்கம் பெற்று உத்தரம் தாங்குகின்றன. இப்போதிகைள் விரிகோணத்தில் எழுந்து உத்தரம் தாங்க, மேலே ஆலிங்கம், அந்தரி, பிரதிமுகம், வாஜனம், பிரதிவரி காணப்படுகின்றன. பிரதிவரி யாவும் தாவும் யாளிகளைப் பெற்றுள்ளன.

பொதுவாகக் கருவறையின் வெளிப்புறத்தில் உத்தரத்தின் மேலே வாஜனத்துடன் வலபி அமைந்திருக்கும். வலபியில் பூதகணங்களோ, தாமரை இதழோ, அன்னவரியோ காட்டப்பட்டிருக்கும். வலபியில் அமைந்த பூதகணங்களின் வரியை நாம் புள்ளமங்கையில் காணலாம். ஆனால் இங்குத் தாவும் யாளிகள் காட்டப்பட்டுள்ளன. இவ்வமைப்பு இக்கோயிலின் தனித் தன்மையாகும்.

இக்கோயில் விமானத்தின் கூரைப் பகுதி கபோதமாக முன்னிழுக்கப்பட்டு நீட்சியாகக் காணப்படுகின்றது. கொடுங்கையின் கீழ்விளிம்புப் பகுதிகளில் சந்திர மண்டலம் காட்டப்பட்டுள்ளன. கர்ணபத்திகளில் கொடுங்கை நேத்ர நாசிகைகள் பெற்றுள்ளன. கொடுங்கை அதன் திருப்பங்களில் வள்ளிமண்டலத்தைக் கொண்டுள்ளது. சாலைப்பத்திகளின் கபோதம் திருப்புமுனைகளிலும், மையப்பகுதியிலும் வட்டவடிவமான கொடிக் கருக்குகளையும், இரு நாசிகைகளையும் பெற்றுள்ளன. கபோத நாசிகைகள் கொடிக்கருக்குகள் பெற்ற வளைவுகளையும், மேலே கூடுமுகங்களையும் கொண்டுள்ளன. கபோதத்திற்கு மேலே தளமுடிவைக் காட்டும் பூமிதேசப்பகுதி அமைந்துள்ளது.

பூமிதேசப்பகுதியில் யாளிகள் வரிசையாகக் காட்டப் பட்டுள்ளன. இந்த யாளி வரிசையில் யாளிகள் சிலவிடங்களில் எதிரெதிரே காணப்படுகின்றன. இவ்வரிசையின் திருப்புமுனைகளில் மகரத்தலைகள் இடம்பெற்றுள்ளன. கர்ணபத்திகளிலுள்ள தூண்கள் தாமரை இதழ் போன்ற வளைவு முனைகளைப் பெற்றும், சாலைப்பத்திகளில் உள்ள தூண்கள் இந்த வளைவு முனைகளைப் பெறாமலும் காட்சியளிக்கின்றன.

## 10.8. தள அமைப்பு

கருவறை பிரஸ்தரத்தின் மேல் முதல் தள வரிசை அமைகிறது. தாங்குதளத்திலிருந்து பூமிதேசம் வரையிலான விமான அமைப்பை முதல் தளம் என்று கணக்கிடுவதுமுண்டு. அதற்கு மேல் அமைந்த ஆரச்சுவரில் அமைந்த தள உறுப்புகளைக் கொண்ட தளமானது இரண்டாவது தளம் ஆகிறது.

இவ்வகையில் பார்த்தால் இக்கோயிலின் இரண்டாவது தளத்தின் வரிசையானது எட்டு பத்திகளை உடையதாயிருக்கிறது. கர்ணக்கூடு-1, அகாரை-2, சாலா-2, அகாரை-2, கர்ணக்கூடு-1 என வரிசையாக அமைகிறது.

இரண்டாம் தளத்தின் ஆரச்சுவரில் சாலையின் இரு பக்கங்களிலும் இரு நாசிகைகள் வீதம் நான்கு நாசிகைகள் உள்ளன.

### 10.9. கர்ணக்கூடு

வியாழவரியை உபானமாகக் கொண்டு, இரண்டு கம்புகளுக்கிடையில் பாதத்துடன் கூடிய கண்டப்பகுதி, வேதிகை, பட்டிகை எனத் தாங்குதளம் அமையப்பெற்று, நாகர பாணிக் கோயிலின் சிறிய மாதிரி வடிவம் போன்று கர்ணக்கூடு அமைக்கப்பட்டுள்ளது.

விமானத்தின் நான்கு திசைகளின் மூலையிலும் வடிக்கப்பட்டுள்ள கர்ணக்கூடானது சதுர வடிவ அடித்தளம் மற்றும் சுவர்ப்பகுதி கொண்டு, கூரைப்பகுதியில் நாசிகையையும், மையத்தில் கூடுமுகத்தினையும் கொண்ட கபோதத்தைப் பெற்று விளங்குகிறது.

கர்ணக்கூட்டின் கோட்டப்பகுதியில் சிற்பங்கள் ஏதும் காணப்படவில்லை. இதில் கிரீவப்பகுதியோ, சிகரமோ, கலசமோ இல்லை. சிதைவுற்றுள்ளது.

### 10.10. பஞ்சரம்

இங்கு இரண்டு பஞ்சரங்கள் உள்ளன. கர்ணக்கூட்டினை விடச் சற்று உள் அடக்குமானம் பெற்று விளங்குகிறது. கர்ணக் கூட்டிலிருந்து வரும் வியாழவரியே பஞ்சரத்திற்கும் உபானமாகவும், அவ்வாறே தொடரும் இரண்டு கம்புகளுக்கு இடையேயான பாதம் பெற்ற கண்டம், வேதிகை, பட்டிகை எனத் தாங்குபகுதி அமைகிறது. அரைத்தூண்கள் பஞ்சரத்தின் சுவர்ப்பகுதியில் காணக்கூடவில்லை. மேலும் கோட்டங்களின் மேலே கீர்த்திமுகம் உள்ளது.

### 10.11. சாலா

சாலாப் பகுதியானது இக்கோயில் விமானத்தில் இரண்டாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு கலசங்கள் அமைந்துள்ள நிலையில் இதைக் கூறமுடியும். வியாழவரியைப் பீடத்தில் கொண்டு தொடங்கும் அரைத்தூண்களுடன் அமையப்பெற்ற சுவர்ப்பகுதியானது இரண்டு கோட்டங்களாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. மையப்பகுதியும் நீள் செவ்வகமாக புடைப்பிற்காக விடப்பட்டுள்ளது. இதில் ஏதும் இறையுருவங்கள் இல்லை.

வியாழவரியுடன் கூடிய பீடமானது இங்கு உபானமாக உள்ளது. உபானத்தைத் தொடர்ந்து பாதத்துடன் கூடிய கண்டப்பகுதி, கம்பு, வேதிகை, பட்டிகை எனத் தாங்குதளம் அமைகிறது. சாலையின் இருபுறமும் முகப்புப் பகுதியில் வில்வண்டியின் பின்புறம் போன்று வளைக்கப்பட்ட நிலையில் கொடிக்கருக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கோட்டத்தின் மையத்தில் மேற்கூரைப் பகுதியானது கீர்த்திமுகம் கொண்டு அணி செய்யப்பட்டுள்ளது.

கிரீவம், சிகரம், கலசம் முதலிய விமான அங்கங்கள் கடைமுடிநாதர் கோயிலில் காணக்கூடவில்லை. கோயில் பன்னெடுங்காலம் சிதைவுற்று, மண்மேடிட்டிருந்ததால் கோயில் கட்டட உறுப்புகள் பல அழிந்துள்ளன.

### 10.12. கருவறை

நிலையுடன் கூடிய நுழைவாயிலைக் கொண்டுள்ளது. நுழைவாயிலின் மேலே உத்தரத்தின் வலபியில் பூதவரிசை காட்டப்பட்டுள்ளது. இவ்வரிசை நான்கு புறங்களிலும் தொடர்கிறது. கருவறை சதுர வடிவமானது. கருவறையில் தற்போது இலிங்கம் இல்லை. புனரமைப்பிற்காகக் கருவறையின் தளமும், மேற்கூரையும் காத்திருக்கின்றன.

### 10.13. அர்த்தமண்டப முகப்பு

இம்மண்டப வாயிலின் நிலைப்படியின் இருபுறமும் வலப்புறத்தே தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மன் கல்வெட்டும், இடப்புறம் முதலாம் பராந்தகனின் கல்வெட்டும் காணப்படுகின்றன. இவ்வாயிலை ஒட்டிய இரு பத்திகளிலும் அணைவுத் தூண்களின்றி அமைக்கப்பட்ட கோட்டங்கள் துவாரபாலகர் சிற்பங்களின்றி வெறுமையாக உள்ளன.

நுழைவாயிலின் சுவர்ப்பகுதியில் விளங்கும் நான்முக அரைத்தூண்களில் வீரகண்டத்திலிருந்து எழும் போதிகைகள், பட்டையுடன் கூடிய தரங்கம் பெற்று உத்தரம் தாங்குகின்றன. இப்போதிகைகள் விரிகோணத்தில் எழுந்து உத்தரம் தாங்க, மேலே ஆலிங்கம், அந்தரி, பிரதிமுகம், வாஜனம், பிரதிவரி காணப்படுகின்றன. பிரதிவரி யாவும் தாவும் யாளிகளைப் பெற்றுள்ளது.

கூரையின் நீட்சியாகக் காட்டப்பட்டுள்ள கபோதத்தில் நான்கு நாசிகைகள் உள்ளன. கொடுங்கையின் கீழ்விளிம்புப் பகுதிகளில் சந்திர மண்டலம் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. கர்ணப்பத்திகளில் கொடுங்கையில் நாசிகைகள் பெற்றுள்ளன. கொடுங்கை அதன் திருப்பங்களில் வள்ளிமண்டலத்தைக் கொண்டுள்ளது. கபோதம் திருப்புமுனைகளிலும், மையப்பகுதியிலும் வட்டவடிவக் கொடிக்கருக்குகளையும், இருநாசிகைகளையும் பெற்றுள்ளன. கபோத நாசிகைகள் கொடிக்கருக்குகள் பெற்ற வளைவுகளையும், மேலே கூடுமுகங்களையும் கொண்டுள்ளன. கபோதத்திற்கு மேலே தளமுடிவைக் காட்டும் பூமிதேசப்பகுதி அமைந்துள்ளது.

## 10.14. அர்த்தமண்டபம்

இரண்டு அரைத்தூண்களுடன் கூடிய நுழைவுவாயிலைப் பெற்றுள்ளது. நான்கு முழுத்தூண்களுடன் விளங்கும் அர்த்தமண்டபம் செவ்வக வடிவம் பெற்றுள்ளது. இம்மண்டபத்தில் விளங்கும் இத்தூண்கள் இந்திரகாந்தத் தூண்கள் அமைப்பைப் பெற்றவை. இவை மேற்கூரையைத் தாங்குகின்றன. அர்த்தமண்டபத்தின் கிழக்குச் சுவரைச் சதுர பாதம் கொண்ட நான்முக அரைத்தூண்கள் அணைத்து இச்சுவரை மூன்று பத்திகளாகப் பிரிக்கின்றன.

இம்மண்டபத்தின் மேற்குப்புறச் சுவரை, சதுரபாதம் கொண்ட இரண்டு விஷ்ணுகாந்த அரைத்தூண்கள் தாங்குகின்றன. வடக்கு, தெற்கு சுவர்களைப் பக்கத்திற்கு இரண்டாக நான்கு அரைத்தூண்கள் மேலே வடதெற்காகக் குறுக்கில் அமைந்த உத்தரத்தைத் தாங்குகின்றன.

உத்தரங்கள் மேற்கூரையை மூன்று பத்திகளாகப் பிரிக்கின்றன. மூன்று பத்திகளின் நாற்புறங்களைச் சுற்றிலும் உள்ள வலபியில் பூதகணங்கள்காட்டப்பட்டுள்ளன. இக்கணங்கள் யாவும் இசைக்கருவிகளை வாசித்தும், ஆடல் பாடல்களுடன் கூடிய கோலமுடன் அமைக்கப்பட்டுள்ளன.

## 10.15. அர்த்தமண்டபத்தூண்

இங்குள்ள நான்கு தூண்களும் முழுத்தூண்களாகும். இவை இந்திரகாந்தத் தூண்கள் எனப்படுகின்றன. பதினாறு பட்டைகள்

கொண்டு கால்பகுதி, மாலைத்தொங்கல் பகுதி, தாமரைக்கட்டு, கலசம், காடி, கண்டம், பலகையுடன் வெட்டுப் போதிகைப் பெற்றுக் கூரையுடன் இணைகின்றன. இவை யாவும் சோழர்காலத் தூண்களாகும்.

### 10.16. மகாமண்டபம்

இம்மண்டபம் தற்போது தாங்குதளம் மட்டுமே கொண்டு விளங்குகின்றது. இதன் தாங்குதளம் உபானம், ஜகதி, விருத்த குமுதம், கண்டபாதம், கபோதம் பெற்றுள்ளது. இக்கோயிலின் விமானத்தின் தாங்குதளத்தினைப் போல இம்மண்டபத்தின் அதிட்டானமும் கபோதபந்தத் தாங்குதளமாய் உள்ளது. சிதைவுற்ற இம்மண்டபத்தின் தாங்குதளத்தில் காணப்படும் கபோதங்களின் திருப்புமுனைகளில் கொடிக்கருக்குகள், வள்ளிமண்டலம் காணப்படுகின்றன. அதற்கு மேலே யாளிவரிசையும், வேதிப்பகுதியும் காட்டப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் தென்கிழக்கு மூலையிலொன்றும், தென்புறத்தில் ஒன்றுமாக இரண்டு கண்டபாதச் சிற்பங்கள் சிதைவுற்ற நிலையில் காணப்படுகின்றன.

### 10.17. அம்மன் கருவறை

அம்மன் கருவறை வடகிழக்கு மூலையில் செங்கல் தளியாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறையும், அர்த்தமண்டபமும் கொண்டதாக அம்மன் திருமுன் காணப்படுகிறது. மூன்று தளங்களைக் கொண்ட நாகர பாணியாக உள்ளது. கர்ணக்கூடு, பஞ்சரம், சாலை என்ற மூன்று பத்திகளைக் கொண்ட தள அமைவைக் பெற்றுள்ளது. இத்திருமுன் பிற்காலப் பணியாகும்.

சிறிய சதுர வடிவ கருவறை மற்றும் அதனினும் சற்று பெரிய அளவினைக் கொண்ட அர்த்தமண்டபம் கொண்டுள்ளது. கருவறை நிலைவாயிலுடன் கூடியதாகவும், இரண்டு அரைத்தூண்களை மண்டபத்தில் பெற்றதாகவும் விளங்குகின்றது.

அம்மன் கருவறையின் வெளிப்புறச் சுவர்கள் கோட்டங்களை மூன்று புறமும் பெற்றுள்ளது. மேலும் மண்டபச் சுவரின் வெளிப்புறம் அரைத்தூண்களை அணைவாகப் பெற்றும் விளங்குகின்றது. செங்கல்லிலேயே நயமாக அமைக்கப்பெற்ற இந்த அம்மன் கருவறை கட்டடக்கலையின் நுணுக்கங்களைப் பெற்று விளங்குவது இதன் தனிச்சிறப்பாகும்.

# சிற்பக்கலை

திருக்கடைமுடிநாதர் கோயிலைப் பொறுத்தவரையில் தளங்களில் சிற்பங்கள் தென்படவில்லை. தூண் சிற்பங்களும், கொடுங்கை சிற்பங்களும் இங்கு அமைக்கப்படவில்லை. அதிட்டானத்தின் கண்டப்படைச் சிற்பங்கள் மிகவும் சிதைவுற்றுள்ளன. அவ்வாறே வேதிகைச் சிற்பங்களும் பல தேய்வுற்றுள்ளன. தேவகோட்ட சிற்பங்களும் மறுபுனரமைப்பில் கோட்டங்களில் சீர்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தென்புற தேவகோட்டத்தில் வீணாதர தட்சிணாமூர்த்தி நின்ற நிலை சிற்பம் உள்ளது. இச்சிற்பத்தின் கால்கள் சிதைந்துள்ளன. மேற்குக்கோட்டம் வெற்றிடமாக உள்ளது. இங்கிருந்த அம்மையப்பர் சிற்பம் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு தேவகோட்டத்தில் நான்முகன் நின்ற நிலை சிற்பம் அமைந்துள்ளது.

அர்த்தமண்டப தெற்குப் பகுதியில் வெற்றுக் கோட்டம் காட்சியளிக்கின்றது.

இம்மண்டப வடக்குக் கோட்டத்தில் முருகன் தனிச்சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

சடையாரின் இலிங்க உருவம் அம்மன் திருமுன்னில் அர்த்தமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. இலிங்கத்தின் ஆவுடையார் பிற்கால இணைப்பாகத் தெரிகின்றது. இலிங்கமும் இயற்கை மாற்றங்களால் பொரிந்து காணப்படுகின்றது.

அம்மன் திருவுரு காலத்தால் பிந்தையதே. சடையார் கோயில் கல்வெட்டுகளில் அம்மன் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே அம்மன் திருமுன் பிற்காலத்தில் உள்ளூர் மக்களால் கட்டப்பட்டதாகும் எனக் கருத இடமுண்டு.

ஆனால் இவ்வூரில் சடையாரின் வழிபாட்டிற்கு முன்பு தாய்த் தெய்வ வழிபாடு சிறப்புற்றிருக்க வேண்டும். இதற்கான சான்றுகளைக் இக்கோயில் விமான தாங்குதளத்தின் வடபுறம் உள்ள வேதிகைச் சிற்பங்கள் காட்டி நிற்கின்றன. காளி, கொற்றவை, திருமகள், சாமுண்டா, மகிஷமர்த்தினி, உமை, பூதேவி முதலிய புடைப்புச் சிற்பங்களை உற்றுநோக்க இவ்வுண்மை புலப்படும்.

கொடுங்கையில் அமைந்துள்ள தாவும் யாளிகள், விமான தாங்குதள கபோதத்தின் திருப்புமுனைகளில் அமைந்துள்ள மகரக்கூடுகளில் உள்ள யாளி வீரர்கள், வராகர், அமர்ந்த யாளி முதலிய சிற்பங்கள் அழகு வாய்ந்தவையாகும்.

அர்த்தமண்டபத்தின் உள்புறம் உத்தரத்தில் வலபியில் அமைந்துள்ள பூதவரிச் சிற்பங்கள் ஆடியவாறும், இசைக்கருவிகளை மீட்டியவாறும் காட்டப்பட்டுள்ளன. ஆனால் இச்சிற்பங்களும் காலவோட்டத்தால் பொலிவிழந்துள்ளன.

## 11.1. தேவகோட்ட சிற்பங்கள்

### வீணாதர தட்சிணாமூர்த்தி

தென்புறக் கோட்டத்தில் இரு அரைத்தூண்களுக்கிடையே பத்மபீடத்தில் நின்றநிலையில் வீணாதரர் உள்ளார். மலர்முகத்தில் தவழும் புன்னகையுடன் தென்திசைக் கடவுள் திரிபங்கத்தில் நிற்கிறார். நான்கு கைகளுடன் விளங்கும் அவர் முன்னிரு கைகளில் வீணையை மீட்டியபடி காட்டப்பட்டுள்ளார்.

அண்ணலின் ஆடைமுடிச்சுகள் இருபுறமும் பரந்துள்ளன. முகப்புடன் கூடிய ஜடாபார தலையலங்காரத்துடன் தோள்களின் இருபுறமும் சுருண்ட குழல்கள் தொங்குகின்றன. நீள்காதுகளில் குண்டலமும், பனையோலைச் சுருளும் அணிந்துள்ளார். கழுத்தில் அட்டிகை காணப்படுகிறது. யக்ஞோபவீதம் (பூணூல்) இடது மார்பின் வழியே செல்கிறது. வயிற்றில் உதரபந்தம், கைகளில் முன்வளை, தோள்வளை, கேயூரம் விளங்க, பின்னிரு கைகளில் அக்கமாலை, கமண்டலம் ஏந்தியுள்ளதாகத் தெரிகின்றது. வீணாதரர் சிற்பத்தில் கால்கள் சிதைவுற்றுள்ளன. பாதங்களில் சதங்கை அணியப்பட்டுள்ளது.

**நான்முகன்**

வடக்குத் தேவகோட்டத்தில் பத்மபீடத்தில் நான்முகன் சமபாதத்தில் நின்றநிலையில் உள்ளார். மூன்று முகங்கள் தெரிகின்றன. இடுப்பில் ஆடை முடிச்சுகள் விளங்க, இருபுறமும் விரிந்து பரந்து தொங்க, முழங்கால் வரை நீண்ட பட்டாடையுடன் விளங்கும் பிரமன் கிரீடமகுடராய், நான்குகைகளில் முன்னிரு கைககள் அபயமும், கடி முத்திரையும் கொண்டும், பின்னிரு கைகள் அக்கமாலையும், கமண்டலமும் பிடித்துள்ளன. தோள்வரைத் தொங்கும் நீள்காதுகளில் குண்டலங்கள் விளங்குகின்றன.

இடையில் முத்தாலான மேகலையும், இடைவார்ப்பட்டையும், தொடைவரை வளைந்து தொங்கும் குறங்குசெறியும், பாதங்களில் சதங்கையும் அணிந்துள்ளார். கழுத்தணிகளாகச் சரப்பளியும், அட்டிகையும் விளங்குகின்றன. தோள்வளை, கேயூரம், முன்வளை முதலியன கையணிகளாகவும், விரல்களில் வளையங்களும் காட்டப்பட்டுள்ளன. வயிற்றில் உதரபந்தம் பட்டையாகச் செல்கிறது. மார்பில் யக்ஞோபவீதம் விளங்க, பிரம்மமுடிச்சு இடது மார்பில் தெரிகிறது.

கண்களை மூடிய நிலையில் அமைதி தவழும் முகத்துடன் விளங்கும் இந்த நான்முகன் சிற்பம் முற்காலச் சோழர் கலைப் பாணியைக் காட்டி நிற்கின்றது.

## 11.2. தனிச்சிற்பங்கள்

**பிரம்ம சாஸ்தா (முருகன்)**

இச்சிற்பம் தனிச் சிற்பமாக அர்த்தமண்டப வடபுறக் கோட்டத்தில் அமைந்துள்ளது. பத்மபீடத்தில் சமபாதராகப் பிரம்ம சாஸ்தா நிற்கிறார். இங்கு முருகனைப் பிரம்மசாஸ்தா என்று அழைப்பதற்கு அவர் கையில் சக்தி, வஜ்ஜிராயுதம் ஏந்துவதற்குப் பதிலாகப் பிரமனுக்குப் பாடம் புகட்டியவராய் பின்னிரு கைகளில் அக்கமாலையும், கமண்டலமும் ஏந்தியுள்ளமையே காரணமாகும்.

முன்னிரு கைகள் அபயமும், ஊரு முத்திரையும் காட்டியுள்ளன. கரண்டமகுடராய், நெற்றியில் கண்ணிமாலை சூடி,

காதுகளில் குண்டலங்கள் விளங்க, மார்பின் குறுக்காகச் சன்னவீரம் அணிந்து, கழுத்தில் அட்டிகை அலங்கரிக்க இளைய அழகு சாஸ்தா காட்டப்பட்டுள்ளார். வயிற்றில் உதரபந்தம், கைகளில் வளைகள் அணி செய்கின்றன.

அரையாடையின் முடிச்சுகள் இடையின் இருபுறமும் நீண்டிருக்க நிற்கும் இச்சிற்பம் பல்லவரின் மல்லையில் காணப்படும் திரிமூர்த்தி குகையில் விளங்கும் பிரம்மசாஸ்தாவை நினைவுபடுத்துகிறது. இச்சிற்பம் இச்சடையார் கோயில் முதலாம் பராந்தகனின் காலத்தில் கற்றளியாக்கப்பட்ட பொழுதே அமைக்கப்பட்டிருக்குமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் தேவகோட்ட சிற்பங்கள் அமைக்கப்பட்ட கல் வகைக்கும் இதற்கும் வேறுபாடு தெரிகின்றது.

## கடைமுடிநாதர்

வட்டவடிவ ஆவுடையாரின் மையத்தில் நீள்வட்ட வடிவில் இலிங்கமேனியராய்க் கடைமுடிநாதர் விளங்குகிறார். ஆவுடையாரின் பத்மபீடம் பிற்காலத்தியதாகத் தெரிகின்றது.

## அம்மன் சிற்பம்

செங்கல்தளியான அம்மன் கருவறையின் மையப்பகுதியில் அரைவட்ட வடிவக் கற்பீடத்தின் மேல் சமபாதமாக நின்ற நிலையில் அம்மன் உள்ளார். நான்கு திருக்கைகளில் பின்னிரு கைகள் சங்கு, சக்கரம் ஏந்தியவராய் நாராயணியாக நிற்கிறார். காலத்தால் பிந்தைய இச்சிற்பத்தில் சோழர்காலச் சிற்ப நுணுக்கங்களைக் காணுதல் அரிதேயாகும்.

கணுக்கால் வரை நீண்ட பட்டாடையுடன், ஆடையின் முடிச்சுகள் இடையில் விளங்கக் கால் வரை நீண்டு தொங்குகிறது. கரண்டமகுடம் தலையை அணி செய்ய, கழுத்தில் சரப்பளியும், அட்டிகையும் விளங்க, மார்பில் கச்சையின்றித் தாய்த் தெய்வம் விளங்குகிறார். அன்னையின் நான்கு கைகளில் முன்னிரு கைகள் அபய, வரத முத்திரைகள் காட்டி நிற்கின்றன.

## நந்தி

நந்தி சிற்பம் மகாமண்டபத்தையடுத்த வெளிப்பகுதியில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. சோழர்கால இச்சிற்பம் அதிக அலங்காரமற்று

ஆனால் உயிர்ப்புடன் விளங்குகிறது. கால்களை மடக்கி அமர்ந்துள்ள நந்தி நேர்முகமாய் உள்ளது. கழுத்தில் மணிகள் காட்டப்பட்டுள்ளன. நெற்றியில் முத்து பட்டை நீண்ட சிறிய முகப்புடன் தொங்குகிறது. மூக்கில் மூன்று கோடுகள் போன்று கயிறு பிணைக்கப்பட்டுள்ளது. அமர்ந்துள்ள நந்தியின் பின்புறம் வால் சுருண்டுள்ளது.

## 11.3. சிவபுராணச் சிற்பங்கள்

அர்த்தமண்டபத் தாங்குதளத்திலும் தொடர்ந்து விமான தாங்குதளத்தின் வேதிகை கண்டப்பகுதியிலும் அமைந்த இச்சிற்பங்கள் சிறிய சதுர வடிவ புடைப்புச் சிற்பங்களாகப் படைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சிவனின் வடிவங்களும், பெண் தெய்வ வடிவங்களும், கொடிக்கருக்குகளும் அமைந்துள்ளன. விமான தாங்குதளத்தின் தெற்கு, மேற்கு, வடக்கு எனும் மூன்று புறங்களிலும் இச்சிற்பங்கள் உள்ளன.

**தெற்குப் பகுதியிலிருந்து வரிசையாக இச்சிற்பங்களைக் காணலாம்,**

1. ஆடல் மகளிர்
2. காமாந்தகமூர்த்தி
3. சிவ நடனம்
4. மகிசாசுர மர்த்தினி
5. சிவனும் உமையும்
6. கொடிக்கருக்கு
7. கொடிக்கருக்கு
8. கொடிக்கருக்கு
9. காலாந்தகமூர்த்தி
10. பிட்சாடனர்
11. ஆடல் மகளிர்
12. சிவன் - காளி தாண்டவம்
13. காளிகா தாண்டவம்
14. கங்காதரர்
15. கஜ சம்ஹாரமூர்த்தி
16. கொடிக்கருக்கு

17. கொடிக்கருக்கு
18. கொடிக்கருக்கு
19. கொடிக்கருக்கு
20. கொடிக்கருக்கு
21. கொடிக்கருக்கு
22. கொடிக்கருக்கு
23. கொடிக்கருக்கு
24. மரக்கிளையில் ஆண்
25. சிதைந்துள்ளது
26. அந்தணரும் வீரரும்
27. மகப்பேறு
28. ஆண்சிற்பம்
29. சிவநடனம்
30. கயிலாயக் காட்சி
31. நடனப்பெண் - முனிவர்
32. யானை வீரன்
33. சிதைந்துள்ளது
34. கொடிக்கருக்கு
35. கொடிக்கருக்கு
36. கொடிக்கருக்கு
37. கொடிக்கருக்கு
38. கொடிக்கருக்கு
39. கொடிக்கருக்கு
40. வழிப்போக்கர்
41. பெண்தெய்வமும் சிறுவனும்
42. கொடிக்கருக்கு
43. காளி
44. திருமகள்
45. பிடாரி

46. மகிஷாசுரமர்த்தினி
47. கொடிக்கருக்கு
48. கிராதார்ச்சுனர்
49. பாசுபதமூர்த்தி
50. கொடிக்கருக்கு
51. கொடிக்கருக்கு
52. கொடிக்கருக்கு
53. கொடிக்கருக்கு
54. சாமுண்டி
55. சிவநடனம்

**ஆடல் சிற்பங்கள்**

**பெண் தெய்வங்கள்**

விமான தாங்குதளத்தின் வடபுறத்தில் வேதிகைக் கண்டப்படைச் சிற்பங்களாகக் காளி, திருமகள், பிடாரி, மகிஷாசுரமர்த்தினி, சாமுண்டி, முதலிய பெண் தெய்வங்கள் காட்டப்பட்டிருப்பது இக்கோயிலின் தனிச்சிறப்பாகக் கருதலாம். திருமகள் தவிர்த்து மேற்கண்ட பெண் தெய்வங்கள் போர்த் தெய்வங்களாகும். கோயில் சாத்திர விதிப்படி வடக்குக் கோட்டத்தில் கொற்றவை, துர்க்கை தெய்வங்களை அமைப்பது மரபாகும். அங்ஙனமே இப்பெண் போர்த் தெய்வங்களும் வடபுறத்தில் காட்டப்பட்டுள்ளதும் இங்கு உற்றுநோக்கத் தக்கது.

இத்தலம் பண்டு தாய்த்தெய்வ வழிபாடு மிகுந்திருந்த இடமாகக் கருதலாம். ஆற்றங்கரைகளில் சப்தமாதர் வழிபாடு மிகவும் தொன்மையானது.

**காளி**

எட்டுக் கைகளில் ஆயுதங்களை ஏந்தியபடி பாய்ந்து போரிடச் செல்லும் காளிதேவியின் முன்னால் பகைவர் தெறித்துச் சிதறி ஓடுகின்றனர். ஜடாபாரமும், காதுகளில் பெரிய குண்டலமும், மார்பில் நாகத்தினையே கச்சாகவும் அணிந்துள்ளாள்.

### உக்ரகாளி

இத்தேவி பீடத்தின்மேல் அமர்ந்த நிலையில் வலது காலைப் பீடத்தின் மேல் குத்துக்காலிட்டு, உக்ரதேவியாக இடது காலை நீட்டியபடி எட்டுக்கைகளில் போர்க் கருவிகளைக் கொண்டு விளங்குகிறாள். கோரப்பற்கள் நீண்டு வெளியே தெரிகிறது.

போர்த்தெய்வத்திற்குரிய அரையாடை அணிந்து, கழுத்தில் எலும்புமாலை தொங்க, மார்பில் நாகக்கச்சை பூண்டு தேவி தனது இடது காலின் கீழே கிடக்கும் பகைவனைச் சூலத்தினை ஓங்கித் தாக்குகிறாள். அன்னையின் இருபுறமும் தேவியின் பணிப்பெண்கள் நிற்கின்றனர். இத்தொகுதியின் மேலே பேய் முகங்கொண்ட உருவம் காட்டப்பட்டுள்ளது.

### திருமகள்

விரிந்த பத்மத்தின் மேல் அலர்மேல் மங்கையாகத் திருமகள் பத்மாசனத்தில் வீற்றிருக்கிறாள். நான்கு திருக்கைகளில் முன்னிரு கைகள் யோக முத்திரையிலும், பின்னிரு கைகளில் தாமரை மலர்களை ஏந்தியபடியும் தேவி உள்ளாள். அன்னையின் நீள்காதுகளில் விளங்கும் குண்டலங்கள் தோள்களில் விளங்குகின்றன. விரிசடை போன்று அடர்த்தியாகக் காணப்படுகிறது. திருமகளின் மேலே இருவர் தேவிக்குப் புனித நீராட்டுகின்றனர் போலத் தெரிகிறது. அன்னையின் இருபுறமும் அவளின் பணிப்பெண்கள் கைகளை உயர்த்தியபடி உள்ளனர்.

### சாமுண்டி

சப்தமாதருள் ஒருவரான சாமுண்டியின் சிற்பம் இக்கோயிலின் கருவறையின் வடபுறத்தில் வேதிகைச் சிற்பமாக விளங்குகிறது. சாமுண்டி இயமனின் தேவியாவார். பிடாரி என்றும் அழைக்கப்படுபவள். படாரர், படாரி வடசொல்லின் மருவிய வடிவமே பிடாரி ஆகும். பராந்தகனின் புள்ளமங்கை, நியமக்கோவில் இவற்றில் காளாபிடாரி தெய்வ வழிபாடே முதன்மை பெற்று விளங்கியது.

புள்ளமங்கையில் காளாபிடாரிக்குக் கொடை கொடுத்தவர்கள் அனைவரும் பிராமணரல்லாதவர்களே ஆவர். இதிலிருந்து

காளாபிடாரி ஊர்த்தெய்வம் என அறியப்படுகிறது. அத்தகு நோக்கில் பராந்தகனின் மற்றொரு கோயிலான இக்கடைமுடிநாதர் கோயிலில் உள்ள சாமுண்டாவையும் நோக்க வேண்டும்.

நான்கு கைகளுடன் தேவி கோபாவேசமாக விளங்குகிறாள். காலுக்குக் கீழே விழுந்து கிடக்கும் உருவத்தின் மேல் மிதித்து நின்றவாறு சூலத்தை ஓங்குகிறாள். காளியைப் போன்றே உருவ அமைதி கொண்ட தேவியின் இருபுறமும் பணிப்பெண்கள் நிற்கிறார்கள். மேலே மற்றொரு பேய் உருவம் காட்டப்பட்டுள்ளது.

## மகிஷமர்த்தினி

பல்லவர்களின் கலைத்தெய்வமாக விளங்கும் இத்தேவியின் புடைப்புச் சிற்பம் இங்கு மேற்கண்ட சிற்பங்களின் வரிசையில் இடம்பெற்றுள்ளது. முன்னே ஓடும் அசுரனைப் பின்னே விரட்டி, எட்டுக்கைகளுடன் மகிஷமர்த்தினி நீண்ட முத்தலைக் கொண்ட சூலத்தை ஓங்கியவாறு தாக்குகிறாள்.

தேவியின் பின்னால் அவளுடைய சக்திப்படைகள் காட்டப்பட்டுள்ளனர். அன்னையோடு போரிடும் பகைவர்கள் நீண்ட வாளை ஓங்கிச் சண்டையிடுகின்றனர். அவர்கள் இரண்டு கைகள் மட்டுமே பெற்றவர்களாகக் காட்டப்பட்டுள்ளதும் இங்கு நோக்கத்தக்கது. கைகள் அதிகமாகக் காட்டப்படுவது அவரவர் வலிமையைக் காட்டுவதற்கேயாம். இங்கு மகிஷமர்த்தினியின் அளவிலா ஆற்றல் அவளுடைய எட்டுக்கைகளில் மிளிர்கிறது.

## மகப்பேறு

விமானத் தாங்குதளத்தின் மேற்குப்புறத்தில் வேதிகைக் கண்டப்படையில் தாய்மை நிலையிலுள்ள கர்ப்பிணிப் பெண்ணின் புடைப்புச் சிற்பம் உள்ளது.

இந்தக் கர்ப்பிணிப் பெண்ணை இரு பெண்கள் தாங்கிப் பிடித்துள்ளனர். அப்பெண்ணின் கைகள் இருபுறமும் உள்ள பெண்களின் தோள்களை அணைவாகப் பிடித்துள்ளன. இம்மூவரைத் தவிர்த்து மற்றொரு பெண்ணும் இக்காட்சியைக் காண்கிறாள்.

பொதுவாக, தாய்மை நிலையிலுள்ள பெண்ணின் சிற்பத்தை அமைத்தல் வளத்தினை வேண்டியேயாகும். வளமையின் குறியீடாக இச்சிற்பம் பலவிடங்களில் அமைக்கப்பட்டிருப்பதற்குத் திருக்கோடிக்கா ஆலயத்தின் கோபுரத்தில் இச்சிற்பம் காணப்படுவதும், வேலூர் அருங்காட்சியகத்தில் உள்ள ஒரு வாயகன்ற மண் தானியக் களஞ்சியத்தில் இவ்வடிவம் புடைப்புச் சிற்பமாக உள்ளதுமே சான்றுகளாகும்.

முல்லையும் மருதமும் சேரும் கொள்ளிடக்கரையில் அமைந்த இக்கடைமுடி ஊரும் வேளாண்மையை முதன்மையாகக் கொண்டதால், வளமைக்காக இச்சிற்பம் இக்கோயிலில் அமைக்கப்பட்டிருக்கலாம்.

**பழையோள் குழவி**

கையைக் கட்டிப் பணிவாக நிற்கும் சிறுவன் ஒருவனின் தோளில் இடதுகையைத் தாங்கியபடி தேவி நிற்கிறாள். இந்த அன்னையின் வலதுகையில் மேல் நோக்கிய ஆயுதம் ஒன்றுள்ளது. இது வேலாக இருக்கலாம். கண்ணிமாலை நெற்றியில் விளங்க, கரண்டமகுடம் தரித்த சிறுவனின் உருவம் முருகனாயிருக்கலாம்.

பெரிய கொண்டையோடு, காதுகளில் குண்டலங்கள் திகழ, ஆடையணிகளுடன் பூரணமாய் விளங்கும் இத்தேவி உமையாக இருக்கலாம்.

கொற்றவைச் சிறுவனுக்கு ஆயுதம் வழங்குவது போன்று காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது.

சிவபுராணத்தின் ஒரு நிகழ்வாக இதனைக் கொள்ளலாம். சூரபத்மனை வதம் செய்ய, முருகனின் பிறப்பு நிகழ, மகனுக்கு பார்வதி சக்தியாகிய வேல் வழங்கிய புராணக்கதையாக இதனைக் கருதவும் இடமுண்டு.

**பூவராகர்**

வடக்குப்புறத்தில் விமானத்தின் தாங்குதள கபோதத்தின் திருப்புமுனைகளில் அமைக்கப்பட்டுள்ள மகரத்தலைகளின் நடுவே இப்புடைப்புச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. பன்றி முகங்கொண்ட

திருமாலின் அவதார மூர்த்தியான வராகர் பூதேவியை மீட்டு தன் தொடையின்மீது அமர்த்தியுள்ளார். எழில்மிகு இச்சிற்பம் சிறியதாயினும் பூதேவியான பெண்தெய்வத்தைச் சிறப்பிக்கவே எடுக்கப்பட்டதாகக் கருதலாம்.

## அதிட்டானத்தில் இராமாயணச் சிற்பங்கள்

முற்காலச் சோழர்களின் கலைப்பாணிகளுள் ஒன்றான விமான அதிட்டானத்தில் கண்டப்படைச் சிற்பங்களாக அமைக்கப்படும் இராமாயணக் காட்சிகள் இக்கோயிலிலும் காணப்படுகின்றன. ஆனால் பல புடைப்புச் சிற்பங்கள் சிதைவுற்றுள்ளன. சிலவிடங்களில் பொழிக்கப்படாமலே உள்ளன. இராமாயணக் கதைவோட்டப்படியும் சிற்பங்கள் வரிசையாக அமைக்கப்படவில்லை என்றே கூறவேண்டும்.

வடபுறத்திலிருந்து தெற்காக இராமாயணச் சிற்பங்களை வரிசையாகக் கீழ்கண்டவாறு காணலாம்.

1. பெரிய ஜடாபாரத்துடன், காதுகளில் பெரிய வளையம் தொங்க முன்னோக்கி ஓடுகிற விதமாகச் சூலத்தை ஓங்கியவாறு தாக்குவதற்குப் பாயும் சிவன் உள்ளார். அவரெதிரே இரண்டு பெண்கள் இக்காட்சியை அச்சமுடன் பார்க்கின்றனர்.
2. தசரதனின் புத்திரகாமேஷ்டி யாகம் செய்ய ஆலோசித்தல்
3. யானை மற்றும் குதிரைப்படை வீரர்கள்
4. இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் காட்சி
5. மரத்தினடியில் முனிவர் ஒருவர் அமர்ந்திருக்க, இருவர் வணங்கி நிற்கும் காட்சி. விசுவாமித்திரனை இராம லக்குவன் வணங்குவதாக இருக்கலாம்.
6. இருவர் அமர்ந்திருக்க, ஒருவர் நிற்கும் காட்சி. இராம, இலக்குவன் சீதையாக இருக்கலாம்.
7. குதிரை பூட்டிய தேரில் அரசகுல ஊர்வலம் ஒன்று நடைபெறுவதாக உள்ளது. ஒன்றின் சக்கரத்தின் அருகில் சில உருவங்கள் காணப்படுகின்றன.

8. இச்சிற்பம் மேலும் கீழுமாக இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இராமாயணத்தின் இரண்டு காட்சிகளைப் பதிவு செய்துள்ளது. சிறிய சதுர அளவில் அதிட்டான கண்டப்படையில் படைக்கப்படும் இப்புராணக்காட்சிகளை இருக்கின்ற சிறிய இடங்கருதி காட்சிகளை வடிவமைக்க செய்யப்பட்ட இந்த தொழில்நுட்பப் வேலைப்பாடு முற்காலச் சோழர்களின் சிற்பக் கலை நுணுக்கம் என்றே இதனைக் கூறவேண்டும்.

இத்தொகுதியில் மேலே கைகேயியின் வரத்தால் கவலையுடன் படுக்கையில் அமர்ந்திருக்கும் தசரதன் மற்றும் அவர் அருகில் இரு மனைவியரும் உள்ளனர். கீழே அமைந்த பகுதியில் கைகேயி இராமனிடம் பதினான்கு ஆண்டுகள் கானகம் செல்லுமாறு கூறும் காட்சி அமைந்துள்ளது. இராமன் தன்னெதிரே நிற்கும் சிற்றன்னையின் சொல்லைப் பணிவுடன் கேட்டவாறு நின்றுள்ளான்.

9. மந்தரையின் உபதேசமும், கைகேயி பெற்ற வரமும் என்பதாக அமைந்த சிற்பமும் இரண்டு காட்சிகளைப் பெற்றுள்ளது. மேலே சிறிய சதுர வடிவக் கட்டத்தில் மந்தரை கைகேயிக்குப் பரதன் நாடாள, தசரதனிடம் வரம் கேட்க உபதேசிக்கிறாள். கீழே உள்ள மற்றொரு காட்சியில் கைகேயி படுத்திருக்க, தசரதன் அருகில் அவளின் இந்நிலைக்குக் காரணம் அறியாதவராய் நிற்கிறார்.

10. இரண்டு காட்சிகளைக் கூறும் அடுத்த சிற்பம் ஆரண்ய காண்ட காட்சியாக இராமனும் சீதையும் அமர்ந்திருக்க, இராமனின் அழகினை வியந்த சூர்ப்பனகை அவனோடு உரையாடலுமாக அமைந்துள்ளது.

11. அடுத்த புடைப்பில் சூர்ப்பனகையின் செய்கையால் வெறுப்புற்ற இலக்குவன் வாளினையெடுத்து, அவள் மூக்கை அறுக்கும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

12. போர்க்காட்சி காட்டப்பட்டுள்ளது. மேலே இரு யானைகளில் வீரர்களும், கீழே ஆயுதங்களை ஏந்திப் போருக்குச் செல்லும் வீரர்களும் உள்ளனர்.

13. இராமன் அம்பெய்தும் காட்சி. அருகில் மூவர் உள்ளனர். முகம் சிதைந்துள்ளது.
14. குதிரை மேல் வீரன் ஒருவன் அமர்ந்திருக்கிறான். ஒருவன் மடியில் மத்தளம் போன்ற கருவி உள்ளது. முகம் தெரியவில்லை.
15. சீதை, இராமன், இலக்குவன் மூவரும் நடந்து செல்லும் காட்சி அடுத்துள்ளது. இது இனியவள் உடன்வர, இளையவன் தொடர்ந்திட, வனவாசம் செல்லும் காட்சியாகலாம்.
16. விசுவாமித்திரர், இராமன், இலக்குவன் நிற்கின்றனர். விசுவாமித்திரரின் யாகத்திற்கு ஊறு விளைவிக்கும் அசுரர்களைத் தடுக்க அவரால் இராம, இலக்குவர் அழைத்து வரப்பட்டுள்ளனர். விசுவாமித்திரர் கையில் கமண்டலம் உள்ளது. நீண்ட தாடியுடன் காணப்படுகிறார். இராமனின் உருவமைதி அரசனுக்குரிய ஆடையணிகளுடன் அழகாகக் காட்டப்பட்டுள்ளது.
17. சிதைந்துள்ளது.
18. சிதைந்துள்ளது.
19. மேலே இரண்டு ஆண் உருவங்கள் சண்டையிடுவது போன்றுள்ளனர். கீழே மூன்று ஆண்கள் உள்ளனர்.
20. பெண் தெய்வம் ஒன்று சூலத்தை ஏந்தியபடி தாக்குவதற்குப் பாய்ந்து செல்லும் காட்சி அமைந்துள்ளது. இத்தெய்வத்தைத் தொடரும் வீரப்பெண்களும் காட்டப்பட்டுள்ளனர்.
21. இராமன் அம்பெய்தும் காட்சி.
22. சிதைந்துள்ளது.
23. உருவங்களின் கால்கள் மட்டும் தெரிகின்றன. காட்சியை அடையாளம் காண இயலாதவாறு சிதைவுற்றுள்ளது.
24. மேலே ஆண் ஒருவர் அமர்ந்துள்ளார். கீழே நால்வர் உள்ளனர். நடுவில் பலகை போன்ற தடுப்பில் இவ்விரு காட்சிகளும் பிரிக்கப்பட்டுள்ளன.

25. சிதைந்துள்ளது.
26. பத்மபீடத்தின் மீது பத்மாசனத்தில் நான்கு திருக்கைகளுடன் ஆண்தெய்வம் அமர்ந்துள்ளது. முகம் சிதைந்துள்ளது. முன்னிரு கைகளில் இடது யோக முத்திரையிலும், வலது கையை உயர்த்தியபடியும் உள்ளது. வலதுகை காட்டும் முத்திரையை அடையாளம் காண முடியவில்லை. பின்னிரு கைகளில் உள்ள ஆயுதங்களும் பொரிந்துள்ளன. எனவே இக்கடவுள் யாரென்று தெரியவில்லை. இருபுறமும் அடியவர்கள் நிற்கின்றனர்.
27. அரக்கி போன்ற பெண் ஒருத்தி கீழே விழுந்து கிடக்கிறாள். மேலே ஆண் உருவம் ஒன்று பறந்த நிலையில் காணப்படுகிறது. மற்ற உருவங்கள் தெளிவில்லை.
28. ஆண் பெண் இருவரிடையே குழந்தை ஒன்று நின்றபடி காட்டப்பட்டுள்ளது. குழந்தையைக் கைகளால் அணைத்தவாறு அவர்கள் அமர்ந்துள்ளனர். ஆணின் பின்னால் முனிவர் ஒருவர் உள்ளார். பெண்ணின் அருகிலும் சிலர் உள்ளனர். இக்காட்சிக்குக் கீழே நான்கு உருவங்கள் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. தசரதன் கோசலையோடு குழந்தை இராமனைக் கொஞ்சிமகிழும் காட்சியாக இது இருக்கலாம்.
29. உருவங்கள் தெரியவில்லை. சிற்பம் சிதைந்துள்ளது.
30. சிதைந்துள்ளது.
31. பீடத்தின் மேல் ஆணும் பெண்ணும் அமர்ந்திருக்கும் காட்சி. முகம் சிதைந்துள்ளது. ஆண் இடதுகாலைத் தொங்கவிட்டு, வலது காலை மடக்கி, உடலைச் சாய்த்து, திரிபங்கமாக அமர்ந்திருக்கிறார். இரண்டு கைகள் கொண்டவராய் வலதுகையை உயர்த்தியும், இடதுகையை இடதுதொடையில் வைத்தும் உள்ளார். பெண்ணின் வலது கை ஊன்றப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இடது கை மற்றும் கால்கள் சிதைந்துள்ளன.
32. ஓர் உருவம் மட்டும் தெரிகிறது. அது அடையாளம் தெரியவில்லை. மற்றவை சிதைந்துள்ளன.
33. சிதைவுபட்டுள்ளது.

34. சிதைந்துள்ளது.

35. தாங்குதளத்தின் தென்புறத்தில் அமைந்துள்ள ஒரு சிற்பம் வாலி சுக்ரீவ சண்டைக் காட்சியாகும். இருவரின் முகமும் சிதைந்துள்ளன. இருவரும் ஒருவரையொருவர் எதிரெதிராக நின்று கொண்டு ஒரு காலை நிலத்தில் ஊன்றியும், மற்றொரு காலைத் தொடைவரை மடக்கியும் வைத்தவாறு, ஒரு கையை இடுப்பில் வைத்தும், மற்றொரு கையை எதிராளியின் கையோடு பிணைத்தும் சண்டையிடுகின்றனர். இருவரும் சமஅளவு உயரம், உருவமைப்புக் கொண்டவராய்க் காட்டப்பட்டுள்ளனர். மடக்கியுள்ள இருவரின் கால்களின் நடுவே குரங்கு முகம் உள்ள மற்றொரு உருவம் உடலை முன்னோக்கியும், தலையைப் பின்னுக்குத் திருப்பியும் வைத்துவாறு இயக்க நிலையில் உள்ளது. இவ்வுருவம் அங்கதனாயிருக்கலாம்.

36. வாலி-சுக்ரீவ சண்டையில் சுக்ரீவனுக்கு உதவுவதாக வாக்களித்த இராமன் மறைந்திருந்து வாலியைக் கொல்வதற்கு அம்பெய்துகிறார். அவர் உடலின் பின்புறம் காட்டப்பட்டுள்ளது. அருகில் இலக்குவன் நிற்கிறார். இக்காட்சியை நோக்குகிறார்.

37. இராமன், இலக்குவன் கையில் ஏந்திய வில்லுடன் நிற்க, இராமனின் காலுக்குக் கீழே உருவம் ஒன்றுள்ளது. சிதைந்துள்ள இவ்வுருவம் அனுமனாயிருக்கலாம்.

38. அடுத்துள்ள சிற்பத்தில் மூன்று காட்சிகள் சிற்பங்களாக அமைந்துள்ளன. பறக்கும் நிலையில் உள்ள அனுமனின் இரு தோள்களிலும் இராமனும் இலக்குவனும் அமர்ந்துள்ளனர். இது போரின் நிகழ்வில் ஒன்றாகும்.

அடுத்த காட்சி, முனிவரிடம் ஆசிபெறும் இராமலக்குவன். இது போருக்கான நன்நிமித்தம் கேட்கும் நிகழ்வாகத் தெரிகிறது. இதனையே இத்தொகுதியில் முதல் காட்சியாகக் கொள்ள வேண்டும்.

இச்சிற்பத்தில் முனிவர் வேடத்தில் உள்ளவர் இராமாயணக் கதைப்படி இராவணனாய் இருக்கவேண்டும். மூன்றாவது

காட்சியாகக் கீழே மூன்று பேர் உள்ளனர். அமர்ந்துள்ள ஒருவரிடம் இருவர் ஆலோசிப்பதாக இக்காட்சி அமைந்துள்ளது. இதில் மூவருடைய உருவமைதியும் ஒத்ததாய்க் காட்டப்பட்டுள்ளன.

39. பருத்த உடலமைப்புக் கொண்ட அரக்கன் ஒருவனை இராமனும், இலக்குவனும் கொல்வதற்காக இருபுறமும் அவன் கைகளைப் பிடித்தபடியுள்ளனர். சகோதரர் இருவரின் இடையே நேராகக் காட்டப்பட்டுள்ள பகைவன் இந்திரஜித்தாய் இருக்கலாம். இருபுறமும் நின்று சண்டையிடும் அண்ணன் தம்பியரில் ஒருவருக்கு உருவம் நேராகவும், மற்றொருவருக்குப் பின்புறமுமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட இராமாயணப் புடைப்புச் சிற்பங்கள் வடக்கிலிருந்து தெற்காக வரிசைப்படுத்தப்பட்டு இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பக் காட்சிகளில் பல புராணக்கதைப்படி அமைக்கப்பட்டிருந்தாலும், சிற்ப அமைவுகளில் கதைத் தொடர்ச்சியைக் காணவியலவில்லை. அழகுற வடிக்கப்பட்ட புள்ளமங்கை இராமாயணச் சிற்பங்களும் இதே நிலையைத்தான் பெற்றிருக்கின்றன.

ஆயினும் முற்காலச் சோழர்களின் இக்கலைப்பாணியில் அவர்களின் கற்றளிகளில் அமைந்த அதிட்டான இராமாயணப் புடைப்புச் சிற்பங்களில் நீக்கமற இடம்பெற்றிருக்கும் வாலி-சுக்ரீவ சண்டைக்காட்சி, இராமன் அம்பெய்தல், சீதையை இராவணன் தூக்கிச் செல்லுதல், விசுவாமித்திரரோடு இராம, இலக்குவன் போன்ற காட்சிகள் இங்கும் அமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

# ఎల్లాంబ్లోడీబి

**I. கல்வெட்டுகள், செப்பேடுகள் - தமிழ்**

1. கல்வெட்டு ஆண்டு அறிக்கை எண். 282 முதல் 303 வரை, 1901
2. பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக்கழகம், சென்னை. 1966

**II. கல்வெட்டுகள், செப்பேடுகள் - ஆங்கிலம்**

1. Nagasamy, R. Tirutani Velancheri Copper Plates, Dept. of Archaeology, Govt. of Tamilnadu, Chennai, 1980
2. S.I.I. Vol. VII

**III. ஆய்வுநூல்கள் - தமிழ்**

1. கைலாசபதி, க. பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1999
2. நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ. சோழர்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பி லிட்.., சென்னை, 2009
3. சதாசிவ பண்டாரத்தார், தி.வை. பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2008
4. கரோஷிமா, நொபொரு. வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமூகம், தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 1995
5. ஸ்ரீதர், தி.ஸ்ரீ. மேல்பாடி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2009
6. சந்திரமூர்த்தி, மா. தமிழ்நாட்டுச் சிவாலயங்கள், தொகுதி-2, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004
7. பாலசுப்ரமணியம், குடவாயில். தஞ்சாவூர், திருவாவடுதுறை ஆதினம், திருவாவடுதுறை, 1995
8. கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், தமிழ்நாடு அரசு வெளியீடு, 1978
9. மூவோ துப்ருயல், திராவிடர்க் கட்டடக்கலை மரபு, ரிஷபம் பதிப்பகம், சென்னை, 1999
10. நாகசாமி, இரா., சந்திரமூர்த்தி, மா., தமிழகக் கோயிற்கலைகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2010

**IV. ஆய்வுநூல்கள் - ஆங்கிலம்**

1. Burton stien, Peasant State and Society in Medieval South India, Oxford University Press, Delhi, 1980
2. Sundaram, J. Land System in Tamilnadu, Kalaprakasam, New Delhi, 2009
3. Jha, D.N. Indian Society Historical Probings, People Publishing House, New Delhi, 1974
4. Subbarayalu, Y. Political Geography of Chola Country, Dept. of Archaeology, Govt. of Tamilnadu, 1973
5. Hermann kulke, The State A.D.1000-1750, Oxford University Press, Delhi, 1987
6. Swaminathan, S. The Early Cholas, History, Art and Culture, Sharada Publishing House, Delhi, 1998.

**V. ஆய்வேடு - தமிழ்**

1. சசிகலா, கோ. புள்ளமங்கை - ஓர் ஆய்வு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2010



**VII. இலக்கியம்**

1. பன்னிருதிருமுறை, வர்த்தமானர் பதிப்பகம், சென்னை. 2009
2. சுப்ரமணியன், ச.வே., கம்பஇராமாயணம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2008
3. சங்க இலக்கியம், புறநானூறு, அகநானூறு, மதுரைக்காஞ்சி


**VIII. அகராதி**

1. தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு, 1985
2. ஜெயதேவன், வ. அணிகலன்கள் அகராதி, சென்னைப் பல்கலைக் கழகம் வெளியீடு, 2007


# நிழற்படங்கள்


லிங்கமும் நந்தியும்




கடைமுடி அம்மன்




பிரம்மசாஸ்தா




வீணாதர தக்ஷிணாமூர்த்தி




நான்முகன்






நிலைவாயில் தூண் கல்வெட்டுகள்




அர்த்தமண்டப முகப்பு




கோட்ட அமைவும், அரைத்தூண்களும்



கோயில் தென்புறத் தோற்றம்





கோட்ட அமைவும், அரைத்தூண்களும்




விமான தாங்குதளம்

# சிவ வடிவங்கள்



கஜாரி




காமாரி




காலாரி



நக்கன்




கங்காளர்



கிராதார்ச்சுனர்








ஆடல்வல்லான்


தாங்குதள தாய்த்தெய்வங்கள்






தாங்குதள தாய்த்தெய்வங்கள்





தாங்குதள தாய்த்தெய்வங்கள்








தாங்குதள தாய்த்தெய்வங்கள்


# இராமாயண புடைப்புச் சிற்பங்கள்



விசுவாமித்திரர் வருகையும்




அசுரர் அழிவும்




மந்தரை உபதேசமும்



கைகேயி வரமும்



கானகம் ஏகுதலும்



கரண் வதமும்




சூர்ப்பனகை மூக்கறுப்பு




சீதை கடத்தல்



வாலி வதை



இராம-இராவண யுத்தம்



புத்தர்

WE THE HERITAGE TREASURE

- Provide conserving, restoring, preserving of Heritage Treasures for posterity.
- Conduct exhibitions in the field of Archaeology and Heritage in schools, colleges, reputed companies and other places as decided by the Trust.
- Conduct Seminars/Exhibitions of Heritage/Archaeological importance.
- Publish Books/CDs on temples and heritage sites, and also publish articles to create awareness about heritage and culture.
- Organize and conduct awareness campaigns in preservation of Heritage sites and old temples, and also about their cultural and historical values.
- Protect and conserve our living and built heritage, both tangible and intangible by undertaking necessary measures.
- Copying unpublished inscriptions and publishing them.
- Conduct workshops, seminar and organize lectures, exhibitions to showcase the rich and divergent cultural and linguistic heritage of our country
- Guide research students for Ph.D. Programmes, and publishing their work.

We are proud to introduce **Dr. G. Sasikala,** the Co-author of this book, who is young, energetic scholar in the field of Tamil, Archaeology and also specialized in Epigraphy and Temple study. As a part of our objective of encouraging the budding research scholars and authors & in connection with Mahamaham festive occasion we are publishing the "Cholar Kalai Koilgal", series of books on Chola period temples with archaeological evidences.

